பக்கங்கள்: பதினான்கு

Registered as a Newspaper

# உதயன்

விலை ரூபா 8.00

www.uthayan.com

கடர் 18 வள்ளுவர் ஆண்டு 2034 ஆவணி 31 புதன்கிழமை (17-09-2003) UTHAYAN - A Lively National Tamil Daily கதிர்:293

# புரிந்துணர்வு ஒப்பந்தம் ரத்தாகுமா?

# நவம்பர் 6ஆம் திகதி வழக்கு விசாரணை!

## மூன்று நீதியரசர்கள் கொண்ட விசேட மேன்முறையீட்டு மன்றில்

கொழும்பு,செப்ரெம்பர்17

**அரசுக்கும் விடுதலைப் புலிகளுக்குமிடையே செய்துகொள்ளப்பட்ட புரிந்துணர்வு ஒப்பந்தத்தை ரத்துச் செய்யக்கோரி தாக்கல் செய்யப்பட்ட மனுக்கள் மூன்று நீதியரசர்களைக் கொண்ட விசேட மேன்முறையீட்டு நீதிமன்றம் முன் விசாரணை செய்யப்படும். இந்த விசாரணை எதிர்வரும் நவம்பர் மாதம் 6ஆம் திகதி ஆரம்பமாகும்.**

நேற்றுக் கூடிய மேன்முறையீட்டு நீதிமன்றம் இதற்கான தீர்மானத்தை மேற்கொண்டது. இவ்விசாரணையிலேயே புரிந்துணர்வு ஒப்பந்தத்தின் எதிர்காலம் தங்கியுள்ளது என்று சட்டத்துறை வட்டாரங்கள் கருதுகின்றன.

மேன்முறையீட்டு நீதிமன்றத்தின் தலைவரான நீதியரசர் ஷிரானி திலகவர்த்தன, நீதியரசர்களான டி.விஜேரத்தின, கே.ஸ்ரீபவன் ஆகியோர் முன்னிலையில் இவ்விசாரணை நடைபெறும்.

ஜே.வி.பி, சிஹல உறுமய, சிங்கள தேசிய சங்கம் ஆகியவை புரிந்துணர்வு ஒப்பந்தத்துக்கு எதிரான மனுக்களைத் தாக்கல் செய்திருக்கின்றன.

புரிந்துணர்வு ஒப்பந்தம் அரசியல் சட்டத்திற்கு முரணானது என்று கூறி அதனை ரத்துச்செய்ய உத்தரவிடுமாறு மனுதாரர்கள் கோரியிருக்கின்றனர்.

இம்மனுக்களில் எதிர் மனுதாரர்களாக பிரதமர் ரணில் விக்கிரமசிங்க, விடுதலைப் புலிகளின் தலைவர் வே. பிரபாகரன், அமைச்சரவை உறுப்பினர்கள் ஆகியோர் குறிப்பிடப்பட்டிருக்கின்றனர். (ஓ)



நேற்று கிளிநொச்சி சென்றிருந்த இலங்கைப் போர்நிறுத்தக் கண்காணிப்புக் குழுவின் தலைவர் ஜெனரல் ட்ரிக்வே டெலிவ்சனை விடுதலைப் புலிகளின் அரசியல்துறைப் பொறுப்பாளர் சு.ப.தமிழ்ச்செல்வன் கைலாகு கொடுத்து வரவேற்கிறார்.

## தமிழீழ மீட்புநிதிக் கடன் மீளளிப்பு முகமாலையில் நேற்று ஆரம்பம்

யாழ்ப்பாணம்,செப்.17

யாழ்ப்பாணப் பிரதேச மக்களுக்கு தமிழீழ மண் மீட்புநிதிக் கடன் மீளளிக்கும் பணி நேற்று முகமாலையில் தமிழீழ நிதித்துறையினரால் ஆரம்பித்து வைக்கப்பட்டுள்ளது. இப்பணி இன்றும் நாளையும் தொடர்ந்து இடம்பெறும்.

முகமாலை சோதனைச் சாவடியிலிருந்து சுமார் 500 மீற்றர்கள் தொலைவில் அமைக்கப்பட்டுள்ள சிறப்புப் பணியகத்தில் வைத்து மீட்புநிதிக் கடன் மீளளிக்கப்படுகிறது.

நேற்று நல்லூர், யாழ்ப்பாணம், உடுவில், கோப்பாய் ஆகிய உதவி அரச அதிபர் பிரிவுகளைச் சேர்ந்தவர்களுக்கு கடன் மீளளிப்பு நடைபெற்றுள்ளது. (14ஆம் பக்கம் பார்க்க)

## காங்கேசன்துறைக் கடலில் 5இந்திய மீனவர்கள் கைது!

யாழ்ப்பாணம்,செப்.17

இலங்கைக் கடற்பரப்பிற்குள் அத்துமீறி நுழைந்ததாக தமிழகத்தைச் சேர்ந்த 5 பேரை இலங்கைக் கடற்படை நேற்றுமுன்தினமிரவு பிடித்தது. காங்கேசன்துறைக் கடற்பரப்பில் வைத்துப் பிடிக்கப்பட்ட இவர்களது படகும், அதிலிருந்த 42 வலைகளும், 100 லீற்றர் டீசலும் கடற்படையினரால் கைப்பற்றப்பட்டன. பின்னர் இவர்கள் காங்கேசன்துறைப் பொலீஸாரிடம் ஒப்படைக்கப்பட்டனர். நேற்று இந்த 5 பேரும் மல்லாகம் நீதிமன்றத்தில் காங்கேசன்துறைப் பொலீஸாரால் ஆஜர்படுத்தப்பட்டனர். இது (14ஆம் பக்கம் பார்க்க)

## பிக்குகள் முன்னணி இன்று சத்தியாக்கிரகப் போராட்டம்

கொழும்பு,செப்.17

தேசிய பிக்குகள் முன்னணி, அரசின் சமாதான நடவடிக்கைகளுக்கு எதிராக மேற்கொள்ளும் சத்தியாக்கிரகப் போராட்டம் இன்று நடைபெறும். கொழும்பு உட்பட பல இடங்களில் இன்று பிற்பகல் 4மணிக்கு இப்போராட்டத்தை நடத்த ஏற்பாடுகள் செய்யப்பட்டிருக்கின்றன.

கொழும்பில் புறக்கோட்டை அரச மரத்தடிச் சந்தியில் இப்போராட்டம் மேற்கொள்ளப்படும்.

பதுளை நகரில் இன்று பிற்பகல் 3மணிக்கு இப்போராட்டம் நடத்தப்படும். புத்தபிக்குகள் இப்போராட்டத் (14ஆம் பக்கம் பார்க்க)

## கண்காணிப்புக் குழுத் தலைவர் தமிழ்ச்செல்வனை சந்தித்து பேச்சு

யாழ்ப்பாணம்,செப்.17

இலங்கை போர்நிறுத்தக் கண்காணிப்புக்குழுத் தலைவர் மேஜர் ஜெனரல் ட்ரிக்வே ரெலிவ்சன் நேற்று கிளிநொச்சியில் விடுதலைப் புலிகளின் அரசியல்துறைப் பொறுப்பாளர் சு.ப. தமிழ்ச்செல்வனைச் சந்தித்துப் பேசினார்.

முன்னதாக நேற்று பிற்பகலில் இலங்கை விமானப்படை ஹெலி கொப்டரில் ரெலிவ்சன் கிளிநொச்சி வந்தார்.

அவருடன் கண்காணிப்புக் குழுவின் செயற்பாட்டு மேலாளர் ரிமோ ஏக்ரல், ஊடகப் பேச்சாளர் செல்வி அக்னஸ் பிரகடோதிர் உட்பட 5பேர் உடன் வந்திருந்தனர்.

(14ஆம் பக்கம் பார்க்க)

## ஹெல்கிஸன் நாளை வன்னி செல்வார்!

தமிழீழ விடுதலைப் புலிகளின் பிரதிநிதிகளுடன் நோர்வே துணை வெளிவிவகார அமைச்சர் விடர் ஹெல்கிஸன் நாளை வியாழக்கிழமை சந்திப்பொன்றை மேற்கொள்ளவுள்ளார்.

இன்று கொழும்புக்கு வருகை தரும் ஹெல்கிஸன், நாளை கிளிநொச்சிக்குச் செல்லவுள்ளார். இவருடன் நோர்வேயின் சிறப்புத் தூதுவர் எரிக் சொல்ஹெய்மும் வருகிறார். (ஏ-9-5)

## வவுனியாவில் எலும்புக்கூடு மீட்பு!

வவுனியா,செப்.17

வவுனியா, வைரவப்புளியங்குளத்துக்குள் இருந்து மனித எலும்புத் தொகுதி ஒன்று நேற்றுக் கண்டெடுக்கப்பட்டது. குளத்தில் நீர்மட்டம் வெகுவாகக் குறைந்துள்ள நிலையில், குளக்கரையை அண்மித்த (14ஆம் பக்கம் பார்க்க)

### தொடரும் அவலங்களில் இதுவுமொன்று

## பாதை திறக்கக் காத்திருந்தவேளையில் முகமாலையில் பெண்ணுக்கு பிரசவம்!

தென்மராட்சி,செப்.17

முகமாலையில் தரைப்பாதை திறக்கும்வரை காத்திருந்த வேளையில் கர்ப்பிணிப்பெண் ஒருவர் நடுவீதியில் குழந்தையைப் பிரசவித்தார். சமாதானச் சூழ்நிலையிலும் தொடரும் அவலங்களில் ஒன்றான இச்சம்பவம் நேற்றுமுன்தினம் திங்கட்கிழமை அதிகாலை இடம்பெற்றது.

இத்தாவிலைச் சேர்ந்த வினோதினி கிருபாகரன் (வயது-26) என்பவருக்கு பிரசவவலி ஏற்பட்டது. இதனையடுத்து பளையிலிருந்து வாகனம் (14ஆம் பக்கம் பார்க்க)

## பொங்குதமிழ் எழுச்சிவாரம் ஆரம்பம்


வவுனியா,செப்.17

வவுனியாவில் எதிர்வரும் 24ஆம் திகதி இடம்பெறவுள்ள பொங்குதமிழ் நிகழ்வையொட்டி இன்று முதல் எழுச்சி வாரம் கொண்டாடப்படுகிறது.

இந்த எழுச்சிவாரத்தில் அலுவலகங்கள், பாடசாலைகள் போன்ற இடங்களிலும் தினமும் அகவணக்கம் மற்றும் பொங்குதமிழ் கருத்துரை என்பன இடம்பெறவுள்ளதாக ஏற்பாட்டாளர்கள் தெரிவித்தனர். இதே சமயம் பொங்குதமிழ் பானை பவனி நேற்று பூங்கா வீதியில் உள்ள பொங்குதமிழ் அலுவலகத்தில் ஆரம்பமானது.

அவசரமாக காசு தேவைப்படுகின்றதா?

இப்போது தேசிய சேமிப்பு வங்கியின் ரன் சஹன அடகுச்சேவை



NSB தேசிய சேமிப்பு வங்கி

- ஒரு தங்க சவரனுக்கு கூடுதலான பணம்
- தவணை அடிப்படையில் திரும்ப செலுத்தும் வசதி
- இரகசியம் பேணல் மற்றும் துரித சேவை
- வருடாந்தம் 16% குறைந்த வட்டி
- கணனி மூலம் பரிசோதனை

NSB

தேசிய சேமிப்பு வங்கியின் தங்கமான சலுகை

# 'தேன்குழல்' தின்பண்டங்களில் புற்றுநோய் ஏற்படுத்தும் பதார்த்தம்!

## ஆய்வுகளில் உறுதிப்படுத்தப்பட்டுள்ளது

யாழ்ப்பாணம்,செப்.17

குடாநாட்டில் விற்பனை செய்யப்படும் 'தேன்குழல்' என்ற தின்பண்டத்தால் புற்றுநோய் ஏற்படலாம் என்று கடும் எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

கண்ணைக் கவரும் விதத்தில் சிவப்பு நிறத்தில் பரவலாகத் தின்பண்டக் கடைகள் எங்கும் இந்தத் 'தேன்குழல்' கிடைக்கிறது.

இதற்கு சிவப்பு நிறத்தை ஊட்டுவதற்குப் பயன்படுத்தப்படும் நிறமூட்டிகளில்(Clouring) புற்றுநோயை ஏற்படுத்தக்கூடிய நிறமூட்டிகள் சேர்க்கப்படுவதை அரசாங்க உணவுக் கட்டுப்பாட்டு இரசாயனக் கூடம் உறுதிப்படுத்தியுள்ளது.

அண்மையில், நயினாதீவு நாகபூஷணி அம்மன் ஆலயத் திருவிழாவின்போது அப்பகுதியில் வியாபாரத்தில் ஈடுபட்டிருந்த தின்பண்ட வியாபாரிகள் மூவரிடம் இருந்து பெறப்பட்ட 'தேன்குழல்' மற்றும் வேறு இனிப்புப் பண்டங்களை யாழ்ப்பாண உணவு மருந்துப் பரிசோதகர் பகுப்பாய்விற்காக அரசாங்க உணவுக் கட்டுப்பாட்டு இரசாயனக் கூடத்திற்கு அனுப்பி வைத்திருந்தார்.

இவை அரசாங்கப் பகுப்பாய்வாளரினால் பகுப்பாய்விற்குட்படுத்தப்பட்டன. இதன்போது தடைசெய்யப்பட்ட நிறமான, புற்றுநோயை உண்டுபண்ணக்கூடிய 'றொடமின் - பி' (Rhod-amine-B) எனும் நிறப் பதார்த்தத்தைப் பயன்படுத்தி 'தேன்குழல்' தயாரிக்கப்படுவது உறுதிப்படுத்தப்பட்டுள்ளது. இதைவிட, இந்த நிறமூட்டி சர்பத் மற்றும் வேறு இனிப்புப் பண்டங்கள் தயாரிப்பதற்குப் பயன்படுத்தப்பட்டு வருவதாக யாழ்ப்பாண உணவு மருந்துப் பரிசோதகர் தெரிவித்தார்.

'தேன்குழலும்' வேறு சில இனிப்புப் பண்டங்களும் நல்லூர், செல்வச் சந்நிதி ஆகிய ஆலயச் சூழலிலும் விற்பனைக்கு வைக்கப்பட்டிருந்த போது பெறப்பட்டு பகுப்பாய்வுக்காக கொழும்பிற்கு அனுப்பிவைக்கப்பட்டுள்ளதாகவும் அவர் மேலும் தெரிவித்தார்.

புற்றுநோயை உண்டுபண்ணக்கூடிய நிறம் பயன்படுத்தப்பட்டு 'தேன்குழல்' என்னும் இனிப்புப் பண்டம் தயாரித்து விற்பனை செய்த மூன்று வியாபாரிகளுக்கு எதிராக சட்ட நடவடிக்கை எடுக்கப்படவுள்ளதுடன் இந்நிறத்தைப் பயன்படுத்துவதைத் தவிர்ப்பதற்கான நடவடிக்கைகளும் யாழ்ப்பாண உணவு மருந்துப் பரிசோதகரால் மேற்கொள்ளப்படவுள்ளது. (ம-8)

# சு.க. எம்.பிக்கள், அமைப்பாளருடன் ஜனாதிபதி இன்று விசேட கூட்டம்

கொழும்பு,செப்.17

சுதந்திரக்கட்சி நாடாளுமன்ற உறுப்பினர்கள், தொகுதி அமைப்பாளர்கள் கலந்துகொள்ளும் விசேட கூட்டமொன்று இன்று பிற்பகல் 3 மணிக்கு ஜனாதிபதி மாளிகையில் நடைபெறும்.

ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க தலைமையில் நடைபெறும் இந்த விசேட கூட்டத்தில் தவறாது கலந்துகொள்ளுமாறு நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கும், தொகுதி அமைப்பாளர்களுக்கும் அறிவுறுத்தப்பட்டிருக்கிறது.

சுதந்திரக்கட்சியின் எதிர்கால அரசியல் நடவடிக்கைகள் குறித்து ஜனாதிபதி இக்கூட்டத்தில் விளக்குவார் என எதிர்பார்க்கப்படுகிறது.

இதற்கிடையே, ஜனாதிபதி சந்திரிகாவுக்கும் பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவுக்கும் இடையே விசேட சந்திப்பொன்று அடுத்து ஓரிரு தினங்களில் நடைபெறலாம் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

எதிர்வரும் ஐ.நா.பொதுச் சபைக் கூட்டம், மலேஷியாவில் தான் மேற்கொண்ட பயணம் ஆகியவை தொடர்பாக பிரதமர் இச்சந்திப்பில் விளக்குவார் எனத் தெரிகிறது. (ஒ)

# சமாதானச் செயலகத்தின் ஊடகப்பேச்சாளர் கைரிக

கொழும்பு,செப்.17

அரசின் சமாதானச் செயலகத்தின் அதிகாரபூர்வ ஊடகப் பேச்சாளராக அரசு ஊடகச் செயலாளரான கைரிக பேருசிங்க நியமிக்கப்பட்டிருக்கிறார். பிரதமரின் மேலதிகச் செயலாளரான கே.பத்மநாதன் சமாதானச் செயலகத்தின் பிரதம நிர்வாக அதிகாரியாக நியமிக்கப்பட்டிருக்கிறார்.

பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவின் பணிப்பின் பேரிலேயே இந்நியமனங்கள் மேற்கொள்ளப்பட்டிருக்கின்றன.

இந்நியமனங்களையடுத்து, அரசின் சமாதான நடவடிக்கைகள் குறித்து அறிக்கைகளையோ, தகவல்களையோ வெளியிடும் அதிகாரம் சமாதானச் செயலகத்தின் ஊடகப் பேச்சாளரிடம் மட்டுமே இருக்கும்.

# அஷ்ரப் நினைவுதினம் அம்பாறையில் அனுஷ்டிப்பு

முஸ்லிம் தலைவர் எம்.எச்.எம். அஷ்ரப்பின் மூன்றாவது நினைவு தினம் நேற்று நாடளாவிய ரீதியில் அனுஷ்டிக்கப்பட்டது.

அம்பாறை மாவட்ட முஸ்லிம்கள் பள்ளிவாசல்களிலும் மற்றும் பல இடங்களிலும் கத்தமுல் குர்ஆன், துஆ பிரார்த்தனை ஆகிய சமய நிகழ்ச்சிகளில் ஈடுபட்டதோடு நேற்றைய தினத்தை துக்கதினமாகவும் அனுஷ்டித்தனர்.

நேற்று கல்முனை, மருதமுனை, நற்பிட்டிமுனை, கல்முனைக்குடி, சாய்ந்தமருது, மாளிகைக்காடு, மாவடிப்பள்ளி, சம்மாந்துறை, நிந்தவூர், ஒலுவில், பாலமுனை, அட்டாளைச்சேனை, அக்கரைப்பற்று, பொத்துவில், இறக்காமம், வரிப்பத்தான்சேனை ஆகிய இடங்களில் கடைகள் எதுவும் திறக்கப்படவில்லை. வீதி எங்கும் வெள்ளைக் கொடிகள் பறக்கவிடப்பட்டிருந்தன. அரசு அலுவலகங்கள், வங்கிகள் என்பனவும் மூடப்பட்டிருந்தன, பாடசாலைகளில் மாணவர் வருகை குறைந்திருந்தது. காலை 10மணியளவில் பாடசாலைகள் மூடப்பட்டுவிட்டன. (ஒ)

# ஹாலி-எல வித்தியாலய வளவில் கைக்குண்டு! கண்டெடுத்த மாணவன் எறிய வெடித்தது!!

பதுளை,செப்.7

வித்தியாலய வளவில் மாணவன் ஒருவன் கண்டெடுத்த கைக்குண்டை வீசி எறிந்ததால் அது பாரிய சத்தத்துடன் வெடித்துச் சிதறியது. இச்சம்பவம் ஹாலி - எல தமிழ் மகாவித்தியாலயத்தில் நேற்றுமுன்தினம் நடைபெற்றது.

குண்டுவெடித்தபோதும் தெய்வாதீனமாக மாணவ, மாணவிகள் எவரும் காயமடையவில்லை.

வித்தியாலய இடைவேளையின் போது ஆசிரிய விடுதிக்கும் வித்தியாலய பிரதான மண்டபத்திற்குமிடையிலுள்ள பற்றைக்குள்ளிலிருந்து பொலித்தீன் பையினால் சுற்றப்பட்ட பந்து போன்ற இக்குண்டு, ஒரு மாணவனால் கண்டெடுக்கப்பட்டது. அது குண்டு என்பதை அறியாத அம்மாணவன் அதை வீசி எறிந்திருக்கிறான்.

இக்குண்டுவெடிப்பு குறித்து வித்தியாலய அதிபர் எஸ்.யோகேஸ்வரநாதன், வலயக் கல்விப் பணிப்பாளரின் கவனத்துக்கு கொண்டுவந்துள்ளார். இதையடுத்து பதுளை பொலீஸ் நிலையத்திற்கும் புகார் செய்யப்பட்டது.

பொலீஸார் வித்தியாலயத்திற்கு விரைந்து விசாரணையை ஆரம்பித்தனர். பன்றி வேட்டைக்கே அக்குண்டு வைக்கப்பட்டிருக்கலாம் எனத் தெரிய வருகிறது.

இதுகுறித்து எவரும் கைதுசெய்யப்படவில்லை. தொடர்ந்தும் பொலீஸார் தீவிர புலனாய்வுகளை நடத்தி வருகின்றனர்.

# விளையாட்டு நிகழ்வுகள்

யாழ்ப்பாணம்,செப்.7

கைதடி மத்தி வளர்மதி விளையாட்டுக்கழகம், கைதடி மற்றும் நாவற்குழி பிரதேசத்திற்குட்பட்ட கழகங்களுக்கிடையே நடத்திவரும் தாச்சிச் சுற்றுப்போட்டியின் அரையிறுதி ஆட்டங்கள் நாளை வியாழக்கிழமை பிற்பகல் 4.30 மணிக்கு கழக மைதானத்தில் நடைபெறவுள்ளன.

இவ்வாட்டங்களில் பங்குபற்றும் அணிகள் பற்றிய விவரம் வருமாறு:-

★ கைதடி குமாரநகர் வி.க.எதிர் கைதடி சரஸ்வதி வி.க.

★ கைதடி துர்க்கா வி.க. எதிர் கோகிலாக்கண்டி மகாவிஷ்ணு வி.க. (ஒ-5-75)

☆ ☆ ☆

யாழ்ப்பாணம்,செப்.7

வடமராட்சி மாவீரர் துயிலும் இல்ல புனரமைப்புக் குழு யாழ்.மாவட்டக் கழகங்களுக்கிடையில் நடத்திவந்த உதைபந்தாட்டச் சுற்றுப் போட்டியின் இறுதி ஆட்டம் இன்று புதன்கிழமை பிற்பகல் 3 மணிக்கு வதிரி பொமேர்ஸ் விளையாட்டரங்கில் நடைபெறவுள்ளது.

இறுதி ஆட்டத்தில் வடமராட்சி சிவானந்தா விளையாட்டுக் கழகத்தை எதிர்த்து வலிகாமம் யங்ஹென்றீஸ் விளையாட்டுக்கழகம் மோதுகின்றது.

வடமராட்சி மாவீரர் துயிலும் இல்ல புனரமைப்புக் குழுத் தலைவர் சி.கணபதிப்பிள்ளை தலைமையில் இடம்பெறும் இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக தமிழீழ விளையாட்டுத் துறைப் பொறுப்பாளர் கிட்டப்பா கலந்துகொள்கிறார்.

கிளிநொச்சித் தெரிவு அணிக்கும் வடமராட்சித் தெரிவு அணிக்கும் இடையிலான காட்சி உதைபந்தாட்டப் போட்டியும் நடைபெறவுள்ளது. (ஒ-5-9)

☆ ☆ ☆

வலி.வடக்கு,செப்.17

கோப்பாய் கல்விக் கோட்டப் பாடசாலைகளுக்கிடையே நடைபெறும் உதைபந்தாட்டச் சுற்றுப்போட்டியில் இன்று புதன்கிழமை காலை 8.30 மணிக்கு உரும்பிராய் இந்துக் கல்லூரி மைதானத்தில் இடம்பெறும் ஆட்டங்களில் கலந்துகொள்ளவுள்ள அணிகள் விவரம் வருமாறு:-

**16 வயதுப் பிரிவு**

★ அச்சுவேலி இடைக்காடு மகா வித்தியாலயம் எதிர் உரும்பிராய் இந்துக் கல்லூரி.

★ ஊரெழு கணேசா வித்தியாலயம் எதிர் புத்தூர் ஆவரங்கால் நடராசா இராமலிங்கம் வித்தியாலயம்.

**18 வயதுப் பிரிவு**

★ புத்தூர் சோமஸ்கந்தக் கல்லூரி எதிர் ஊரெழு கணேசா வித்தியாலயம்.

★ நீர்வேலி அத்தியார் இந்துக் கல்லூரி எதிர் அச்சுவேலி இடைக்காடு மகாவித்தியாலயம். (ஒ-5-86)

☆ ☆ ☆

நல்லூர் கல்விக் கோட்டப் பாடசாலைகளுக்கிடையே நடைபெற்று வரும் உதைபந்தாட்டச் சுற்றுப்போட்டியில் இன்று புதன்கிழமை பிற்பகல் 1.30 மணி முதல் யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரி மைதானத்தில் இடம்பெறும் ஆட்டங்களில் கலந்துகொள்ளவுள்ள அணிகளின் விவரம் வருமாறு:-

**14 வயதுப் பிரிவு**

★ அரியாலை கனகரட்ணம் மத்திய மகாவித்தியாலயம் எதிர் கோண்டாவில் பரஞ்சோதி வித்தியாலயம்.

**16 வயதுப் பிரிவு**

★ அரியாலை கனகரட்ணம் மத்திய மகாவித்தியாலயம் எதிர் திருநெல்வேலி செங்குந்த இந்துக் கல்லூரி.

**18 வயதுப் பிரிவு**

★ யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரி எதிர் கோண்டாவில் இராமகிருஷ்ணன் வித்தியாலயம்.

★ திருநெல்வேலி முத்துத்தம்பி மகாவித்தியாலயம் எதிர் திருநெல்வேலி செங்குந்த இந்துக் கல்லூரி. (ஒ-5-85)

## தலதா மாளிகைக் குண்டு வெடிப்பு வழக்கு

# கொழும்பு நாலாம் மாடியில் வைத்து பொலீஸ் அதிகாரி என்னைத் தாக்கினார்!

## இரண்டாவது எதிரி சாட்சியம்

கண்டி,செப்.17

"இராணுவ உடையில் வந்தவர்கள் என்னை மூதூரில் 20-02-1998 இல் கைதுசெய்தனர். ரவீந்திரனும் அவருடைய மனைவி கமலாதேவியும் எங்கே என்று கேட்டனர்.

"எனக்குத் தெரியாது என்றேன். பெப்ரவரி 21ஆம் திகதி கொழும்பு குற்றப் புலனாய்வுப் பிரிவின் நாலாம் மாடிக்கு என்னைக் கொண்டுசென்ற பின் பொலீஸ் அதிகாரி பந்துல விக்கிரமசிங்க என்னைத் தாக்கினார். தட்டச்சுமூலம் தயாரிக்கப்பட்டிருந்த கடதாசியில் எனது கையொப்பம் பெறப்பட்டது."

இவ்வாறு கூறினார் கண்டி தலதா மாளிகை குண்டுவெடிப்புச் சம்பவம் தொடர்பாக குற்றம் சுமத்தப்பட்டுள்ள இரண்டாவது எதிரியான எம்.தர்மலிங்கம்.

25.01.1998ஆம் ஆண்டு தலதா மாளிகைமீது குண்டுத் தாக்குதல் நடத்தி உயிர்ச்சேதங்களையும் மற்றும் அனர்த்தங்களையும் ஏற்படுத்தியதாகக் கண்டி மேல்நீதிமன்றத்தில் தற்சமயம் இடம்பெற்றுவரும் வழக்கு விசாரணையின்போது சாட்சி எதிரிக் கூண்டில் இருந்தவாறே மேற்கண்டவாறு சாட்சியமளித்தார்.

கண்டி மேல்நீதிமன்ற நீதிபதி டி. எஸ்.ஸீ.லேக்கம் வலம் முன்னிலையில் இடம்பெறும் இந்த விசாரணையின் போது சாட்சி மேலும் கூறியதாவது:-

"எனது தொழில் வர்த்தகம், இந்த வழக்கில் முதலாவது எதிரியான ரவீந்திரனை எனக்கு ஆறுமாதங்களுக்கு முன்னரே தெரியும். அவர் புகையிலை வியாபாரி. வவுனியாவில் இருந்து புகையிலை கொண்டு வந்து தருவார். நான் நாள்கூலியாக அவருடன் பணிபுரிந்தேன்.

"மட்டக்களப்பிக்கும் புகையிலையைக் கொண்டுசெல்வோம். அங்கு இருநாள்கள் தங்கியிருந்தோம். 12 ஆம் திகதி கண்டிக்கு வந்தோம். இந்து கலாசார நிலையத்தில் தங்கிய நாம், புகையிலை வியாபாரத்திற்காக லொறி ஒன்றை விலைக்கு வாங்கியது தொடர்பாக பணத்தைக் கொடுக்க கடவத்தைக்குச் சென்றேன். ரவீந்திரனே என்னை அனுப்பினார்.

"பணத்தைக் கொடுப்பதற்கு உரியவர் அங்கு இல்லாத செய்தியை இந்து கலாசார நிலையத்துக்கு அறிவித்தேன். சேகர் என்பவரே இந்தச் செய்தியை தொலைபேசிமூலம் என்னிடம் இருந்து பெற்றார். ரவி எங்கே எனக் கேட்டபோது அங்கு அவர் இல்லை என்றார்.

"பின்னர் கொழும்பில் இருந்து இரவு 8 மணிக்கு மீண்டும் கண்டி வந்தேன். 15ஆம் திகதி தைப்பொங்கல் தினமாகையால் குளித்துவிட்டு கோயிலுக்குச் சென்றேன். பின்னர் ரவீந்திரனும் நானும் ரவியின் உறவினர்கள் பேராதனையில் இருப்பதாகக் கூறியதை அடுத்து, அவர்களைச் சந்திக்க அங்கு சென்றோம்.

"15ஆம் திகதி புகையிலை விற்ற பணத்தைப் பெற ஆட்டனுக்கு ரவி என்னை அனுப்பி வைத்தார். 17ஆம் திகதி அவரும் நானும் வெல்சிறி புராவுக்கு புகையிலையை எடுத்துச் சென்றோம். அங்கு 3,000 தேங்காய்களையும் மரக்கறிகளையும் வாங்கிக்கொண்டு மட்டக்களப்புக்குச் சென்றோம். மறுநாள் பேராதனைக்குப் புறப்பட்டோம். எம்மோடு கொண்டுவந்த தேங்காய்களை அங்கு விற்றோம். லொறியில் பின்னர் புகையிலை மாத்திரமே எஞ்சியிருந்தது.

"19ஆம் திகதி கல்முனைக்குச் சென்று நெல்லைக் கொள்வனவு செய்து மருதமுனையில் விற்றோம். 22ஆம் திகதி மீண்டும் கண்டிக்கு வந்தபொழுது எமது வாகனம் பழுதுபட்டுப்போய்விட்டது. பிபிலையில் இரவு தங்கி வாகனத்தைப் பழுது பார்த்தபின் கண்டி நோக்கி வரமுற்பட்டோம். பழுதுபட்ட வாகனத்தை ரவீந்திரனும் திருத்தினார்.

"எம்மோடு வந்த இராமச்சந்திரனைப் பேராதனை செல்வதற்காக கண்டி மணிக்கூண்டுக் கோபுரம் முன்பாக இறக்கிவிட்டோம். நானும் ரவீந்திரனும் கலாசார நிலையத்துக்கு வந்து வண்டியைப் பழுது பார்க்க சேகருடன் கராஜ் ஒன்றுக்குச் சென்றோம்.

"கண்டியை நோக்கி மட்டக்களப்பில் இருந்து வந்தவேளையில் 20 இடங்களுக்கு மேல் எமது வாகனத்தை வீதித் தடைமுகாம்களில் நிறுத்தி பரிசோதனை செய்தனர். 24ஆம் திகதி நான் மீண்டும் திருகோணமலை சென்றுவிட்டேன். திருத்தம் மேற்கொள்ளப்பட்டவேளையில் லொறியில் 5 புகையிலைக் கட்டுக்கள் மாத்திரமே இருந்தன.

"தலதாமாளிகைக் குண்டு வெடிப்புச் சம்பவத்துக்கும் எனக்கும் எந்தவித தொடர்பும் கிடையாது."

- இவ்வாறு கூறினார் எதிரி.

இந்த வழக்கில் அரச தரப்பில் பிடிவனேகபாகுவும் எதிரிகள் சார்பில் சட்டத்தரணி அ.விநாயகமூர்த்தியும் ஆஜராகி விசாரணைகளை நெறிப்படுத்த உதவினர். (ஒ)



விடுதலைப் புலிகள் வாழவேண்டுமென்றோ, ஆளவேண்டும் என்றோ ஆசைகொள்ளவில்லை. எமது மக்களின் நிரந்தரமான, சுபீட்சமான எதிர்காலம் கிடைக்குமானால் அனைவரும் மரணிக்கவும் தயாராக உள்ளோம்.

*- தியாகி திலீபன்.*

# ஜப்பானிய நிறுவனத்தில் ஊழியர் அட்டகாசம்
# ஆவணங்கள் எரிந்து நாசம்! மூவர் உயிரிழப்பு!!

நக்கோயா,செப்.17

ஜப்பானின நக்கோயா நகரிலுள்ள தனியார் நிறுவனம் ஒன்றினுள் கத்தி, வில்லு.அம்புகள் ஆகியவற்றுடன் நுழைந்த அந்த நிறுவனத்தின் ஊழியா ஒருவா் அந்தக் கட்டடத்தை தீயிட்டுக் கொளுததினாா்.

இதனால் மூவர் கொல்லப்பட்டனர்; 3 பேர் காயமடைந்தனர். கட்டடத்தினுள் இருந்த ஆவணங்கள் அனைத்தும் தீயில்எரிந்து சாம்பலாகின.

தனக்குக் கிடைக்கவேண்டிய மூன்று மாத சம்பளத்தை உடனடியா கத் தருமாறு கோரியே 52 வயதான இந்த ஊழியர் நிறுவனத்தினுள் புகுந்து அட்டகாசம் புரிந்தார்.

நிறுவனத்தினுள் புகுந்த அவர் நிறுவன முகாமையாளரையும் ஏனைய தொழிலாளர்களையும் பணயக் கைதி களாக வைத்துக்கொண்டு அங்கு மண்ணெண்ணெயை ஊற்றினார்

பொலீஸார் மேற்படி நபருடன் சமர சம் செய்ய முயன்றபோது அவர் நிறு வனத்தை தீயிட்டுக் கொளுத்தினார்.

இதனால் நிறுவனத்தின் முகாமை யாளர் உட்பட மூவர் உடல் கருகி இறந்தனர். அட்டகாசம் புரிந்த ஊழி யரும் தீயில் கருகினார்.

நிறுவனம் தீப்பற்றி எரிந்ததை அங்குள்ள கமெராக்கள் படம்பிடித் துள்ளன.

நிறுவனத்தினுள் தீ மளமளவென பரவியதால் அங்கிருந்த அனைத்து ஆவணங்களும் எரிந்து சாம்பலாகின. நிறுவனக் கட்டடம் பலத்த சேதத்துக் குள்ளானது.

மீட்புப் படையினர் இரண்டு மணித் தியாலத்திற்கும் மேலாக போராடி தீயை அணைத்தனர்.



ஈராக்கில் அமெரிக்கர்களுக்கு எதிராக செயற்படும் கெரில்லாக்கள் என்ற சந் தேகத்தின் பேரில் இருவர் கைதுசெய்யப்பட்டு அவர்களது குடும்ப உறுப்பினர் கள் முன்னிலையிலேயே கட்டிப்போடப்பட்டுள்ளனர். அமெரிக்கப்படையினர் மீதான தாக்குதல்கள் ஈராக்கில் நாளாந்தம் இடம்பெற்றுவருவதை அடுத்து, முன்னாள் அதிபர் சதாமின் உறுதியான கோட்டையாக விளங்கிய திக்ரிற்றில் இந்தத் தேடுதலை அமெரிக்க இராணுவம் மேற்கொண்டுள்ளது.



அமெரிக்க வெளியுறவுத்துறை அமைச்சர் கொலின் பவல் ஈராக்குக்கு விஜயம் செய்துள்ளார். 1998இல் சதாம் ஹுசைனால் இரசாயன ஆயுதங்கள் மூலம் கொல்லப்பட்டவர்களின் குடும்பங்களை சந்தித்து அவர் உரையாடினார்.

# பின்லேடனைப் பிடிக்க முடியாது; அமெரிக்க அதிகாரிகள் கைவிரிப்பு!

நியூயோர்க்,செப்.17

ஒஸாமா பின்லேடன் இருக்கும் இடத்தைக் கூட கண்டுபிடிக்க முடிய வில்லை. எனவே, பிடிக்க முடியாது என்று அமெரிக்க உளவு அதிகாரி கள் கைவிரித்துள்ளனர்.

பின்லேடனை உயிருடனோ, பிண மாகவோ பிடிக்கும்படி ஜனாதிபதி புஷ் உத்தரவிட்டார். அதன்பிறகு அவரது கவனம் ஈராக் மீது திருப்பிவிட்டது.

ஆப்கான் மீது தாக்குதல் நடந்து இரண்டு ஆண்டுகளாகியும் பின்லே டனை அமெரிக்கா பிடிக்கவில்லை. அவர் உயிருடன் இருப்பது தற்போது நூறு சதவீதம் உறுதியாகியுள்ளது.

உலக அரங்கில்

பின்லேடனைத் தேடும் வேட்டை யில் ஈடுபட்ட அமெரிக்க இராணுவ அதிகாரிகள் கூறுகையில்,

பின்லேடன் எங்கே மறைந்து இருக்கிறார் என்பதை கண்டுபிடிக்கமுடி யவில்லை. அவர் இருக்கும் இடத்தை கண்டுபிடிக்க முடியாமலேயே போய்விட லாம். அவரை உயிருடன்பிடிக்க முடி யாது. குண்டு வீசிக் கொல்லவும் இய லாது என்று அவர்கள் கூறினா.

ஆப்கான் - பாகிஸ்தான் எல்லைப் பகுதியில் குனார் மற்றும் வசீர்தான் ஆகிய மாகாணங்களில் பின்லேடன் பதுங்கி இருக்கலாம் என்று தகவல் கள் வெளியான போதிலும், அமெரிக்க இராணுவத்தால் அவர் பதுங்கி இருக் கும் இடத்தைக் கண்டுபிடிக்க முடிய வில்லை.

செய்மதி தொலைபேசிகளையோ ஏனைய தொலைபேசிகளையோ பயன்படுத்துவதை பின்லேடன் நிறுத்தி விட்டதால் பின்லேடன் பதுங்கி இருக் கும் இடத்தை கண்டுபிடிப்பது கடின மாக உள்ளது என்றும் அவர்கள் கூறு கின்றனர்.

பின்லேடனைச் சுற்றிலும் அவருக்கு விசுவாசமானவர்கள் சூழ்ந்து இருக்கி றார்கள். சிலருக்கு மட்டுமே அவர் பதுங்கி இருக்கும் இடம் தெரியும். அவர்கள் அதைப்பற்றி யாரிடமும் பேசுவதுகிடையாது என்று அமெரிக்க உளவு அதிகாரிகள் கூறுகின்றனர்.

# வடகொரியாவில் போதைப்பொருள்; ஜனாதிபதி புஷ் புதிய குற்றச்சாட்டு!

போதைப்பொருள் உற்பத்தியிலும், விற்பனையிலும் வடகொரியாவுக்கு நேரடிப் பங்கு உண்டு என்று அமெரிக்க ஜனாதிபதி புஷ் தெரிவித்துள்ளார்.

அமெரிக்க காங்கிரஸுக்கு ஆண்ட றிக்கையை சமர்ப்பித்த ஜனாதிபதி புஷ், ஆப்கானிஸ்தான், பாகிஸ்தான், சீனா உட்பட 23 நாடுகள் போதைப் பொருள் உற்பத்தியிலும், விற்பனை யிலும் ஈடுபட்டுள்ளன என்று சுட்டிக் காட்டியுள்ளார்.

மேற்படி பட்டியலல் வடகொரியா அடங்கவில்லையாயினும் அவ்வா றான சான்றுகள் இருக்கின்றன என்று அவர் தெரிவித்துள்ளார்.

இதனால், பாதிக்கப்பட்ட நாடுகளு டன் சேர்ந்து வடகொரியாவுக்கு எதிராக சட்ட அமுலாக்கல் நடவடிக்கையில் அமெரிக்கா ஈடுபடும்.

ஹெரோயின் மற்றும் நோவாற்றி போதை மருந்துகள் வடகொரியாவில் இருந்து கிழக்கு ஆசிய நாடுகளுக்கு பரவிவிடலாம் என்பதில் நாம் ஆழ்ந்த கவலையடைந்துள்ளோம்.

ஹெயிட்டியும், மியான்மாரும் போதைப்பொருள் உற்பத்தி, விற்பனை யில் நடவடிக்கை எடுப்பதற்கு தயங் கியுள்ளன என்று அவர் மேலும் கூறி யுள்ளார்.

அமெரிக்கா அடிக்கடி போதைப் பொருள் குற்றச்சாட்டை வடகொரியா மீது சுமத்தியிருக்கிறது. வடகொரியா அதனை நிராகரித்து வருகிறது. கடந்த ஏப்ரலில் வடகொரிய கப்பல் 50 மில்லியன் பெறுமதியான ஹெரோ யினை கடத்தியிருந்ததாக ஜனாதிபதி புஷ் தனது ஆண்டறிக்கையில் மேற் கோள்காட்டியிருக்கிறார்.

இந்த அபாண்டமான குற்றச்சாட் டுக்களை கூறும் அமெரிக்கா, வட கொரியாவுக்கான உணவு வழங்கலை தாமதம் செய்யுமாறு ஜப்பானுடன் இணைந்து ஐ.நா.உதவி நிறுவனங் களை கோரவுள்ளதாக குற்றஞ்சாட்டி யுள்ளார்.

# ஓசோனில் வரலாறு காணாத ஓட்டை; பத்தாண்டுகளில் நிலைமை மோசமாகும்!

## விஞ்ஞானிகள் திடீர் அறிவிப்பு

இதுவரை வரலாற்றில் இல்லாத அளவுக்கு ஓசோன் படலத்தில் துளை ஏற்பட்டுள்ளதாக லண்டனில் விஞ்ஞானிகள் தெரிவித்துள்ளனர்.

கடந்த வருடம் ஓசோன் படலத்தில் உள்ள துளையில் நல்ல முன்னேற்றம் காணப்பட்டது. அது குறித்து செய்தி களும் வெளியாகியுள்ளன. ஆனால், கடந்தவாரம் நடத்தப்பட்ட ஆய்வுகளின்படி ஓசோனில் உள்ள துளையின் அளவு விரிவடைந்துள்ளமை கண்டுபிடிக்கப்பட்டிருக்கிறது.

இதற்குரிய காரணம் என்னவென்பதை விஞ்ஞானிகளால் உடனடியாக விளக்கமுடியவில்லை.

ஓசோனில் உள்ள துளை குறித்து அமெரிக்கா உள்ளிட்ட பல்வேறு நாடுகள் அலட்சியமாக உள்ளன. இந்த நிலை தொடர்ந்தால், இன்னும் பத்து ஆண்டுகளில் ஓசோனில் உள்ள துளை மேலும் விரிவடையும். இதனால், வேண்டத்தகாத விளைவுகள் ஏற்படும் என்று விஞ்ஞானிகள் கூறியுள்ளனர்.

1985ஆம் ஆண்டு ஓசோனில் துளை இருப்பது கண்டுபிடிக்கப்பட்டது. 1987 செப்ரெம்பர் 16ஆம் திகதி ஓசோன துளையை மேலும் விரிவடையாமல் தடுப்பது குறித்தும் மாநாடு ஒன்று நடைபெற்றது.

இந்த மாநாட்டின் பிரகாரத்தின்படி உலக நாடுகள் அனைத்தும் இதுகுறித்த ஒப்பந்தத்தில் கையெழுத் திட்டுள்ளன.

வாகனப் புகை, காபனீர் ஒட்சைட் ஆகியவற்றின் பாவனை அளவு அதிகரித்ததன் விளைவாக ஓசோன் வாயு படலம் இரசாயனத் தாக்கத்திற்கு உள்ளாகி, அதிலும் துளைபெரிதாகின்றது என விஞ்ஞானிகள் கூறுகின்றனர்.

ஓசோன்துளை ஊடாக சூரியனின் நெருப்பாக கொதிக்கும் புற ஊதாக் கதிர்கள் பூமிக்கு ஊடுருவுகின்றன. இதனால், பூமியின் வெப்பநிலை, பருவநிலைகளில் மாற்றங்கள் ஏற்படுகின்றன.

# சவூதி சிறையில் பெரும் தீ! 100 பேர் கருகி மாண்டனர்!!

சவூதியில் உள்ள மிகப்பெரிய சிறையில் நேற்றுமுன்தினம் பிற்பகல் ஏற்பட்ட பெரும் தீ விபத்தில் 100பேர் கருகி மாண்டனர்; மூன்று பாதுகாப்பு அதிகாரிகள் உட்பட இருபது பேர் காய மடைந்தனர்.

தீயணைப்புப் படையினர் மூன்று மணிநேரம் போராடித் தீயை அணைத் தனர்.

தலைநகர் ரியாத்தில் உள்ள இந்த சிறைச்சாலையில், பின்லேடனுக்கு ஆதரவாகச் செயற்பட்ட இருநூறுக்கும் மேற்பட்ட கைதிகள் சிறைவைக்கப் பட்டிருந்தனர்.

பிற்பகல் 2.30 மணியளவில் சிறை யில் ஏற்பட்ட தீ மளமளவென அனைத் துச் சிறைக்கூடங்களுக்கும் பரவியது.

தீவிபத்து குறித்து தீயணைப்புப் படையினருக்கு உடனடியாக அறிவிக் கப்பட்டது. பத்துக்கும் மேற்பட்ட தீய ணைப்பு வாகனங்கள் மூன்று மணித்தி யாலத்திற்கும் மேலாக தீயை அணைக் கப் போராடின.

எனினும், சிறைக்கூடங்களில் இருந்து வெளியே வரமுடியாததால், 100கைதிகள் பரிதாபமாகக் கருகி மாண்டனர்.

கைதிகள் சிறையில் இருந்து தப்பி யோட முயன்றும் முடியாமல் போய் விட்டது. தீ கொளுந்துவிட்டு எரிந்ததால், சிறைக்கூடங்களின் பூட்டுக்களைத் திறந்துவிடுவதற்கு காவலர்கள் அருகே செல்லமுடியாமல் போய் விட்டது.

80 கைதிகள் இறந்துவிட்டனர் என்று சவூதி அதிகாரபூர்வமாக அறிவித் துள்ளது. ஆனால், 144 கைதிகள் இறந் துள்ளனர் என்று எதிர்க்கட்சிகள் கூறுகின்றன. சிறைக்காவலர்கள் 40பேர இறந்துள்ளனர் என்றும் எதிர்க்கட் சிகள் கூறியுள்ளன.

# தூக்கிலிட ஊழியர் இல்லாததால் தண்டனைக் கைதிகள் காத்திருப்பு!

பாட்னா,செப்.17

கைதிகளைத் தூக்கில்போட ஊழியர் இல்லாததால் பீகாரில் ஐந்து மரண தண்டனைக் கைதிகளுக்கு இன்னமும் தண்டனை நிறைவேற்றப்பட வில்லை.

கிரிமினல் குற்றச்சாட்டின்பேரில் மேற்படி ஐவருக்கும் மரண தண்டனைத் தீர்ப்பு விதிக்கப்பட்டது. இவர்களில் ஒருவர் பெண் என்பதும் குறிப்பிடத்தக் கது. இந்தப்பெண் மரணதண்டனைத் தீர்ப்பை எதிர்த்து ஜனாதிபதிக்கு கருணை மனு எழுதியிருந்தார். ஆனால், அதனை ஜனாதிபதி நிராகரித்துள்ளார். இவர் பல கொலைகளை செய்தவர்.

மேற்படி ஐவருக்கும் தண்டனை நிறைவேற்றும் காலம் கடந்து விட்ட போதும் அதை நிறைவேற்ற இயலாத சங்கட நிலைக்கு பகார் அரசு ஆளா கியுள்ளது.

மேற்படி சிறையில் மரணதண்டனையை நிறைவேற்றி வந்த ஊழியர் கடந்த வருடம் இறந்துவிட்டார். அவரது குடும்பத்தினரும் தூக்குப்போடும் வேலையை செய்யமறுக்கின்றனர். புதியவர்களும் இந்த வேலைக்கு வர மறுக்கின்றனர்.

தூக்குப்போடும் வேலைக்கு முன்வரும் சிலர் தங்களை அரச ஊழியர்களாக நியமிக்கவேண்டுமென கூறுகின்றனர். இதற்கு அரசு தயாராக இல்லை. நாளாந்த கூலி அடிப்படையில் வேலைசெய்ய விரும்புபவர்களையே அரசு தேடி வருகிறது.



மேற்குக்கரையில் டூரா என்ற இடத்தில் இஸ்ரேலியப் படையினர் நேற்று மேற்கொண்ட இராணுவ நடவடிக்கையின்போது இஸ்லாமிய ஜிகாத் அமைப்பின் உறுப்பினரான அபு டொவ்ஷ் எனபவரின் வீட்டை குண்டுவைத்துத் தகர்த்தெறிந்தது.

## சமாதானத்துக்கும் நல்லெண்ணத்துக்குமான குழு கவலை

# அரசு - எதிர்க்கட்சி முரண்பாட்டால் தீர்வு தூர விலகிச் செல்கின்றது!

## புரிந்துணர்வு ஒப்பந்தம் நடைமுறைப்படுத்தப்படாமைக்கும் விசனம் தெரிவிப்பு

யாழ்ப்பாணம்,செப்.17

இன்று பதவியில் இருக்கின்ற அரசும் எதிர்க்கட்சியினரும் முரண்பட்ட நிலையில் இருந்துவருவதனால் இனப்பிரச்சினைக்கான தீர்வு தூர விலகிச் செல்கின்றது.

- இவ்வாறு சமாதானத்துக்கும் நல்லெண்ணத்துக்குமான மக்கள் குழு கவலை தெரிவித்துள்ளது.

தற்போதைய சமாதான முறைமைகள் பற்றிய மதிப்பீட்டு அறிக்கை ஒன்றை அது வெளியிட்டுள்ளது.

அரசுக்கும் விடுதலைப் புலிகளுக்கும் இடையில் புரிந்துணர்வு ஒப்பந்தம் செய்துகொள்ளப்பட்டு சுமார் ஒன்றரை ஆண்டுகள் கடந்துவிட்ட நிலையிலும் அதில் தெரிவிக்கப்பட்டுள்ள விடயங்கள் நடைமுறைப்படுத்தப்படாதது குறித்து அறிக்கையில் கடும் விசனம் தெரிவிக்கப்பட்டுள்ளது.

"புரிந்துணர்வு ஒப்பந்தத்தில் கூறப்பட்ட விடயங்கள் நடைமுறைப் படுத்தப்படாமையால் வடக்கு - கிழக்கு பகுதிகளில் இயல்புவாழ்க்கை தோன்றக்கூடிய வாய்ப்புகள் அருகிப் போய்விட்டன. அதன் விளைவாக மக்கள் என்றும் அச்ச உணர்வுடன் வாழ்கின்ற நிலைமை காணப்படுகின்றது" - என்று அறிக்கையில் கூறப்பட்டுள்ளது.

"அதில் குறிப்பிடப்பட்ட அம்சங்களை அரசு படிப்படியாக நடைமுறைப் படுத்துவதற்குக் காட்டிய அசமந்தப் போக்கின் காரணமாகவே 6 சுற்றுடன் சமாதானப் பேச்சுக்கள் இடைநிறுத்தப்பட்டன" - என்றும் அறிக்கை குற்றஞ்சாட்டுகின்றது.

### மக்களின் துன்பம்

புரிந்துணர்வு ஒப்பந்தம் ஏற்பட்டதும் மக்களுக்கு இருந்த எதிர்பார்ப்புகள் பற்றியும் அவை சாத்தியமாகாமல்போன நிலை பற்றியும் அறிக்கையில் தெளிவாக்கப்பட்டுள்ளது.

புரிந்துணர்வு ஒப்பந்தத்தின் மூலம் சுமார் ஒரு லட்சம் மக்கள் யாழ். குடாநாட்டிலுள்ள தமது சொந்த இருப்பிடங்களில் மீளக்குடியமர்வார்கள் என எதிர்பார்க்கப்பட்டது. ஆயினும், சுமார் 50 ஆயிரம் மக்கள்கூட இதுவரை தமது சொந்த இடங்களில் மீளக்குடியேற முடியாத நிலைதான் தொடர்கிறது.

யாழ். குடாநாட்டில் 2 ஆயிரத்து 214 குடும்பங்கள் பல்வேறு நலன்புரி நிலையங்களில் பல இடர்களுக்கு மத்தியில் இன்றும் வாழ்ந்து வருகின்றன. அத்துடன், 20 ஆயிரம் குடும்பங்கள் தமது உறவினர்கள் மற்றும் நண்பர்கள் வீடுகளில் பல்வேறு அசௌகரியங்களுடனும் வாழ்கின்றன.

நாட்டின் சட்ட வரைவுக்கு முரணான வகையில் படையினரால் ஏற்படுத்தப்பட்ட அதி உயர்பாதுகாப்பு வலயத்தினால் பல குடும்பங்கள் சொந்த இடங்களில் மீளக்குடியமர முடியாது தவிக்கின்றன.

யாழ். மாவட்டத்திலுள்ள பாடசாலைகளில் வசதி வாய்ப்புக்கள் குறைவாக இருந்து வருவதனால் மாணவர்கள் தமது முழுமையான கல்வியைப் பெற்றுக்கொள்ள முடியாதுள்ளனர்.

சிறுவர்கள், போசாக்கின்மையாலும் சுகாதார மருத்துவ வசதிகளும் குறைந்த நிலையாலும் பல்வேறு நோய்த் தாக்கங்களுக்கு ஆளாகி வருகின்றனர்.

புரிந்துணர்வு ஒப்பந்தம் கைச்சாத்திடப்பட்டதனால் வடபகுதியில் தொழில்வாய்ப்புக்கள் அதிகரித்து வேலையில்லாத் திண்டாட்டம் நீங்கும் என எதிர்பார்க்கப்பட்டது. ஆயினும், யாழ். குடாநாட்டில் 82ஆயிரத்து 992பேர் வரை இன்னமும் தொழில் வாய்ப்புக்கள் இல்லாமலும் ஒரு லட்சத்திற்கும் அதிகமான தகுதிக்கேற்ற பொருத்தமான வேலைவாய்ப்புக்கள் இன்றியும் திண்டாடுகின்றனர்.

யாழ். குடா நாட்டிலுள்ள சுமார் 38 ஆயிரத்து 502 வீடுகள் முற்றாக அழிக்கப்பட்டும் 68ஆயிரத்துக்கு மேற்பட்ட வீடுகள் சேதமடைந்த நிலையிலும் காணப்படுகின்றன. இவற்றைப் புனரமைப்பதற்கு அரசு எத்தகைய நடவடிக்கைகளையும் எடுக்கவில்லை.

பயங்கரவாதத் தடைச் சட்டம் சமாதான சூழ்நிலை நிலவுகின்ற இன்றைய காலகட்டத்திலும் வாபஸ் பெறப்படவில்லை. இதனால், மக்கள் பயப்பீதியுடன் நடமாடும் சூழ்நிலையே காணப்படுகின்றது. இதனை நீக்கும் வகையில் இச்சட்டம் உடனடியாக ரத்துச் செய் யப்படவேண்டும்.

### டோக்கியோ நிதி உதவி வடக்கு - கிழக்குக்கு வேண்டும்

இந்த நிலையில் டோக்கியோ மாநாட்டில் ஒதுக்கீடு செய்யப்பட்ட நிதி, யுத்தத்தால் முழுமையாக பாதிக்கப்பட்ட வடக்கு - கிழக்கு மாகாணங்களின் புனர்வாழ்வு, புனரமைப்பு மற்றும் அபிவிருத்தித் திட்டங்களுக்கு வழங்கப்பட வேண்டும். அவ்வாறு வழங்குவதன் மூலமே யுத்தத்தால் சிதைவடைந்த இத்தேசத்தைக் கட்டியெழுப்ப முடியும்.

இந்த நாட்டின் எதிர்கால நன்மை கருதி வடக்கு - கிழக்குக்கான இடைக்கால நிர்வாக சபையை ஏற்படுத்துவது அவசியம். அதன் மூலம் பலமான அத்திவாரத்தை ஏற்படுத்தி இனப்பிரச்சினைக்கு நிரந்தரமான தீர்வொன்றினைக் காணமுடியும் - என்று அவ்வறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டது. (ம-5)

## முருகன் விக்கிரகம் திருட்டு

வரணி,செப்.17

வரணி இயற்றாலை காட்டுக்கந்தசுவாமி கோவில் முருகன் விக்கிரகம் அண்மையில் இனம்தெரியாதோரால் களவாடப்பட்டுள்ளது.

சுமார் 50 வருட கால பழமை வாய்ந்த இவ்விக்கிரகம் மிகப் பெறுமதிவாய்ந்தது எனக் கூறப்பட்டது.

அண்மைக்காலங்களில் விக்கிரகம் களவுபோதல் யாழ். மாவட்டத்தில் அதிகரித்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

(ம-170)

## விஞ்ஞானபீட மாணவருக்கு !

யாழ். பல்கலைக்கழக விஞ்ஞான பீட மாணவர்களுக்கான அவசர கலந்துரையாடல் ஒன்று இன்று புதன்கிழமை காலை 10 மணிக்கு மாணவர் நிலையத்தில் நடைபெறவுள்ளது.

3ஆம், 4ஆம் வருட மாணவர்களின் மற்றும் முதலாம் வருட மாணவர்களின் இடைநிறுத்தப்பட்ட பரீட்சைகள், விரிவுரைகள் தொடர்பாகக் கலந்துரையாட இருப்பதால், அனைத்து மாணவர்களையும் தவறாது கலந்துகொள்ளுமாறு கேட்கப்பட்டுள்ளது. (ம-ரி)

## படைகளை விட்டு 51ஆயிரம் பேர் இதுவரையில் தப்பியோடியுள்ளனர்

கொழும்பு,செப்.17

ராணுவத்திலுள்ள படையினரின் எண்ணிக்கையில் மூவருக்கு ஒருவர் என்ற விகிதத்தில் படைகளில் இருந்து தப்பி ஓடியுள்ளனர் என படைகளில் இருந்து தப்பி ஓடியவர்கள் தொடர்பான ஆய்வில் தெரிய வந்துள்ளது.

படைகளிலிருந்து தப்பி ஓடியவர்கள் தொடர்பாக ஓராண்டு காலமாக இந்த ஆய்வு நடைபெற்றது. இந்த ஆய்வின்படி இதுவரை 51 பேர் படைகளில் இருந்து தப்பி ஓடியுள்ளனர்.

திறமையற்ற தலைமைத்துவம் காரணமாக நிச்சயமற்ற தன்மை மற்றும் யுத்தங்களில் ஏற்பட்ட தோல்விகளின்போது மனைவிமார், பெற்றோர் மற்றும் நெருங்கிய உறவினர்களால் மேற்கொள்ளப்படும் அழுத்தங்கள் காரணமாகவே சிப்பாய்கள் படைகளை விட்டுத் தப்பி ஓடியுள்ளனர் என ஆய்வு தெரிவிக்கிறது.

படைகளில் இருந்து தப்பி ஓடியவர்கள் சட்டபூர்வமான தவறை இழைத்தவர்கள் எனக் கருதப்படுவதால் அவர்கள் மீண்டும் அரசதுறையிலோ அல்லது தனியார் துறையிலோ வேலைவாய்ப்பைப் பெறமுடியாதுள்ளனர்.

இதனால் அவர்கள் விரைவில் குற்றச் செயல்களில் ஈடுபடுகின்றனர் என அந்த ஆய்வு தெரிவித்துள்ளது.

இவ்வாறு குற்றச்செயல்களில் ஈடுபடும்போது படைகளில் இருந்த போது அவர்கள் பெற்ற அனுபவங்களைப் பயன்படுத்திக் கொள்கின்றனர் என. குற்றச் செயல்களில் ஈடுபட்டு தற்போது சிறைத்தண்டனை அனுபவித்துவரும் சிப்பாய் ஒருவர் தெரிவித்துள்ளார்.

படைகளிலிருந்து தப்பி ஓடியவர்களைக் கைதுசெய்வது தொடர்பான முயற்சிகள் 90 சதவீதம் தோல்வியில் முடிந்ததாகத் தெரியவருகிறது.

இந்த ஆய்வைப் பேராதனைப் பல்கலைக்கழக சமூக விஞ்ஞானப் பிரிவு மேற்கொண்டது. (ம)

## நிதி ஒதுக்கீடு

தெல்லிப்பழை,செப்.17

உடுவில் பிரதேச செயலர் பிரிவுக்கு யாழ்.மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர்களின் பன்முகப்படுத்தப்பட்ட வரவு - செலவுத் திட்ட நிதியிலிருந்து 17லட்சத்து 80 ஆயிரம் ரூபா நிதி ஒதுக்கப்பட்டுள்ளது.

மேற்படி பிரதேச செயலர் பிரிவிலுள்ள சனசமூக நிலையங்கள், ஆலயங்கள், முன்பள்ளிகள், பாடசாலைகள், சிறுவர் பூங்காக்கள் என்பவற்றின் புனரமைப்புக்கும் அபிவிருத்திக்குமாக இந்நிதி ஒதுக்கீடு வழங்கப்பட்டுள்ளது. (ம-150)

## பரிசளிப்புவிழா

அச்சுவேலி,செப்.17

அச்சுவேலி மத்திய கல்லூரியின் வருடாந்தப் பரிசளிப்பு விழா இன்று புதன்கிழமை காலை 9.00 மணிக்கு அதிபர் ச.கனகராசா தலைமையில் நடைபெறும்.

இந்த விழாவில் பிரதமவிருந்தினராக யாழ். வலய கல்விப் பணிப்பாளர் ப.விக்னேஸ்வரனும், விடுதலைப் புலிகளின் கோப்பாய் கோட்ட பொறுப்பாளர் சி.யாழவன் சிறப்பு விருந்தினராகவும் கலந்துகொள்வர். (எ-11)


பாராட்டி மகிழ்கின்றோம்

சமாதான நீதிவான்

திரு.வி.பரிபூரணானந்த சர்மா



கற்பொக்கணை, உடுவிலைச் சேர்ந்த பிரம்மஸ்ரீ விசுவநாதஐயர் பரிபூரணானந்த சர்மா அவர்கள் இன்று (17.09.2003) புதன்கிழமை மல்லாகம் மாவட்ட நீதிவான் திருமதி சரோஜினி இளங்கோவன் முன்னிலையில் சமாதான நீதிவானாகச் சத்தியப் பிரமாணம் செய்து கொள்கின்றார்.

இவரது பணி சமூகசேவையில் மேலும் பல ஆண்டுகள் தொடர இறைவனைப் பிரார்த்தித்து அவரைப் பாராட்டி மகிழ்கிறோம்.

உடுவில் – கந்தரோடை, சுன்னாகம்.

- நண்பர்கள்.

(C/30210) (26-24-19-14)



அமரர் யோகசிங்கம் கமல்ஸ்ரோனின் 2ஆம் ஆண்டு நினைவையொட்டி ஏசியன் விளையாட்டுக் கழகத்தால் நடத்தப்படும் மாபெரும் மென்பந்து கிரிக்கற் சுற்றுப்போட்டி

விவரம்:- 7 பேர் கொண்ட 12 பந்துப் பரிமாற்றங்கள்.

விண்ணப்ப முடிவு திகதி:- 25.09.2003

அணித்தெரிவு:- 26.09.2003

விண்ணப்பம் கிடைக்கும் இடங்கள்:-

1) ஏஞ்சலின் தொலைத் தொடர்பு சேவை (744, ஆஸ்பத்திரி வீதி)
2) S.M.பெர்னான்டோ (பல்நூக்குக் கண்ணாடி அகம்)
3) லொயலாஸ் (பந்தல் சேவை)

யாழ்ப்பாணம்.

- ஏசியன் விளையாட்டுக் கழகம்.

(22663) (24-19-14)



கண்ணீர் அஞ்சலி



செல்வி

நகுலேஸ்வரக் குருக்கள் கம்சினி

அன்பு மழலைச் செல்வத்தின் மறைவையிட்டு ஆறாத்துயரில் மூழ்கியிருக்கும் அவரது குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதுடன், அவரது ஆத்மா சாந்தியடைய எல்லாம்வல்ல வீரபத்திரப் பெருமானைப் பிரார்த்திக்கின்றோம்.

G.P.S றோட், கல்வியங்காடு.

- சிவன் தொலைத் தொடர்பகம்.

(22664) (26-24-14-19)



SHAMROCK

J/ஈச்சமோட்டை வீதி

A/L DAY

Com. -Mr. பசில்
Acc. -Mr. தவா
CHRIS -Mrs.A.மல்லிகா
Log., Tam. & Geo.

Spoken & A/L English

Gr. 3 முதல் 11 வரை

(22681) (26-24-14-19)



பௌதிகவியல்

(துரித மீட்டல்)

By:
K.Sivalingam B.Sc. (Spl.)

ஆரம்பம்: 20.09.2003

சனி, ஞாயிறு 8.30 - 10.00

பதிவுகளை மேற்கொள்ளவும்.

இல.1, சிவப்பிரகாசம் றோட் (தட்டாதெரு சந்திக்கருகில்), வண்ணார்பண்ணை, யாழ்ப்பாணம்.

(22659) (24-14-19)



யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்
பட்டப்பின் படிப்புகள் பீடம்
பட்டப்பின் கல்வித் தகைமை
(யாழ்ப்பாணம், வவுனியா வளாகம்)
பகுதி நேரம் I, பகுதி நேரம் II, முழுநேரம்
இரண்டாம் பருவத் தேர்வு

25/09/2003இல் ஆரம்பமாகவிருந்த மேற்படி பரீட்சை தவிர்க்கமுடியாத காரணங்களால் பிற்போடப் பட்டுள்ளது.

25/09/2003 திகதிப் பரீட்சை 01/10/2003 இலும்
26/09/2003 திகதிப் பரீட்சை 02/10/2003 இலும் நடைபெறும்.
29/09/2003, 30/09/2003 பரீட்சைகள் அதே தினத்தில் நடைபெறும்.

பதிவாளர்,
யாழ்.பல்கலைக்கழகம்,
15-09-2003.

(C/30201) (26-24-14-19)



மரண அறிவித்தல்

திருமதி நாகரத்தினம் சிவபாதம்

யாழ்ப்பாணம், கந்தர்மடம், அன்னசத்திர ஒழுங்கை 'வளர்மதி' இல்லத்தில் வசித்தவரும் தற்போது 46/1, பொள்வல் இடம், வெள்ளவத்தையை வதிவிடமாகக் கொண்டிருந்தவருமான திருமதி நாகரத்தினம் சிவபாதம் 15-09-2003 திங்கட்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற கைலாசபிள்ளை சிவபாதத்தின் அன்பு மனைவியும் காலஞ்சென்ற மகேஸ்வரன் மற்றும் விமலேஸ்வரன், கலாநிதி நகுலேஸ்வரன், திருமதி சாவித்திரிதேவி, நரேந்திரநாதன், லோகேஸ்வரன், மங்களேஸ்வரன், காலஞ்சென்ற சதானந்தன் (பாபு) மற்றும் இரவீந்திரன் ஆகியோரின் அருமைத் தாயாருமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நேற்று (16.09.2003) செவ்வாய்க் கிழமை வெள்ளவத்தையில் நடைபெற்று, பூதவுடல் கனத்தை இந்து மயானத்தில் தகனஞ்செய்யப்பட்டது.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

46/1, பொள்வல் இடம்,
வெள்ளவத்தை.
தொலைபேசி: 012 508238 (22663)(19-24-14)

தகவல்:
திருமதி சாவித்திரிதேவி நரேந்திரநாதன் (மகள்).

உதயன்

## ஆட்சிக் கனவில் பொதுஜன ஐக்கிய முன்னணி

தற்போதைய நாடாளுமன்றத்தில் கட்சிகளுக்கு உள்ள பலத்தை கட்சி மாறிகள் மூலம் மாற்றியமைத்து புதியதோர் அரசை அமைக்கலாம் என்று பிரதான எதிர்க்கட்சியான பொதுஜன ஐக்கிய முன்னணி கொண்ட நப்பாசை, வெறும் கனவாகிப் போய் விட்டது.

ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸின் இரு பிரிவுகள் மற்றும் இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸ் போன்றவற்றை அரசுத் தரப்பிலிருந்து பிரித்தெடுப்பதன் மூலமும் -

ஆளும் ஐ.தே.முன்னணியின் பிரதான கட்சியான ஐ.தே.கவிலிருந்து அதிருப்தியாளர் குழு ஒன்றை கட்சி தாவ வைப்பதன் மூலமும் -

மாற்று அரசை அமைப்பதற்கு பொ.ஐ.மு. நீண்ட காலம் திட்டமிட்டு முயற்சி செய்தது.

அந்த முயற்சிகள் பிசுபிசுத்துப் போன நிலையில், தற்போதைய அரசை ஜனாதிபதியின் நிறைவேற்று அதிகாரத்தைப் பயன்படுத்திக் கலைத்து, அதன் பின்னர் நடைபெறும் பொதுத் தேர்தல் ஒன்றின் மூலம் ஆட்சியைப் பிடிக்கலாம் என்று அது புதிய திட்டத்தை வகுத்திருப்பது போலத் தெரிகின்றது.

சரியோ, பிழையோ பிரதமர் ரணில் விக்கிரம சிங்கவின் முன் முயற்சிகளின் காரணமாக கடந்த ஒன்றரை வருடத்துக்கும் அதிகமான காலத்துக்கு யுத்த நிறுத்தம் தொடர்ந்து நீடிக்கின்றது. துப்பாக்கிச் சீறல்களுக்கும் குண்டு வெடிப்புகளுக்கும் அகோரப் பேரழிவுகளுக்கும் ஓய்வுகொடுத்தாகிவிட்டது. மக்களின் இயல்பு வாழ்க்கை திரும்பாவிட்டாலும், அழிவின்றி - இழப்பின்றி - அமைதியாக - மக்கள் வாழும் நிலைமை காணப்படுகின்றது. அமைதிப் பேச்சுகள் இடைநிறுத்தப்பட்டாலும் சமாதான முயற்சிகள் தொடரும் என்ற நம்பிக்கை வலுவுடன் நீடிக்கின்றது.

மொத்தத்தில் யுத்தப் பேரழிவில் இருந்து - கொடூர அச்சுறுத்தலில் இருந்து - நாட்டையும் மக்களையும் மீட்டு, நிம்மதிப் பெருமூச்சுவிட வைத்தவர் ரணில் என்ற மரியாதை தென்னிலங்கை மக்களிடையே பலமாக நிலவுகின்றது.

இந்தப் பின்னணியில் புதிய பொதுத் தேர்தல் ஒன்றை நாடுவது இப்போதைய நிலையைவிட மோசமான முடிவுகளையே தங்களுக்குத் தரும் என்பதும் பொ.ஐ.முன்னணியினருக்குத் தெரியும்.

எனவேதான், நாடாளுமன்றைக் கலைக்காமல் 'கட்சி தாவிகள்' மற்றும் 'அணி மாறி'களின் உதவியோடு ஆட்சியைப் பிடிக்க முதலில் அவர்கள் முயன்றார்கள்.

அந்த முயற்சி பயனளிக்கப் போவதில்லை என்பதை உணர்ந்தும் இப்போது நாடாளுமன்றைக் கலைத்துவிட்டு புதிய தேர்தல் மூலமாவது ஆட்சியைப் பிடிக்கலாம் என்று எதிரணி திட்டம் வகுக்கின்றது.

அதற்கு பிரதமர் ரணிலின் அமைதி முயற்சி வெறும் 'வேஷம்' என்றும் சமாதான நடவடிக்கை ஒரு நாடகம் என்றும் முதலில் மக்களை நம்பவைக்க வேண்டியது அவசியம் என்று கருதுகின்றது பொ.ஐ. முன்னணி.

அதற்கான திட்டங்கள் வகுக்கப்பட்டு, காய்நகர்த்தல்கள் ஆரம்பமாகிவிட்டன என்றுதான் அரசியல் அரங்கச் செய்திகள் கூறுகின்றன.

திடீர் பொதுத் தேர்தல் ஒன்று வந்தால் அதற்கு முகம் கொடுக்கும் வகையில் பொ.ஐ.முன்னணி - ஜே.வி.பி. கூட்டு ஒன்றை ஏற்படுத்துவது குறித்து ஆராய்வதற்காக லக்ஷ்மன் கதிர்காமர், மங்கள சமரவீர ஆகியோரை ஜனாதிபதி குமாரதுங்க நியமித்திருக்கின்றார். இந்த நடவடிக்கையும் -

திருகோணமலைத் துறைமுகம் மற்றும் கடற்படைத் தளம் ஆகியவற்றின் பாதுகாப்புத் தொடர்பாகப் பிரதமர் ரணிலையும், பாதுகாப்பு அமைச்சரையும், அமைச்சரவைப் பேச்சாளர் ஜீ.எல்.பீரிஸையும் கடுமையாகச் சாடி, கடிதம் ஒன்றைப் பிரமருக்கு விலாசமிட்டு எழுதி, ஊடகங்கள் மூலம் அதனைப் பகிரங்கப்படுத்த ஜனாதிபதி எடுத்த நடவடிக்கையும் -

இத்தகைய காய் நகர்த்தல்களின் அங்கங்களே என்று கருதப்படுகின்றன.

எது எப்படியென்றாலும், தனது ஜனாதிபதி பதவிக் காலம் முடிய முன்னர் - அதாவது அடுத்த இரண்டு ஆண்டுகளுக்குள் - நாடாளுமன்றக் கலைப்பு என்ற நிறைவேற்று அதிகார ஆயுதத்தை ஒரு தடவையேனும் பயன்படுத்தாமல் சந்திரிகா குமாரதுங்க ஓயமாட்டார் என்பது மட்டும் நிச்சயம்.

ஆனால், அத்தகைய நிலையில் நடைபெறக் கூடிய புதிய தேர்தல்களின் முடிவுகள் அவரும் அவரது அணியினரும் காணும் பகல் கனவை நனவாக்குமா என்பது கேள்விக்குறியே.

---

கடலரிப்பால் பாதிப்பு:

## கீரிமலை தீர்த்தக் கேணியை பாதுகாப்பதற்கு தடுப்புச்சுவர்

சண்டிலிப்பாய்,செப்.17

வரலாற்றுப் பிரசித்திபெற்ற கீரிமலை புனித தீர்த்தக் கேணி சுற்றாடலிலுள்ள கடற்கரையில் கடலரிப்பு ஏற்படும் அபாயத்தைத் தடுப்பதற்கு அங்கு தடுப்புச் சுவர் ஒன்றைக் கட்டுவற்கு வலிகாமம் வடக்கு பிரதேச சபை திட்டமிட்டுள்ளது. இதற்கான மதிப்பீடு ஒன்றையும் பிரதேச சபை தயாரித்துள்ளது.

தடுப்புச் சுவர் அமைக்கப்படாதுவிட்டால் எதிர்காலத்தில் கீரிமலை புனிதத் தீர்தக் கேணிக்குள்ளும் கடல் நீர் உட்புகுந்து நல்ல நீர் ஊற்றைப் பாதிக்கும் நிலை ஏற்படும் அபாயம் உள்ளது எனச் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது. இதனால் விரைவில் தடுப்புச் சுவரை அமைக்க வேண்டியுள்ளது என வலி.வடக்கு பிரதேச சபையின் செயலாளர் பொ.வைரமுத்து தெரிவித்தார்.

இதற்கான திட்டம் தயாரிக்கப்பட்டு மதிப்பீடு செய்யப்பட்டுள்ளது. யாழ். உள்ளூராட்சி உதவி ஆணையாளருக்கு அது அண்மையில் அனுப்பி வைக்கப்பட்டுள்ளதாகவும் அவர் மேலும் தெரிவித்தார்.

இத்திட்டத்தை நிறைவேற்றுவதற்கு பன்முகப்படுத்தப்பட்ட வரவு - செலவுத் திட்டத்தின்கீழ் நிதி ஒதுக்கீடு செய்து தருமாறு யாழ். மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர்களிடம் கடித மூலம் வேண்டுகோள் விடுக்கப்பட்டுள்ளது. (ம-135)

---

## நாட்டு நடப்பு

நல்லையூர் கந்தன்
திருப்பள்ளி எழுச்சி (7)

அது ஒரு ஐஸ்கிறீம் என்று கேட்டிட
அடுத்தது 'பெப்சி' என மன முவக்க
இது இரண்டையும் வாங்கியே ஒன்றாய்
இருந்தொன்றாய் சுடதும் வழிய
மதுமிக உண்ட மற்றதும் வந்து
மாதவள் பின்னலை வருட
அது அவிண்டு தரையினில் விழுந்திட
அஞ்சியே அவளதைத் தூக்க
மது வெறி போக்கும் மருந் தெனவிரும்பி
மட்டன் றோலதை மனமது விரும்ப
புதியவர் காதல் பூத்துக் குலுங்கிடும்
புண்ணியனே! பள்ளி எழுந்தருளாயே!!

- விகடகவி.

---

## போக்குவரத்து விதிகளை மீறுவோர் எண்ணிக்கை அதிகரித்து வருகிறது

சுன்னாகம் பகுதியில் ஒரு மாதத்தில் 1000 முறைப்பாடுகள்

தெல்லிப்பழை,செப்.17

போக்குவரத்து விதிகளுக்கு முரணாக நடந்துகொண்டவர்களுக்கு எதிராகப் பொலீஸாரால் நீதிமன்றில் தாக்கல் செய்யப்படும் முறைப்பாடுகளின் எண்ணிக்கை அண்மைக் காலங்களில் அதிகரித்துள்ளது.

கடந்த ஒகஸ்ட் மாதத்தில் சுன்னாகம் பொலீஸ் நிலைய எல்லைப் பகுதிக்குள் மட்டும் இத்தகைய ஆயிரத்துக்கும் மேற்பட்ட சம்பவங்கள் இடம்பெற்றுள்ளன. இத்தகைய குற்றங்களைப் புரிந்தோர்மீது போக்குவரத்துக் கண்காணிப்புப் பிரிவுப் பொலீஸார் முறைப்பாடுகளைத் தாக்கல் செய்துள்ளனர்.

வீதி ஒழுங்குகளை மீறி பயணித்தல், வாகன வரிப்பத்திரம், காப்புறுதிப் பத்திரம் மற்றும் சாரதி அனுமதிப்பத்திரம் இன்றி பயணித்தல், இலக்கத் தகடுகளற்ற வாகனங்களைச் செலுத்துதல் ஆகிய குற்றசாட்டுக்களின் பேரிலேயே அநேகமான முறைப்பாடுகள் நீதிமன்றில் பதியப்பட்டுள்ளன.

இந்த முறைப்பாடுகள் மல்லாகம் ஆரம்ப நீதிமன்றில் விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டபோது சுமார் 100 பேர் வரையானோரே விசாரணைக்கு வருகை தந்து தண்டப்பணங்களைச் செலுத்தியுள்ளனர். ஏனையோரைக் கைதுசெய்வதற்கான பிடியாணைகளை நீதிமன்றம் பிறப்பித்துள்ளது.

கடந்த மாதம் 27ஆம் திகதி மட்டும் இத்தகைய 130 முறைப்பாடுகள் மேற்படி மன்றில் விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டன. 32 பேர் விசாரணைக்கு வருகைதந்து 13 ஆயிரம் ரூபாவைத் தண்டப் பணமாகச் செலுத்தினர். இதுவே இந்நீதிமன்றில் வீதி போக்குவத்து ஒழுங்கு மீறலுக்காக ஒரு நாளில் செலுத்தப்பட்ட ஆகக்கூடிய தொகையாகும். விசாரணைகளுக்கு சமுகந்தராத ஏனையோருக்கு பிடியாணைகள் பிறப்பிக்கப்பட்டுள்ளது.

எனினும், கடந்த காலங்களைவிட குற்றமிழைத்தோர் அதிகளவில் நீதிமன்றுக்கு வருகைதந்து தண்டப்பணத்தைச் செலுத்துவதாக நீதிமன்ற அலுவலர் ஒருவர் தெரிவித்தார். (ம-150)

---

## உயர்பாதுகாப்பு வலயங்கள் தொடர்பாக ஆராய் அரச அதிபருக்கு மட்டுமே அழைப்பு

கொழும்பில் நாளை மாநாடு நடக்கிறது

யாழ். உயர் பாதுகாப்பு வலயங்கள் தொடர்பாக கொழும்பில் நாளை நடைபெறும் உயர்மட்டக் கூட்டத்துக்கு யாழ்ப்பாணத்திலிருந்து அரச அதிபரை மட்டும் கலந்துகொள்ளுமாறு பாதுகாப்பு அமைச்சர் திலக் மாரப்பன அறிவித்துள்ளார்.

இம்மாநாடு கொழும்பு பாதுகாப்பு அமைச்சுத் தலைமையகத்தில் இடம்பெறவுள்ளது.

யாழ். குடாநாட்டு உயர் பாதுகாப்பு வலயங்கள் மற்றும் அதனோடு தொடர்புபட்ட மக்களது பிரச்சினைகள் குறித்து ஆராய்வற்தாக ஒழுங்குசெய்யப்பட்டுள்ள இம்மாநாட்டில் உயர் பாதுகாப்பு வலயங்கள் அமைந்துள்ள பகுதிகளின் பிரதேச செயலர்களையும் கலந்துகொள்ளுமாறு முன்னர் அழைப்பு விடுக்கப்பட்டிருந்தது. தற்போது அரச அதிபருக்கு மட்டுமே அழைப்பு விடுக்கப்பட்டுள்ளது.

இம் மாநாட்டில் முப்படைகளையும் சேர்ந்த யாழ். மாவட்ட அதிகாரிகள், தளபதிகள் கலந்துகொள்கின்றனர்.

உயர் பாதுகாப்பு வலயங்களை அகற்றி, மக்கள் மீள்குடியமர்வுக்கு எவ்வாறு உதவ முடியும் என்பது குறித்து முக்கிய தீர்மானம் இம்மாநாட்டில் எடுக்கப்படவுள்ளதாக எதிர்பார்க்கப்படுகிறது. (ம-9-3)

---

## இந்து மதத்தை காப்பாற்றுவதற்கு புலிகள் ஒத்துழைக்க வேண்டும்

இந்து குருமார் ஒன்றிய செயலாளர் கோரிக்கை

வலி.வடக்கு,செப்.17

இந்துமதம் இன்று காப்பாற்றப்படவேண்டிய நிலைமையில் காணப்படுகின்றது. இதனைக் காப்பாற்றத் தமிழீழ விடுதலைப் புலிகள் தமது முழுமையான ஒத்துழைப்பை வழங்கவேண்டும்.

- இவ்வாறு இந்து குருமார் ஒன்றியச் செயலாளர் க.சந்திரசேகர சர்மா கோரிக்கை விடுத்துள்ளார்.

கோப்பாய் பிரதேச தேசிய எழுச்சிப் பேரவை பேராளர் மாநாட்டில் ஆசிரியுரை வழங்கும்போது இக்கோரிக்கையையும் அவர் முன்வைத்துள்ளார்.

இன்று இந்து ஆலயங்கள் சம்பந்தமாகப் பல்வேறு வகையான வழக்குகள் யாழ். மாவட்ட நீதிமன்றங்களிலும் அதற்கு அப்பாலும் இடம்பெற்றுக்கொண்டு இருக்கின்றன.

ஏனைய மதங்கள் எவையும் இத்தகைய எண்ணிக்கையான வழக்குகளை நீதிமன்றங்களுக்குக் கொண்டு செல்லவில்லை. இந்நிலைமையை இட்டு கவலைப்படுவதுடன் வெட்கப்படவேண்டிய நிலையிலும் நாம் ஒவ்வொருவரும் இருக்கின்றோம்.

இத்தகைய துர்ப்பாக்கிய நிலைமைகளில் இருந்து விடுபடுவதற்கு இந்து ஆலயங்கள் யாவும் ஒன்றிணைக்கப்பட்டு செயற்படுவதற்கான வழிவகைகளை ஏற்படுத்தவேண்டும் எனவும் அவர் கேட்டுக் கொண்டார். (ம-86)

---

**நாளை**

புரட்டாதி 01
வியாழக்கிழமை
(18.09.2003)
திதி : சஷ்டமி
முற்பகல் 9.36 வரை
நட்சத்திரம்: ரோகிணி
காலை 7.05
சுபநேரம்: 7.33 - 9.03
ராகுகாலம்: 1.33 - 3.03
(பழைய நேரப்படி)

---

**உதயவாக்கு**

மனித இனத்துக்குச் சேவை செய்வதற்கு அரசியலில் சேரத்தேவையில்லை

---

## சட்ட விரோதமாக மின்சாரம் பெற்ற மூவருக்கு ரூ.15 ஆயிரம் அபராதம்

சட்டவிரோதமாக மின்சாரம் பெற்ற நீர்வேலியை சேர்ந்த மூவருக்கு யாழ். நீதிமன்றம் தலா 5ஆயிரம் ரூபா அபராதம் விதித்துள்ளது.

சின்னத்துரை யோகநாதன், சியாமளா ஸ்ரீவிஜயகுமார் மற்றும் புத்தூர் மேற்கைச் சேர்ந்த கந்தையா செல்வராசா ஆகிய மூவரையும் சட்டவிரோதமாக மின்சாரம் பெற்ற குற்றச்சாட்டின் பேரில் கைதுசெய்த பொலீஸார் யாழ் நீதிமன்றில் ஆஜர் செய்தனர்.

இவர்கள் தமது குற்றத்தை ஏற்றுக்கொண்டதையடுத்து யாழ். நீதிவான் ஆர்.ரி.விக்னராஜா தலா 5ஆயிரம் ரூபா அபராதம் விதித்தார். (ம-8)

---

## மருதடி விநாயகர் ஆலயத்தை விஸ்தரிப்பதற்கு நடவடிக்கை

பிரசித்திபெற்ற மானிப்பாய் மருதடி விநாயர் ஆலயம் விஸ்தரிப்புச் செய்யப்பட்டு புனரமைக்கப்படவுள்ளது.

ஆலய தர்மகர்த்தா சபை இதற்கான திட்ட வரைவு ஒன்றைத் தயாரித்துள்ளதாகவும், விரைவில் புனரமைப்பு வேலைகள் ஆரம்பமாகவுள்ளதாகவும், ஆலய தர்மகர்த்தா சபையின் தலைவர் க.சிதம்பரநடராஜா தெரிவித்துள்ளார்.

இப்புனரமைப்பு பணிகளுக்குப் பல்வேறு வகையிலும் உதவி செய்ய உள்நாட்டிலும், வெளிநாடுகளிலும் வசிக்கும் மானிப்பாயைச் சேர்ந்த விநாயகர் அடியார்கள் பலர் முன்வந்துள்ளனர் என்றும் - அவர் மேலும் தெரிவித்தார்.

உற்சவ காலங்களில் வழிபாட்டுக்காக வரும் பெரும் எண்ணிக்கையிலான அடியார்களின் நலன்கருதி உள்வீதி மற்றும் வெளி வீதி என்பன விஸ்தரிக்கப்படவுள்ளன. ஆலயத்தில் தற்போதுள்ள தேர்முட்டி, தீர்த்தக் கேணி என்பனவும் நவீன முறையில் திருத்தியமைக்கப்படவுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டது.

ஆலய வழிபாடுவோர் சபையினரும் இத்திட்டத்திற்கு ஆதரவு வழங்கி ஒத்துழைக்க முன்வந்துள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டது.

இதேவேளை - ஆலயத்திற்கு தெற்கு வீதியிலுள்ள ஆலயத்திற்கு சொந்தமான அறுபது பரப்பு காணியும் இந்த விஸ்தரிப்பு திட்டத்திற்குப் பயன்படுத்தப்படவுள்ளது. ஆலய கட்டடத்தைக் கருங்கல்லினால் அமைப்பதற்கும் முடிவு செய்யப்பட்டுள்ளது.

(ம-135)

## தெங்கு செய்கையாளருக்கு அவசர கலந்துரையாடல்

வடமாகாண தெங்கு செய்கையாளர் சங்க அங்கத்தவர்களுக்கான அவசர கலந்துரையாடல் ஒன்று எதிர்வரும் சனிக்கிழமை காலை 10 மணிக்கு கொடிகாமம் திருநாவுக்கரசு மகாவித்தியாலயத்தில் நடைபெறவுள்ளது.

ஒக்ரோபர் மாதம் முதலாம் திகதி நடைபெறவுள்ள சங்க ஆண்டுவிழாவில இலங்கை தெங்கு பயிர்ச்செய்கையாளர் சபைத் தலைவர் லிங்கொன் பேர்னாண்டோ கலந்துகொள்ளவிருப்பதால் அவரிடம் கோரவுள்ள விடயங்கள் பற்றி இந்தக் கலந்துரையாடலில் ஆராயப்படவுள்ளது. சங்க உறுப்பினர்கள் மற்றும் தோட்ட உரிமையாளர்களை இதில் தவறாது கலந்து கொள்ளும்படி கேட்கப்பட்டுள்ளது.

தெங்கு புனர்நடுகை மானியத்தை அதிகரித்தல், தமது நஷ்டஈட்டுக்கு நாடாளுமன்றத்திடம் இருந்து விசேட நிதி ஒதுக்கீடு பெறுதல் அல்லது மாற்று நடவடிக்கையை ஆராய்தல் என்பன கலந்துரையாடலில் ஆராயப்படவுள்ள முக்கிய விடயங்கள் என்று யாழ்மாவட்ட தெங்கு பயிர்ச்செய்கையாளர் சங்கத் தலைவர் அ.நல்லதம்பி தெரிவித்தார். (ம-ரி)

## குற்றவாளிகளை இலகுவில் கண்டுபிடிக்க புதிய விரல் அடையாளப் பிரிவு அறிமுகம்

கொழும்பு,செப்.17

நவீன தொழில் நுட்ப உபகரணங்களுடன் கூடிய விரல் அடையாளப் பிரிவொன்றை பொலீஸ்மா அதிபர் ரீ.ஈ.ஆனந்தராஜா நேற்று முன்தினம் திறந்து வைத்தார். இலங்கையில் முதன் முறையாக அறிமுகப்படுத்தப்பட்டிருக்கும் இந்த விரல் அடையாளப பிரிவுக்கு ஜப்பான் மற்றும் அமெரிக்கா ஆகிய நாடுகளின் பொலீஸார் பயன்படுத்தும் கருவிகள பொருத்தப்பட்டுள்ளன. இந்தப் பிரிவின் மூலம் குற்றவாளிகளை மிக இலகுவாகக் கண்டுபிடிக்க முடியும் எனக் கூறப்படுகிறது. கொழும்பு டொரிங்டன் சதுக்கத்தில் அமைந்துள்ள குற்றவியல் மத்திய ஆய்வு நிலையத்திலேயே இப்பிரிவு திறக்கப்பட்டுள்ளது.

இப்பிரிவு இலங்கையின் ஏனைய் பிரதான நகரங்களில் உள்ள பொலஸ நிலையங்களுக்கும் விஸ்தரிக்கப்படவுள்ளது எனத் தெரிவிக்கப்பட்டது. ஜப்பான், அமெரிக்கா ஆகிய நாடுகளில் பயிற்சி பெற்ற பொலீஸ் உத்தியோகத்தர்கள் புதிய பிரிவுக்கு நியமிக்கப்பட்டுள்ளனர்.

## சேமலாப நிதியில் மோசடி!

கொழும்பு,செப்.17

ஊழியர் சேமலாப நிதிக்கு நிதி செலுத்தி அந்த நிதியை மீளப் பெறுவதற்கு முன்னர் மரணமானவர்களின ஆவணங்களில் மாற்றங்களை மேற்கொண்டு அந்த நிதியை அபகரித்த 250 சம்பவங்கள் தொடர்பாக தற்போது இரகசியப் பொலீஸார் விசாரனைகளை ஆரம்பித்துள்ளனர் எனத் தெரிவிக்கப்படுகிறது.

இந்த விடயம் தொடர்பாக தொழில திணைக்களத்தின் மத்திய ஆவணக் களஞ்சியத்தைச் சேர்ந்த ஐந்து ஊழியர்கள் பணியிலிருந்து இடைநிறுத்தப்பட்டுள்ளனர் என தொழில் ஆணையாளர் நாயகம் மஹிந்த மடிஹேறவா தெரிவித்துள்ளார்.

போலியாகத் தயாரிக்கப்பட்ட விவாகச் சான்றிதழ், மரணச்சான்றிதழ் ஆகியவற்றைச் சமர்ப்பித்து மரணமான சேமலாப நிதி உறுப்பினர்களின் பணிக்கொடைகள் பெறப்பட்டுள்ளன எனவும்-

தொழில் திணைக்கள ஆவணக் களஞ்சியத்தில் சுமார் 20 லட்சம் உறுப்பினர்களின் கோவைகள் (FILES) பேணப்பட்டுவருகின்றன எனவும்- கூறப்படுகிறது.

இந்த மோசடியைத் தடுக்கும் நோக்கில் மத்திய ஆவணக் களஞ்சியத்திற்கு வெளியார் செல்ல முடியாத வகையில் அதி உச்சப் பாதுகாப்பு ஏற்படுத்தப்பட்டுள்ளது.

மேலும் இந்த மோசடிகளைத் தவிர்ப்பதற்காக அனைத்து விவரங்களையும் கணனி மயப்படுத்துவதெனவும்-

சேமலாப நிதித்திட்டத்தின் கீழ் உள்ள உறுப்பினர்கள் அனைவரதும் கைவிரல் அடையாளங்களைப் பெறுவது எனவும்-

தொழில் திணைக்களம் தீர்மானித்துள்ளது எனத் தெரிவிக்கப்படுகிறது. (ஒ)




யாழ். போதனா வைத்தியசாலையில் மானிப்பாய் றோட்டறக்ட் கழக உறுப்பினர்கள் அண்மையில் இரத்ததானம் செய்தனர். உறுப்பினர் ஒருவர் இரத்தம் வழங்குவதையும் அருகில் யாழ். போதனா வைத்தியசாலை இரத்த வங்கி பொறுப்பதிகாரி டாக்டர் ஆர்.சிவசங்கர் அமர்ந்திருப்பதையும் படத்தில் காணலாம். (ஐ-185)

## சுகாதாரச் சேவை ஊழியர்கள் இன்றுமுதல் வேலை நிறுத்தம்

சுகாதாரச் சேவை தொழிற்சங்க கூட்டமைப்பு இன்று 17ஆம் திகதி முதல் தொடர்ச்சியான வேலை நிறுததத்தில் ஈடுபடும். சம்பள முரண்பாடுகளை நீக்குவது தொடர்பான யோசனைகளை சுகாதார அமைச்சு வழங்காததற்கு ஆட்சேபம் தெரிவித்தே வேலை நிறுத்தம் மேற்கொள்ளப் படவிருக்கிறது.

இந்த யோசனைகள் 14 நாள்களுக்குள் வழங்கப்படுமென அமைச்சின் செயலாளர் அளித்த உறுதிமொழி நிறைவேற்றப்படவில்லை என்று கூட்டமைப்பின் அமைப்பாளர் ரவி குமுதேஷ் தெவித்திருக்கிறார். சம்பள முரண்பாடுகளை நீக்குவதற்கான சுற்றறிக்கை வெளியிடப்படும் வரை வேலை நிறுத்தத்தைத் தொடருவதெனக் கூட்டமைப்பின் நிர்வாகக்குழு தீர்மானித்திருக்கிறது.

**கோப்பாய் கால்நடை அதிகாரி பிரிவில்**

## மாடுகளுக்கு தொண்டை அடைப்பான் தடுப்பூசி

அச்சுவேலி,செப்.17

கோப்பாய் கால்நடை வைத்திய அதிகாரி பிரிவில் 20 நிலையங்களில வைத்து மாடுகளுக்கான தொண்டை அடைப்பான் நோய்த் தடுப்பூசி ஏற்றப்படவுள்ளது.

மாரி மழையை அடுத்துவரும் காலப் பகுதியில் தொண்டை அடைப்பான் நோய் மாடுகளை பெருமளவில பாதித்து மரணமடையச் செய்வதால் நோய்த்தடை மருந்தை உரிய தினங்களில் மாடுகளுக்கு வழங்கி உதவுமாறு கோப்பாய் பிரதேச கால்நடை வைத்திய அதிகாரி அறிவித்துள்ளார்.

எதிர்வரும் 19ஆம் திகதி வெள்ளிக்கிழமை கட்டைப்பிராய் கலைமணி சனசமூகநிலையம், கல்லியங்காடு ஞானபாஸ்கரோதய சனசமூக நிலையத்திலும்-

20ஆம் திகதி சனிக்கிழமை இருபாலை கிழக்கு மடத்தடி, கோப்பாய் வெள்ளெருவைப்பிள்ளையார் கோயிலடியிலும்-

22ஆம் திகதி திங்கட்கிழமை கோப்பாய் கந்தசுவாமி கோயிலடி, நவக்கிரி எல்லாளன் சனசமூக நிலையத்திலும்-

23ஆம் திகதி செவ்வாய்க்கிழமை உரும்பிராய் திருக்குமாரன் சனசமூக நிலையம், உரும்பிராய் ஞானவைரவர் கோயிலடியிலும்-

24ஆம் திகதி புதன்கிழமை கந்தன் பூதவிநாயகர் கோயிலடி, கரந்தன் இராமுப்பிள்ளை வித்தியாலயத்திலும்-

25ஆம் திகதி வியாழக்கிழமை சிறுப்பிட்டி தெற்கு கிராம அலுவலர் அலுவலகம், சிறுப்பிட்டி கிழக்கு கிராம அலுவலர் அலுவலகத்திலும்-

26ஆம் திகதி வெள்ளிக்கிழமை புத்தூர் கிழக்கு குருபரன் சனசமூக நிலையம், புத்தூர் சிவன் கோயிலடியிலும் -

27ஆம் திகதி சனிக்கிழமை அச்செழு கிராம அபிவிருத்தி நிலையம், அச்செழு பூலோகச் செட்டி வினோபாஜி சனசமூக நிலையத்திலும் -

28ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை ஆவரங்கால் சிவன்கோயிலடி, அச்சுவேலி தெற்கு விக்னேஸ்வரா சனசமூக நிலையத்திலும் -

29ஆம் திகதி திங்கட்கிழமை பத்தமேனி பிள்ளையார் கோவிலடி, இடைக்காடு சனசமூக நிலையத்திலும் - வைத்து தடுப்பூசி ஏற்றப்படும்.

தினமும் காலை 7மணி முதல் பிற்பகல் 2மணி வரை தடுப்பூசி மருந்து ஏற்றுவதற்கு ஏற்பாடுகள் செயயப்பட்டுள்ளன என்று கோப்பாய் பிரதேச கால்நடை வைத்திய அதிகாரி அறிவித்துள்ளார். (எ-11)

## வாகன பதிவுகள் அதிகரிப்பு

மோட்டார் வாகனங்களைப் பதிவு செய்தல் கடந்த வருடம் முதல 6 மாதங்களை விட இவ்வாண்டு முதல் 6 மாதங்களில் இரண்டு மடங்காக அதிகரித்துள்ளது என மோட்டார் வாகனப் பதிவாளர் காமினி செனரத் தெரிவித்துள்ளார்.

கடந்த வருடம் மொத்தமாக 42 ஆயிரம் வாகனங்கள் பதிவுசெய்யப்பட்டுள்ளன. ஆனால், இவ்வாண்டு முதல 6 மாத காலத்திற்குள் 87 ஆயிரம் வாகனங்கள் பதிவு செய்யப்பட்டுள்ளன எனவும் -

அவற்றுள் 60 சதவீதமான வாகனங்கள் மேல் மாகாணத்தைச சேர்ந்தவை எனவும் - அவர் தெரிவித்தார்.


## 4 அற்புத மாலைகள் 4

வியாதியா? பிசாசின் பிடியா? தீராத பிரச்சினையா? இயேசு இன்று ஆன்மீக விடுதலை தருகிறார்.

தேவனால் வல்லமையாக உபயோகிக்கப்படும் தேவ மனிதன் சகோ.என்.ஜீவானந்தம் தேவ செய்தி அளிப்பார்.

இடம் : அசெம்ளி ஒப் கோட், 14, இராசாவின் தோட்டம் வீதி, யாழ்ப்பாணம்.
காலம் : 18,19,20,21 புரட்டாதி 2003
நேரம் : மாலை 4.31 மணி.

அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

அசெம்ளி ஒப் கோட்,
யாழ்ப்பாணம். -சபை ஊழியன்-

(22597)(21-11-14)


## முதலாம் ஆண்டு நினைவஞ்சலி

| தோற்றம் | மறைவு |
|---|---|
| 26 | 30 |
| - | - |
| 06 | 08 |
| - | - |
| 1935 | 2002 |



மாதகல்

**அமரர் கதிரவேற்குருக்கள் செல்லப்பாக்குருக்கள்**

(வேதாகம பூஷணம், வைதீக சாகரம்)
திதி: ஆவணி மாத அபரபக்ஷ ஸப்தமி

எங்களை நல்வழிப்படுத்தி வழிகாட்டிய தாங்கள் ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கின்றோம்.

- குடும்பத்தினர்.

மாதகல் கிழக்கு,
மாதகல்.

(22650)(21-11-14)

## 31ஆம் நாள் நினைவஞ்சலி



திருமதி கந்தசாமி
**யசோதரஞ்சினி**

| தோற்றம் | மறைவு |
|---|---|
| 09.02.1953 | 18.08.2003 |

அன்புக்கும் பண்புக்கும் இலக்கணமாய்த் திகழ்ந்தீர்
ஆதரவு மொழி பேசி அரவணைத்துக் காத்தீர்–உங்கள்
அன்பு முகம் எங்கள் நெஞ்சில் நீங்காது நிறைந்திருந்து
என்றும் எப்போதும் நினைவூட்டிக் கொண்டேயிருக்கும்!

இன்று (17.09.2003) புதன்கிழமை எமது இல்லத்தில் நடைபெறுகின்ற வீட்டுக் கிருத்திய நிகழ்வில் கலந்துகொள்வதோடு தொடர்ந்து இடம் பெறுகின்ற ஆத்மசாந்திப் பிரார்த்தனை, மதிய போசனம் ஆகியவற்றிலும் பங்கேற்குமாறு உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

எமது அன்புத் தெய்வத்தின் மறைவுச் செய்தி கேட்டு உடன் இல்லம் நாடி வந்து ஆறுதலும் தேறுதலுமளித்த அன்புள்ளங்களுக்கும் தபால், தொலைபேசி மூலம் அனுதாபந்தெரிவித்தோருக்கும் மற்றும் பல வழிகளிலும் எமக்கு உதவிகள் புரிந்த அனைவருக்கும் எமது நெஞ்சம் நெகிழ்ந்த நன்றிகளைத் தெரிவித்துக்கொள்கின்றோம்.

8/1, பெருமாள் கோயில்
வடக்கு வீதி,
யாழ்ப்பாணம்.

-பிள்ளைகள்.

UTHAYAN (22649)(11-14)

# எமது மக்களின் ஐயத்தை நீக்கும் வகையில் இந்தியாவின் செயற்பாடு அமையவேண்டும்!

## தியாகி திலீபன் நினைவு நிகழ்வில் சி.வீ.கே.சிவஞானம் உரை

யாழ்ப்பாணம்,செப்.17

தமிழ் மக்களின் பிரச்சினைகள் தொடர்பாக இந்தியாவின் நிலைப்பாடு குறித்து எமது மக்கள் ஐயங் கொண்டுள்ளனர். எனவே, எமது மக்களின் மனங்களில் உள்ள அந்த ஐயப்பாட்டை நீக்கும் விதத்தில் இந்தியாவின் செயற்பாடுகள் அமைய வேண்டும்.

- இவ்வாறு நேற்றுமுன்தினம் நல்லூரில் நடைபெற்ற தியாகி திலீபனின் நினைவு தின ஆரம்ப நிகழ்வில் கலந்துகொண்டு உரையாற்றிய யாழ். - நல்லூர் கோட்ட தேசிய எழுச்சிப் பேரவையின் செயலாளர் சி.வ.கே.சிவஞானம் தெரிவித்தார்.

அவர் பேசுகையில் மேலும் தெரிவித்ததாவது:-

எமது ஆயுதப் போராட்டத்தை முதலில் ஆதரித்ததும் இந்தியாதான். அதே இந்தியாதான் இன்று எமது போராட்டத்திற்கு எதிராகவுள்ளது. தமிழ் மக்கள் இந்தியாவிற்கு ஒருபோதும் எதிரானவர்கள் அல்லர். எனினும், எமது பிரச்சினைகள் தொடர்பாக இந்தியாவின் போக்கு எமது மக்கள் மத்தியில் ஒரு வெறுப்பையும், ஐயத்தையும் தோற்றுவித்துள்ளது. எனவே, எமது மக்கள் மத்தியில் உள்ள ஐயப்பாட்டை நீக்குவதற்கு இந்தியா விரைந்து செயற்படவேண்டும்.

இந்திய மண்ணில் அஹிம்சையைத்தான் காட்டமுடியும் என்பதை உணர்ந்த எமது தேசியத் தலைவர் தமது தொலைத்தொடர்புக் கருவியை இந்திய புலனாய்வு அமைப்பினர் பறித்தெடுத்தபோது அதனை மீண்டும் தம்மிடம் ஒப்படைக்கும் வரை உண்ணாவிரதமிருந்தார். அதில் அவர் வெற்றியும் கண்டார்.

அதேபோல் இங்கு எமது மண்ணில் ஆயுதப் போராட்டம் மூலம் தான் வெற்றி பெறமுடியும் என்பதை இந்தியாவும் உணர்ந்த நிலையில் தலைவர் ஆயுதப் போராட்டத்தை முன்னெடுத்தார். அதிலும் வெற்றி கண்டார்.



நிகழ்வில் உரையாற்றும் சி.வி.கே.
(படம்: அலுவலகப் படப்பிடிப்பாளர்)

எனவே, இவை அனைத்தையும் இந்தியா புரிந்துகொண்டு எமது போராட்டத்திற்கு ஆதரவு வழங்குவதுடன், இடைக்கால நிர்வாகத்தையும் விடுதலைப் புலிகளுக்குப் பெற்றுத்தர வேண்டும் - என்றார் அவர்.(ஒ-8-86)

### போதையில் சீர்கேடாக நடந்த

# பிரதேசசபை முன்னாள் தலைவருக்கு ஒத்திவைக்கப்பட்ட 6 மாத சிறை!

யாழ்ப்பாணம்,செப்.17

பொதுமக்கள் கூடியிருந்த இடத்தில் குடிபோதையில் சீர்கேடான முறையில் நடந்துகொண்ட முன்னாள் பிரதேச சபைத் தலைவர் உட்பட இருவருக்கு யாழ். நீதிமன்றம் 3 வருடத்திற்கு ஒத்திவைக்கப்பட்ட 6 மாத கடுழிய சிறைத் தண்டனை விதித்துள்ளது.

கடந்த 11 ஆம் திகதி யாழ். ஐந்து சந்திப்பகுதியில் நடைபெற்ற சம்பவம் ஒன்றில் இவ்வாறு சீர்கேடான முறையில் நடந்துகொண்ட யாழ். ஸ்ரான்லி வீதியைச் சேர்ந்த பாக்கியராசா விஷ்ணுகாந்தன், 'புளொட்' அமைப்பின் முன்னாள் சாவகச்சேரிப் பிரதேச சபைத் தலைவரான யாழ். வேம்படி வீதியைச் சேர்ந்த அன்ரன் பொன்னையா ஆகியோர் யாழ். பொலீஸாரினால் நேற்றுமுன்தினம் நீதிமன்றில் ஆஜர் செய்யப்பட்டனர்.

இவர்களுக்கு 3 வருடங்களுக்கு ஒத்திவைக்கப்பட்ட தலா 6 மாத கடுழியச் சிறைத்தண்டனை விதித்த யாழ். நீதிமன்ற நீதிவான் ஆர்.ரி.விக்னராஜா அவர்களைத் தலா மூவாயிரம் ரூபா தண்டப்பணமும் தலா இரண்டாயிரம் ரூபா தர்மப்பணமும் செலுத்துமாறும் உத்தரவிட்டார்.

(ம-8)

# கல்வியியற் கல்லூரி வளாகத்தில் பொலித்தீன் பாவனைக்குத் தடை!

### பீடாதிபதி கமலநாதன் அறிவிப்பு

யாழ்ப்பாணம்,செப்.17

யாழ். 'தேசிய கல்வியியற் கல்லூரி வளவினுள் 'பொலித்தீன் பைகள்' மற்றும் 'ஸெஞ்சீற்' என்பவற்றின் பாவனைக்குத் தடை விதிக்கப்பட்டுள்ளதாக கல்லூரியின் பீடாதிபதி தி. கமலநாதன் அறிவித்துள்ளார்.

கல்லூரியின் விடுதிகளில் தங்கி கல்வி கற்றுவரும் தமது பிள்ளைகளைப் பார்வையிட்டு நலன் விசாரிப்பதற்கு வரும் பெற்றோர் அவர்களுக்குரிய உணவுப் பொருள்களையும் ஏனைய பொருள்களையும் பொலித்தீன் பைகளில் எடுத்துவருகின்றனர்.

இவ்வாறு எடுத்து வரப்படும் பொலித்தீன் பைகள் எதிர்பாராத விதமாக கல்லூரி வளவினுள் வீசப்படுகின்றன. இதனால் கல்லூரியின் சூழல் மாசடைகின்றது.

இதனை அவதானித்த கல்லூரியின் சூழல் பாதுகாப்புச்சபையினா பொலித்தீன் பாவனையை முற்றாகத் தடைசெய்துள்ளனர். எனவே, கல்லூரிக்கு வருகை தருகின்ற மாணவர்களின் பெற்றோரும், ஏனையோரும் இது விடயத்தில் பூரண ஒத்துழைப்புடன் செயற்பட வேண்டும் - என்றும் அவர் கேட்டுள்ளார். (எ-10)

### தமிழகத்தில் உள்ள அகதிகளின்

# மீள்குடியமர்வு வாய்ப்புக் குறித்து அறிக்கை கோருகிறது அமைச்சு

யாழ்ப்பாணம்,செப்.17

தமிழக அகதிமுகாம்களில் தங்கியுள்ள குடாநாட்டைச் சேர்ந்த 500 குடும்பங்களை இவர்களது சொந்த இடங்களில் மீளக்குடியமர்த்தும் வாய்ப்புக் குறித்து யாழ். அரச அதிபரிடம் அறிக்கை கோரப்பட்டுள்ளது.

அகதிமுகாம்களில் தங்கியுள்ள அகதிகளின் பெயர், விலாசம் உட்பட சகல விவரங்களும் அடங்கிய பட்டியல்கள் தமிழக அதிகாரிகளால் புனர்வாழ்வு, அகதிகள் மீள்குடியமர்வு அமைச்சுக்கு அனுப்பப்பட்டுள்ளன.

அந்தப்பட்டியல்களில் குடாநாட்டைச் சேர்ந்த ஐந்நூறு குடும்பங்களின் விவரப்பட்டியல் யாழ். செயலகத்துக்கு அமைச்சால் அனுப்பப்பட்டுள்ளன.

பிரஸ்தாப குடும்பங்கள் சொந்த இடங்களில் மீளக்குடியமரமுடியுமா? அவர்களின் நிரந்தர வதிவிடம் அதி பாதுகாப்பு வலயப் பகுதியில் அமைந்துள்ளதா? என்பன தொடர்பான விவரமான அறிக்கை ஒன்றைச் சமர்ப்பிக்கும்படி புனர்வாழ்வு, அகதிகள் மீள்குடியமர்வு அமைச்சு யாழ். அரச அதிபரைக் கேட்டுள்ளது.

பிரதேச செயலர்களுடன் ஆராய்ந்து விவரங்களை யாழ். அரச அதிபர் சேகரிக்கவிருக்கின்றார். (ஒ-3)

# மன்னாரில் அடுத்த மாதம் ஐந்து நாள்கள் கூத்து விழா

### புலிகளின் கலை, பண்பாட்டுக் கழகம் நடத்தும்

யாழ்ப்பாணம்,செப்.17

தமிழீழ விடுதலைப் புலிகளின் கலை, பண்பாட்டுக் கழகத்தினர் அடுத்தமாத இறுதியில் மாபெரும் கூத்துவிழா ஒன்றினை மன்னாரில் நடத்தவுள்ளனர். இக்கூத்துவிழா, ஐந்து நாள்கள் இடம்பெறவுள்ளது.

இத்தகவலை கலை, பண்பாட்டுக் கழகப் பொறுப்பாளர் புதுவை இரத்தினதுரை தெரிவித்தார். சமீபத்தில் யாழ். திருமறைக் கலாமன்றத்தில் இடம்பெற்ற ஈழத்து நாட்டுக் கூத்து விழா இறுதிநாள் நிகழ்வில் கலந்துகொண்டு சிறப்புரையாற்றிய போதே அவர் இதனைத் தெரிவித்தார்.

மன்னாரில் நடைபெறவுள்ள கூத்து விழாவுக்கு ஈழத்தின் சகல கூத்துக் கலைஞர்களிடம் இருந்தும் ஒத்துழைப்புப் பெறப்படவுள்ளதாகவும் அவர் மேலும் தெரிவித்தார். (ம-9)

### யோகாசன கண்காட்சி

வடமராட்சி,செப்.17

மாணவர்களின் உடல்வள நலன் கருதி துர்ப்பளை யோகசாந்தி நிலையத்தால் நடத்தப்படும் யோகாசன கண்காட்சி இன்று புதன்கிழமை காலை 9.00 மணிமுதல் பருத்தித்துறை வேலாயுதம் மகாவித்தியாலயத்தில் அதிபர் எஸ். ஜெகநாதன் தலைமையில் நடைபெறவுள்ளது.

(எ-173)

# புனரமைப்பு அதிகாரத்துடனான இடைக்கால நிர்வாகம் அவசியம்

### சமசமாஜ செயலாளர்

கொழும்பு,செப்.17

அரசுக்கும் விடுதலைப் புலிகளுக்கும் இடையிலான பேச்சுக்களின் அடிப்படையில் இடைக்கால நிர்வாகம் ஒன்று அவசியமானதாகும் என்று சமசமாஜ கட்சியின் பொதுச் செயலாளரான பட்டி வீரக்கோன் கூறுகிறார்.

சிங்கள நாளிதழ் ஒன்றுக்கு வழங்கியிருக்கும் பேட்டியில் அதனைக் கூறியிருக்கும் அவர், உலக மயமாக்கலின் கீழ் தமிழீழத்தை உருவாக்க முடியாது எனவும், அனைவரும் ஒன்றுபடுவதையன்றி பிரிந்துசெல்ல இந்த உலகில் இப்பொழுது இடமில்லை எனவும் குறிப்பிட்டிருக்கிறார்.

கேள்விகளுக்குப் பதிலளித்து அவர் மேலும் கூறியிருப்பதாவது:-

வடக்கு - கிழக்கு புனரமைப்புகளின்றி, ஆயுதமேந்திய ஒரு பிரிவினரிடம் அரசியல் அதிகாரத்தை வழங்குவது ஒரு பிரச்சினையாகும். புலிகளிடம் துப்பாக்கிகள் இருப்பதால் ஏனைய கட்சிகளினதும் மக்களினதும் உரிமைகள் பாதுகாக்கப்படுமா என்ற பிரச்சினை உள்ளது.

அவர்கள் ஆயுதமேந்தியிருக்கும் வரை அரசியல் அதிகாரத்தை வழங்காமல் புனரமைப்புக்கான அதிகாரத்தை மட்டும் வழங்குமாறு நாம் கூறுகிறோம். எமது ஆள்கள் போய்ச் செய்வதைவிட புலிகள் முற்றாகப் புனரமைப்பை மேற்கொள்வார்கள்.

உலக அபிப்பிராயத்துக்கு எதிராக சில மோதல்கள் இருந்தாலும் புலிகள் மீண்டும் ஒரு யுத்தத்துக்குச் செல்ல முடியாது. அதனால் அரசுடன் பேச்சு நடத்தி தீர்வுகாண்பதைத் தவிர அவர்களுக்கு வேறு வழியில்லை.

# பாடசாலைக்குச் சென்ற மாணவனைக் காணோம்

யாழ்ப்பாணம்,செப்.17

'பாடசாலைக்குச் சென்ற மாணவனைக் காணவில்லை என்று மனித உரிமைகள் ஆணைக்குழுவின் யாழ். அலுவலகத்தில் நேற்றுமுன்தினம் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது.

சாவகச்சேரி ரிறிபேர்க் கல்லூரியில் தரம் 9இல் கல்வி கற்கும் மணிவண்ணன் ஜெயஜோதித் (வயது 14) என்ற மாணவன் கடந்த 11ஆம் திகதி வீட்டிலிருந்து பாடசாலைக்கு சென்ற பின்னர் வீடு திரும்பவில்லை என்று மாணவனின் பெற்றோரால் முறைப்பாட்டில் தெரிவிக்கப்பட்டுள்ளது.'

அவர் பற்றிய தகவல் அறிந்தவர்கள் எஸ். மணிவண்ணன், டச் வீதி, சாவகச்சேரி என்ற முகவரியுடன் அல்லது மனித உரிமைகள் ஆணைக்குழுவின் யாழ். அலுவலகத்துடன் தொடர்புகொள்ளுமாறு கேட்கப்பட்டுள்ளனர்.

(ம-5)

# பல்தேசிய அமைப்புகளுக்கு புலிகள் விடுத்த அழைப்பு வரவேற்கக்கூடியது

## ஜப்பானிய விசேட தூதர் தெரிவிப்பு

கொழும்பு,செப்.17

பல்தேசிய அமைப்புகளுக்கு புலிகள் அழைப்பு விடுத்துள்ளமை வரவேற்கக்கூடியதே.

- இவ்வாறு தெரிவித்தார் ஜப்பானிய விசேட தூதுவர் யசூஷி அகாஷி.

நேற்றுமுன்தினம் கொழும்பு ஹைலைறி ஹோட்டலில் இடம்பெற்ற செய்தியாளர்கள் மாநாட்டிலேயே இதனை அவர் சொன்னார்.

அங்கு கேட்கப்பட்ட சில கேள்விகளும் அதற்கு விசேட தூதுவர் அளித்த பதில்களும் வருமாறு:-

கேள்வி:- பல்தேசிய அமைப்புகளுக்கு புலிகள் அழைப்பு விடுத்துள்ளனர். இச்சந்திப்பு விரைவில் கிளிநொச்சியில் நடைபெறுமெனத் தெரிவிக்கப்படுகிறதே, இது தொடர்பாக உங்கள் கருத்து என்ன?

பதில்:- இது வரவேற்கக் கூடியது. யுத்தத்தால் பாதிக்கப்பட்ட மக்கள் சகஜ வாழ்க்கை வாழ வழிசெய்ய வேண்டுமென அவர்கள் விரும்புகின்றனர். இதில் தவறு ஏதுமில்லை.

கேள்வி:- இடைக்கால கட்டமைப்புக்கான புலிகளின் ஆலோசனைகள் ஏற்றுக்கொள்ளப்படாவிட்டால் பேச்சுக்கு வரப்போவதில்லையெனப் புலிகள் தெரிவித்துள்ளனர் என்று சில பத்திரிகைகளில் செய்தி வெளியாகியுள்ளதே?

பதில்: இந்த வார்த்தைப் பிரயோகங்களைத் தமிழ்ச் செல்வன் பாவிக்கவில்லை இடைக்கால நிர்வாகக் கட்டமைப்புக்கான தமது ஆலோசனைகளை அரசு ஏற்றுக்கொள்ளுமென்றே அவர்கள் நம்புகின்றனர்.

கேள்வி:- பேச்சுகள் ஆரம்பமாகி ஒரு வருடம் பூர்த்தியாகிவிட்டது. இந்த நிலையில், பேச்சுகள் குறித்து சர்வதேச சமூகத்தின் கரிசனை குறைந்துவிட்டது போலிருக்கிறதே?

பதில்:- இந்தோனேஷியா, ஈராக் போன்ற நாடுகளில் நடைபெற்ற சம்பவங்கள் காரணமாக சர்வதேச சமூகத்தின் கவனம் இலங்கையிலிருந்து சற்றுத் திரும்பியிருக்கலாம். ஆனால், இலங்கையின் சமாதானப் பேச்சுக்கள் குறித்த கரிசனை குறைந்து விடவில்லை. சமாதானத்துக்கான சூழ்நிலை இன்னும் நிலவுகிறது. இலங்கையின் சமாதான செயற்பாடுகளுக்கும் பொருளாதார அபிவிருத்திக்கும் எப்போதும் ஜப்பான் உதவிபுரியும்.

கேள்வி:- மேல்கொத்மலை நீர் மின் திட்டம் குறித்து?

பதில்: பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவுடனான சந்திப்பின்போது அமைச்சர் ஆறுமுகன் தொண்டமான் இது விடயம் குறித்து பிரஸ்தாபித்தார். இது குறித்து ஆராய்வதாக தெரிவித்தேன்.

கேள்வி:- நீங்கள் இந்தியா செல்லப்போவதாகத் தெரிவித்தீர்கள் அங்கு யார்,யாரைச் சந்திப்பீர்கள்? உங்கள் விஜயத்தின் நோக்கம் என்ன?

பதில்:- இந்தியாவுக்கான கடந்த விஜயத்தின்போது சந்தித்தவர்களைத் தான் இம் முறையும் சந்திப்பேன். இலங்கையின் சமாதான முன்னெடுப்புகள் குறித்து அவர்களுக்கு விளக்குவதே எனது நோக்கம்.

கேள்வி:- பௌத்த பிக்குகள் சமதான பேச்சுக்கும் ஜப்பானின் தலையீட்டுக்கும் எதிர்ப்புத் தெரிவிக்கின்றனரே?



பதில்: பௌத்த பிக்குகளில் ஒரு பகுதியினர் எதிர்ப்புத் தெரிவிக்கலாம் ஆனால் பெரும்பாலான பௌத்தர்கள் சமாதான நடவடிக்கைகளுக்கு ஆதரவு தெரிவிக்கின்றனர் இதைப் பலர் என்னிடமே தெரிவித்துள்ளனர்.

- இவ்வாறு ஜப்பான் விசேட தூதுவர் யசூஷி அகாஷி தெரிவித்தார்.

# சின்னஞ்சிறு விளம்பரம்

### விற்பனைக்கு

வீட்டு வளர்ப்புக்கு உகந்த (கலப்பின) ஒரு மாதம் சினைப்படுத்திய பசுமாடு விற்பனைக்குண்டு. தொடர்பு: ப.கேதீஸ், 26, சீனிவாசகம் வீதி, யாழ்ப்பாணம். (22645)

### இறைச்சிக்கோழி விற்பனைக்கு

புறொயிலர் 1Kg 160/=. சுத்தம் செய்யப்பட்டது 1Kg 240/= மொத்தமாகவும் சில்லறையாகவும் விற்பனைக்குண்டு. தொடர்பு- 1)மான்ஸ் பாடசாலை வீதி, உடுவில். 2) பொன்னாலை வீதி, விதானை வளவு, மானிப்பாய். (22437)

### தென்னந்தோட்டம் விற்பனைக்கு

புலோப்பளையில் 28 ஏக்கரும் 15 பரப்புமுடைய தென்னந்தோட்டம் கிணற்றுடனும் உடைந்த வீட்டுடனும விற்பனைக்குண்டு. தொடர்பு: மகா, T.P. 0777 116695 அல்லது சிவராசா, இல.151, கச்சேரி நல்லூர் வீதி, யாழ்ப்பாணம். (22671)

### பூங்கன்று விற்பனை

குறோட்டன், பாம், முசந்தாஸ் (சிவப்பு, வெள்ளை, பிங்), ஐந்தூரியம், எவக்கிறீன், மஞ்சள் கொடிப்பூ, அரக்கேரியா, ஈரப்பலா, ரோசா ஆகிய கன்றுகள் விற்பனைக்குண்டு. 152/2, கோவில் வீதி, யாழ்ப்பாணம் (I.C.R.C.இற்கு அண்மையில்) T.P. 6563. (22530)

### வீடு வாடகைக்கு தேவை

யாழ்.மாநகர சபை எல்லைக்குள் அல்லது அதனை அண்டிய பகுதியில் வீடு வாடகைக்குத் தேவை. சகல வசதிகளுடனும் இருப்பது விரும்பத்தக்கது. தொடர்பு: விளம்பர இல. 2040, C/o உதயன், யாழ்ப்பாணம். (22660)

### மணமகன் தேவை

இந்து கௌரவ குடும்பம், ஒரே மகள், அழகானவர், பணம், வீடு காணிகளுக்கு உரித்தானவர் பெறுமதி எழுபது லட்சம். விரும்பும் மணமகன் உத்தியோகத்தர், ஆசிரியர், கனதியான நிறுவன உரிமையாளர், வயதெல்லை 37 - 44. தொடர்பு: விளம்பர இல:2041, மே/பா உதயன்.(22673)

### தவறிவிட்டது

சொர்ண வடலி வீதி, கொக்குவில மேற்கு, கொக்குவிலைச் சேர்ந்த பஞ்சாட்சரம் வாசவன் என்பவரது தேசிய அடையாள அட்டை (இல. 750502024V) பேர்சுடன் தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் மேற்காணும் முகவரியில் ஒப்படைக்கவும்.(22666)

### தேவை

பின்வரும் வேலைகளுக்கு பெண் பிள்ளைகள் தேவை.
1) கணனி இயக்குநர்.
2) தொலைபேசி இயக்குநர்.
3) போட்டோப் பிரதி எடுப்பவர்.
இடம்:-
கௌரி
தொலைத் தொடர்பு நிலையம்
கே.கே.எஸ். றோட் மருதனார்மடம்.
(21-11-15) (22016)

### உடன் தேவை

Computer Type setting தெரிந்த (Page maker or Corel draw) பெண்பிள்ளைகள் தேவை.
*தொடர்புகளுக்கு:*
222-6092 (Office)
0777-561579 (Cattel)
(22670) (21-11-15)

### University of Jaffna, Sri Lanka
### Faculty of Graduate Studies

**Post Graduate Diploma in Public Administration - 2001 /2002**
**Second Semester Examination**

The above examination will commence on 6th October, 2003 (Monday).Candidates could collect the application form and Admission Cards at the Office of the Dean, Faculty of Graduate Studies.

*Registrar,*
*University of Jaffna.*
16-09-2003 (C/30215) (26)

## மாபெரும் மென்பந்து கிரிக்கெட் சுற்றுப்போட்டி

ஞானபாஸ்கரோதய சங்க ஆண்டு நிறைவு விழாவை முன்னிட்டு
ஞானபாஸ்கரோதய சங்கம் **(G.P.S.)** நடத்தும்
மாபெரும் மென்பந்து கிரிகெட் சுற்றுப்போட்டி
(7பேர் பங்குபற்றும் 12 பந்து பரிமாற்றங்களைக் கொண்டது)
இச்சுற்றுப்போட்டியின் இறுதிப் போட்டியின் போது பின்வரும் சிறப்புப் பரிசில்கள் வழங்கப்படும்.

I) ஆட்டத்தொடர்நாயகன் II) ஆட்டநாயகன்
III) சிறந்த துடுப்பாட்ட வீரன் IV) சிறந்த பந்துவீச்சாளன்
V) சிறந்த களத் தடுப்பாளன்
VI) அதிகூடிய ஓட்டத்தைப் பெறும் வீரன்

விண்ணப்ப முடிவு திகதி: 22-09-2003
அணி ஒழுங்குத் தெரிவு: 23-09-2003
போட்டிகள் ஆரம்பம்: 25-09-2003

விண்ணப்பப் படிவங்களைப் பெறும் இடங்கள்:
**தயா நகைப் பூங்கா**
213C, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம். T.P.021-222-5846
**சிவன் தொலைத் தொடர்பகம்**
G.P.S.றோட், கல்வியங்காடு. T.P. 021-222-3303
**பிரகாந் தொலைத் தொடர்பகம்**
56B,பலாலி வீதி, திருநெல்வேலி.
*விளம்பர அனுசரணை:*
(22672) (26-11-15)

அசல் 22கரட் தங்க நகைகளை உத்தரவாதத்துடன் குறித்த தவணையில் பெற்றுக் கொள்ள நாடவேண்டிய இடம்:
**தயா நகைப்பூங்கா,**
213C, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.

உள்நாட்டு, வெளிநாட்டு தொலைத் தொடர்புகளை உடனுக்குடன் பெற்றுக் கொள்ள நாடவேண்டிய இடம்
**சிவன் தொலைத் தொடர்பகம்**
T.P. உள்ளூர்: 021-222-3303
பக்ஸ்: 021-222-3303
வெளியூர்: 0094-222-3731

*மேலதிக விவரங்களுக்கு:* T.P.No. 0777-293392

### மதிப்பீடு

யாழ்ப்பாணம், செப்.17

'யுனிசெவ்' நிறுவனத்தின் அனுசரணையுடனான மொழித்திறன் மற்றும் கணிதத்திறன் விருத்திச் செயற்றிட்டம் தொடர்பான மதிப்பீடு யாழ். குடாநாட்டில் உள்ள 150பாடசாலைகளில் எதிர்வரும் 20 ஆம் திகதி சனிக்கிழமை நடைபெறவுள்ளதாக யாழ்.வலயக் கல்விப் பணிப்பாளர் ப. விக்னேஸ்வரன் தெரிவித்துள்ளார்.

எனவே குறிப்பிட்ட பாடசாலை அதிபர்கள் மதிப்பீடுக்குரிய வினாத் தாள்களை நாளைமறுதினம் வெள்ளிக்கிழமை பெற்றுக்கொள்ளுமாறு அவர் கேட்டுள்ளார். (ம-10)

### சிறந்த பண்ணையாளர் தெரிவுப் போட்டி

யாழ்ப்பாணம்,செப்.17

யாழ்மாவட்டத்திலுள்ள பண்ணையாளர்களிடையே, சிறந்த பண்ணையாளர்களுக்கான போட்டியினை யாழ்.மாவட்ட கால்நடை சுகாதார திணைக்களம் நடத்தவுள்ளது.

கால்நடை வைத்தியபிரிவு ரீதியாக நடத்தப்படும் இப்போட்டி மாடு, ஆடு, கோழிவளர்ப்புத் தொடர்பாக தனித்தனியே நடத்தப்படவுள்ளது. (ம-135-173)

### 'நோராட்' பணிப்பாளரின் குடாநாட்டு விஜயம் ரத்துச் செய்யப்பட்டது

யாழ்ப்பாணம்,செப்.17

எதிர்வரும் 20ஆம் திகதி யாழ்பாணத்திற்கு வருகைதரவிருந்த 'நோராட்' அமைப்பின் பணிப்பாளர் ஸ்ராகே ஸ்ராற்ட் இன் விஜயம் ரத்துச் செய்யப்பட்டுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

யாழ். குடாநாட்டில் நீர் முகாமைத்துவம் மற்றும் சூழல் பாதுகாப்புத் தொடர்பான திட்டங்களை நோராட் நிறுவனம் செயற்படுத்தி வருகிறது. இவற்றைப் பார்வையிடுவதற்காகவே ஸ்ராற்ட் இங்கு வருகைதரவிருந்தார். (ம-4-9-3)

### ஆச்சிரம வாராந்த நிகழ்வு

வடமராட்சி,செப்.17

தொண்டமனாறு சந்நிதியான் ஆச்சிரம சைவக்கலைபண்பாட்டுப் பேரவை சந்நிதியான் ஆச்சிரம மண்டபத்தில் நடத்திவரும் வாராந்த நிகழ்வுத்தொடரில் எதிர்வரும் வெள்ளிக்கிழமை வட்டுக்கோட்டை யாழ்ப்பாணக்கல்லூரி சிரேஷ்ட விரிவுரையாளர் அ.குமாரவேல் பெரியபுராணம் தொடர் சொற்பொழிவாற்றுவார்.

இந்நிகழ்வுக்காக அறிமுக வுரையை செ.நடராசா நிகழ்த்துவார். (ம-173)

### முன்பள்ளி ஆசிரியர்களுக்கு!

யாழ்ப்பாணம்,செப்.17

யாழ்ப்பாணம் மற்றும் நல்லூர் பிரதேச செயலர் பிரிவுகளுக்குட்பட்ட முன்பள்ளி ஆசிரியர்களுக்கான கலந்துரையாடல் ஒன்று நாளை வியாழக்கிழமை பிற்பகல் 3மணிக்கு முன்பள்ளிக் கல்வி மேம்பாட்டு நிலையத்தில் நடைபெறவுள்ளது.

இக்கலந்துரையாடலில் சகல முன்பள்ளி ஆசிரியர்களையும் தவறாது கலந்து கொள்ளுமாறு யாழ்.மாவட்ட முன்பள்ளி இணைப்பாளர் கேட்டுள்ளார். (ம-10)

### குளிர்பான தயாரிப்பாளருக்கான கூட்டம்

யாழ்ப்பாணம்,செப்.17

யாழ் குடாநாட்டிலுள்ள ஐஸ் கிறீம், நெல்லிரசம் மற்றும் சோடா தயாரிப்பாளர்கள் அனைவருக்குமான கூட்டம் ஒன்று எதிர்வரும் 26ஆம் திகதி மாலை 3மணிக்கு மாகாண சுகாதாரசேவைகள் பணிப்பாளர் அலுவலகத்தில் நடைபெறவுள்ளது.

இக்கூட்டத்தில் தயாரிப்பாளர்கள் அனைவரும் தவறாது கலந்துகொள்ளுமாறு மாகாண சுகாதார சேவைகள் பணிப்பாளர் கோ.ரி.சிவபாதம் கேட்டுள்ளார். (ம-8)

### அதிபர் பதவி வெற்றிடம்

யாழ்ப்பாணம்,செப்.17

அல்வாய் ஸ்ரீலங்கா வித்தியாலயத்தின் அதிபர் பதவி வெற்றிடமாக உள்ளதாகவும்-

தகுதியானவர்கள், விண்ணப்பங்களை அனுப்பிவைக்க முடியுமெனவும் - வடமராட்சி வலயக் கல்விப் பணிப்பாளர் தி.செல்வரத்தினம் அறிவித்துள்ளார். (ம-9-118)

## வாகன சுத்திகரிப்பாளர்கள் தேவை

எமது சங்கத்திற்கு அனுபவம்மிக்க வாகன சுத்திகரிப்பாளர்கள் உடன் தேவைப்படுகின்றனர். நியாயமான சம்பளம் வழங்கப்படும். சங்கத்துடன் நேரில் தொடர்பு கொள்ளவும்.

பொதுமுகாமையாளர்
புலோலி ப.நோ.கூ.சங்கம்
புலோலி கிழக்கு, பருத்தித்துறை.
(21-11-15) (C/30223)

**Operator உடன் வாடகைக்கு உண்டு**




கட்டடம் உடைத்து அப்புறப்படுத்த,
காணி துப்புரவு செய்ய,
கிடங்குகள் மற்றும் கிணறு கிண்ட,
அத்திவாரங்களை அகற்ற மற்றும் அகழ்வுகள்
கனரக பொருள்களை இறக்க, ஏற்ற தொடர்பு கொள்ளுங்கள் ...

திரு.பாலசுந்தரம் 021 2223867, வாசுகி 0777291636

உ

## ஸ்ரீவல்லிபுர ஆழ்வார் சுவாமி கோயில்
## மஹோற்சவ விஞ்ஞாபனம் - 2003

### 24-09-2003 முதல் 10-10-2003 வரை

நிகழும் சுபானு வருடம் புரட்டாதி மாதம் ஏழாம் நாள் (24.09.2003) புதன்கிழமை முற்பகல் 10.00 மணியளவில் கொடியேற்ற வைபவம் நடைபெற எம்பெருமான் திருவருள்பாலித்துள்ளார். இதனைத் தொடர்ந்து பதினேழு தினங்கள் மஹோற்சவம் நடைபெறும். இவ்விசேட தினங்களில் எம்பெருமானைத் தரிசித்து ஆனந்தமடைய அடியார்களை அன்புடன் அழைக்கின்றோம்.

| | |
|---|---|
| கொடியேற்றம் | - 24-09-2003 புதன் முற்பகல் 10.00 மணி |
| சப்பரத் திருவிழா | - 07-10-2003 செவ்வாய் இரவு 8.00 மணி |
| தேர்த் திருவிழா | - 08-10-2003 புதன் காலை 8.00 மணி |
| சமுத்திரத் தீர்த்தம் | - 09-10-2003 வியாழன் பிற்பகல் 2.00 மணி |
| கேணித் தீர்த்தம் | - 10-10-2003 வெள்ளி முற்பகல் 10.00 மணி |
| கொடியிறக்கம் | - 10-10-2003 வெள்ளி மாலை 4.00 மணி |

மஹோற்சவ கால பூசை நேரங்கள் (பஞ்சாங்க நேரம்)

| காலை | | மாலை | |
|---|---|---|---|
| உசக்காலம் | 7.00 மணி | சாயரட்சைப் பூசை | 3.30 மணி |
| 2ஆம் காலம் | 8.00 மணி | மாலைப்பூசை | 3.45 மணி |
| அபிஷேகம் ஆரம்பம் | 9.00 மணி | தம்பப் பூசை | 4.00 மணி |
| விசேட பூசை | 9.30 மணி | வசந்தமண்டபப்பூசை | 4.30 மணி |
| தம்பப் பூசை | 10.00 மணி | அர்த்தசாமப்பூசை | 7.00 மணி |
| வசந்தமண்டபப்பூசை | 10.30 மணி | | |
| உச்சிக்காலம் | 12.00 மணி | | |

முக்கிய குறிப்புகள்:

1. பருத்தித்துறையிலிருந்து காலை 9.00 மணிக்கும் மாலை 3.00 மணிக்கும் ஆலயத்திற்கு விசேட பஸ் சேவை நடைபெறும்.
2. பெண்களும் குழந்தைகளும் நகைகள் அணிந்து வருவதைக் கூடியளவில் குறைத்துக் கொள்ளுங்கள்.
3. ஆலய உள்வீதியில் புகைப்படம், வீடியோ படம் எடுத்தல் நடைசெய்யப்பட்டுள்ளது.
4. உற்சவகால தற்காலிக வியாபார நிலையங்கள் 20-09-2003 சனிக்கிழமை காலை 9.00 மணிக்கு ஒதுக்கீடு செய்யப்படும். வாடகையில் அரைப்பங்கினை உடன் செலுத்த வேண்டும்.
5. சைவசமயப் பண்பாட்டுக்கு உரித்தான உடைகளை அணிந்து வருதல் விரும்பத்தக்கது.
6. பண்ணிசைப் போட்டி

| பிரிவு | தரம் | பாடல் |
|---|---|---|
| கீழ்ப்பிரிவு | 7இற்குக் கீழ் | தேவாரம், புராணம் |
| மத்திய பிரிவு | 8, 10 | பஞ்சபுராணம் |
| மேற்பிரிவு | 11, 13 | பஞ்சபுராணம் |

எல்லாப்பிரிவினரும் நாலாயிரதிவ்விய பிரபந்தத்தில் ஒருபாடல் பண்ணுடன் பாடுதல்வேண்டும். விண்ணப்பங்கள் யாவும் பாடசாலை அதிபரின் உறுதியுரையுடன் அனுப்புதல் வேண்டும்.

போட்டித் திகதி: 28-09-2003 நேரம் காலை 10.00 மணி

விண்ணப்ப முடிவு திகதி: 27-09-2003

7. ஆலயத்தின் பெயரால் எவ்வித நிதிவசூலும் செய்ய தனிநபர்களுக்கோ, நிறுவனங்களுக்கோ அனுமதி அளிக்கப்படவில்லை. அன்பளிப்புச் செய்வோர் ஆலய கருமபீடத்தில் பதிவுசெய்து பற்றுச்சீட்டு பெறுக.

-அறங்காவலர் சபை.

ஸ்ரீவல்லிபுர ஆழ்வார் சுவாமி கோயில்,
துன்னாலை வடக்கு, புலோலி. (சி-30217) (19-11-18-29)

# சமாதானத்தை விரும்புவோரின் குரல் ஓங்கி ஒலிப்பது அவசியம்

**புள்ளி விவரங்களையும் கருத்துக் கணிப்புகளையும், தத்தமது வசதிக்கேற்ப பயன்படுத்தப்படுவதைச் சாடுகிறார் 'ராவயவில்' வெளிவந்த கட்டுரையில் சுனந்த தேசப்பிரிய.**

"சிங்கள மக்களில் நூற்றுக்கு எழுபது சதவீதமானோர் இடைக்கால நிர்வாக சபை யோசனையை எதிர்க்கின்றனர்" என்ற தலைப்பில் கடந்த வாரம் சிங்களப் பத்திரிகை ஒன்றில் வெளிவந்த செய்தியை ஒத்த வேறொரு செய்தி அதே வார கொழும்புத் தமிழ்ப்பத்திரிகை ஒன்றிலும் பிரசுரிக்கப்பட்டிருந்தது. சிங்கள மக்களில் பெரும்பாலோர் அரசியல் தீர்வை எதிர்ப்பதாக அச்செய்தி தெரிவித்திருந்தது. இவ்விரு பத்திரிகைகளும் மாற்றுக் கொள்கைக்கான நிலையம் மேற்கொண்ட பொதுஜன அபிப்பிராய வாக்கெடுப்பின் அறிக்கையையே தமது செய்திகளுக்கான ஆதாரமாகக் கொண்டிருந்தன. இவ்வாக்கெடுப்பு 2003 மே மாதத்தில் நடத்தப்பட்டதாகும்.

இனப்பிரச்னைக்கான தீர்வு தொடர்பாக தாம் எவ்வித கருத்தும் கொண்டிருக்கவில்லை எனத் தெரிவித்தவர்களின் எண்ணிக்கையையும், இனப் பிரச்சினை தொடர்பான சமாதானத் தீர்வுக்கு எதிர்ப்புத் தெரிவித்தவர்களின் எண்ணிக்கையுடன் சேர்த்து தமிழ்ப் பத்திரிகை கணக்குக் காட்டியிருந்தது. சிங்கள மக்களின் இநத எதிர்ப்பு தமிழ் மக்களுக்குக் கவலையளிப்பதாக அமைவதாகவும் அப்பத்திரிகைச் செய்தியில் குறிப்பிடப்பட்டிருந்தது.

இவ்விரு பத்திரிகைகளும் தமக்குத் தேவையான வகையில் செய்தி வெளியிடும் நோக்கத்தோடு, பொதுஜன அபிப்பிராய வாக்கெடுப்பு அறிக்கையிலிருந்து குறிப்பிட்ட ஒரு சில தகவல்களை மட்டுமே தெரிவு செய்திருந்தன. சிங்கள மக்கள் அரசின் சமாதான முயற்சிகளை எதிர்ப்பதாகக் காட்டுவதே குறிப்பிட்ட சிங்களப் பத்திரிகையின் நோக்கமாக அமைந்திருந்தது. அதேவேளை, சிங்கள மக்கள் நடைமுறையில் அரசியல் தீர்வுக்கு எதிர்ப்புத் தெரிவிப்பவர்கள் எனக் காட்டுவதற்கு சம்பந்தப்பட்ட தமிழ்ப் பத்திரிகை முயன்றுள்ளது.

ஆனால், யுத்தம் மற்றும் சமாதானம் தொடர்பாக சிங்கள மக்கள் தெளிவான கருத்தைக் கொண்டிருக்கவில்லை என்பதை அந்தக் கருத்துக் கணிப்பு தெரிவிக்கிறது.

விடுதலைப் புலிகள் அமைப்புக்கும் அரசுக்கும் இடையே இடம்பெறும் பேச்சுக்கள் மூலமே இனப்பிரச்சினைக்குத் தீர்வுகாண முடியுமென இந்நாட்டு மக்களில் நூற்றுக்கு 87 சதவீதமானோர் நம்புகின்றனர். சிங்கள மக்களில் நூற்றுக்கு 85 சதவீதமானோர் மேற்கூறிய கருத்தைக் கொண்டுள்ளனர். தமிழ் மக்களில் 96.6 சத விகிதத்தினரும், மலைநாட்டுத் தமிழர்களில் 95.3 சத விகிதத்தினரும் இக்கருத்தைக் கொண்டுள்ளனர். முஸ்லிம்களில் பெரும்பாலானோரின் கருத்தும் இதுவே. யுத்தத்தின் மூலம் விடுதலைப் புலிகளைத் தோற்கடித்து யுத்தத்தை முடிவுக்குக் கொண்டு வர முடியுமென சிங்கள மக்களில் 8.4 சத விகிதத்தினரே நம்பிக்கை கொண்டுள்ளனர்.

அரசு சமாதானத் தீர்வொன்றினை எட்டுவதற்கான விருப்புடன் செயற்படுவதாக சிங்கள மக்களில் 50.6 சத விகிதத்தினர் நம்பும் அதேவேளை, 24.8 சத விகிதமான சிங்கள மக்கள் அதற்கு எதிரான கருத்துக்கொண்டுள்ளனர்.

ஸ்ரீலங்காவின் சமாதானத் தீர்வு முயற்சிகளில் சர்வதேச சமூகம் மூன்றாவது தரப்பாகச் செயற்படுவதால் பிரதிகூலமான பலாபலன்களே ஏற்படுமென சிங்கள மக்களில் 4.4 சத விகிதத்தினர் நம்புகின்றனர். அதேவேளை, அச் சர்வதேச சமூகத்தின் பங்களிப்பு இவ்விடயத்தில் மிக அவசியமானதென 22.4 சத விகிதத்தினர் கருத்துத் தெரிவித்துள்ளனர். மேலும் இச்சர்வதேச சமூகத்தின் பங்களிப்பால் சிறந்த பெறுபேறுகள் கிட்டுமென 37.6 சதவிகித சிங்கள மக்கள் நம்புகின்றனர். ஸ்ரீலங்காவின் சமாதான முயற்சிகளில் நோர்வேயின் உதவியைப் பெற்றுக்கொள்வதை சிங்கள மக்களில் 35.5 சதவிகிதத்தினர் ஏற்றுக்கொள்வதுடன், 26.9 சதவிகித மக்கள் மட்டுமே அதற்கு எதிர்ப்புத் தெரிவித்துள்ளனர்.

இச்சமாதான நடவடிக்கைகளில் இந்திய நாட்டின் மத்தியஸ்தம் அவசியமானதென சிங்கள மக்களில் ஒரு சிறிய சதவிகிதத்தினர் மட்டுமே நம்புகின்றனர்.

ஸ்ரீலங்கா போர்நிறுத்தக் கண்காணிப்புக் குழு தேவை என சிங்கள மக்களில் நூற்றுக்கு 18.3 சதவிகிதத்தினரும் அதன் மூலம் சிறப்பான பலாபலனைப் பெற்றுக்கொள்ள முடியுமென நூற்றுக்கு 50.8 சத விகித மக்களும் நம்பிக்கை தெரிவித்துள்ளனர். இவ்விகிதம் நாட்டின் அனைத்து இன மக்களிடையேயும் நூற்றுக்கு 70 சத விகிதத்துக்கும் அதிகமாகும். ஆனால் நோர்வே நாட்டின் செயற்பாடுகள் குறித்து சுமார் 25 சதவீதத்திற்கும் குறைவான சிங்கள மக்களே திருப்திப்படுகின்றனர். இப்போர் நிறுத்தக் கண்காணிப்புக் குழுவினரின் அதிகாரங்கள் அதிகரிக்கப்படவேண்டுமென 18 சத விகித சிங்கள மக்கள் கருதும் அதே வேளை, அவர்களது தற்போதைய அதிகாரங்கள் அதேவிகிதத்தில் பேணப்படவேண்டும் என 34 சதவீத சிங்கள மக்களும் அவர்களது அதிகாரங்கள் இப்போதுள்ளதை விட குறைக்கப்படவேண்டுமென 18.3 சதவிகிதத்தினரும் கருத்துத் தெரிவித்துள்ளனர்.

இதேபோன்ற முக்கியமான புள்ளி விவரங்களை அண்மையில் ஊடகவியலாளரான இக்பால் அத்தாஸ் வெளியிட்டிருந்தார். இந்த இக்பால் அத்தாஸ் எந்த வகையிலும் அரசின் சமாதான நடவடிக்கைகளுக்கு உதவக் கூடியவரென குறிப்பிடப்பட முடியாத ஊடகவியலாளராவார். அவரால் வழங்கப்பட்ட புள்ளி விவரங்களில் சில அட்டவணை I இல் தரப்பட்டுள்ளன.

**இராணுவத்துக்கான ஆள் சேர்ப்பு அட்டவணை I**

| வருடம் | இலக்கு | இராணுவத்துக்குத் தெரிவுசெய்யப்பட்டோர் | பூர்த்தி செய்யப்படாத இலக்கு |
|---|---|---|---|
| 1999 | 15,000பேர் | 5,326பேர் | 9,674பேர் |
| 2000 | 15,000பேர் | 5,437பேர் | 9,563பேர் |
| 2001 | 10,000பேர் | 3,773பேர் | 6,227பேர் |
| 2002 | 10,000பேர் | 2,003பேர் | 7,497பேர் |

இதேசமயம், இராணுவ சேவையிலிருந்து முறையே 2000ஆம் ஆண்டில் 4,972 பேரும், 2001ஆம் ஆண்டில் 6,018 பேரும், 2002ஆம் ஆண்டில் 7,326 பேரும், 2003 ஆம் ஆண்டில் முதல் மூன்று மாத காலத்துள் 4,373 பேரும் சேவையிலிருந்த சமயம் தப்பி ஓடியுள்ளதாக இக்பால் அத்தாஸின் புள்ளிவிவரங்களிலிருந்து தெரியவந்துள்ளது. மேலதிக விவரங்கள் எவையும் தேவையில்லை. இதிலிருந்து இராணுவத்தில் இணைவதைச் சிங்கள இளைஞர்களும் யுவதிகளும விரும்புவதில்லை என்பது தெளிவாகிறது. அவ்விதம் இணைபவர்கள் கூட தமது வறுமைநிலை காரணமாகவே இராணுவத்தில் இணைகிறார்கள். கொழும்பின் பத்திரிகைக் காரியாலயங்களில் கடமையாற்றும் ஊடகவியலாளர்களின் பிள்ளைகள் எவரும் அவ்விதம் இராணுவத்தில் இணைந்து கொள்ள முன்வருவதில்லை. அது மட்டுமன்றி, இராணுவ சேவையில் இணைந்து பணியாற்றுபவர்கள் கூட தாம் சேவையிலிருந்து உத்தியோகபூர்வமாக விலகிக்கொள்ள கிடைக்கும் முதல் சந்தர்ப்பத்திலேயே ஓய்வு பெற்றுச் சென்று விடுகின்றனர். ஸ்ரீலங்கா இராணுவத்தில் அனுபவம் வாய்ந்த இராணுவ வீரர்கள் எவரும் தொடர்ந்து கடமையாற்றுவதில்லை. பல வித சலுகைகளை அனுபவிக்கும் உயர் பதவி வகிக்கும் அதிகாரிகள் மட்டுமே சேவையில் நீடித்திருக்கின்றனர்.

உள்நாட்டலுவல்கள் அமைச்சர் ஜோன் அமரதுங்கவின் தகவல்களின்படி இதுவரையில் இராணுவத்திலிருந்து தப்பியோடியவர்களின் எண்ணிக்கை 50 ஆயிரம் வரையாகுமெனத் தெரியவந்துள்ளது. இராணுவத்தில் சேவையாற்றும் வரையில் இவர்கள் வீரபுருஷர்களாகக் கருதப்படுகின்றனர். அவர்களாலேயே நாடு காப்பாற்றப்படுவதாகத் தெரிவிக்கப்படுகிறது. அவர்கள் நாட்டுக்கு ஆற்றும் சேவை மூலம் இந் நாடு அவர்களுக்குக் கடன்பட்டிருப்பதாகப் பல அரசியல்வாதிகள் கூறிக்கொள்கின்றனர். இதனாலேயே அவர்களுக்கு அதிக சம்பளமும், மற்றைய அரச ஊழியர்களுக்கு வழங்கப்படாத மற்றும் பல சலுகைகளும் வழங்கப்படுகின்றன.

ஆனால், இவ்விதம் இனத்திற்காகத் தியாகம் செய்யும் இந்த இராணுவ வீரர்கள் இராணுவத்திலிருந்து தப்பியோடிய பின்னர் என்ன செய்கின்றனர்? அவர்களில் குறிப்பிடக்கூடியதொரு தொகையினர் குற்றச் செயல்களில் ஈடுபடுகின்றனர். பாதாள உலகக் கும்பல்களுடன் இணைந்து கொள்கின்றனர். இவ்விதம் இராணுவத்திலிருந்து தப்பி ஓடியவர்களில் பெரும்பாலோர் தற்போது நாட்டில் இடம்பெறும் சகல பாரதூரமான குற்றச் செயல்களுடன் சம்பந்தப்பட்டிருப்பதாகப் பொலீஸ் திணைக்களப் புள்ளி விவரங்கள் மூலம் தெரிய வந்துள்ளது. இக்குற்றச் செயல்களில் பெண்கள் தொடர்பான பாலியல் குற்றங்களும் அடங்கியுள்ளன.

தமிழர்களுக்கு சுயாட்சி உரிமை வழங்குவதன் மூலம் அரசியல் தீர்வு காணும் முயற்சிக்கெதிராகக் கூப்பாடு போடும் அரசியல்வாதிகளைப் போன்று, ஊடகத் துறையினரும் இந்த யதார்த்த நிலையைப் புரிந்துகொள்ள வேண்டியது அவசியமாகும். அவர்களில் எவரும் இராணுவத்துக்கு சிங்கள இளைஞர், யுவதிகளைச் சேர்த்துக் கொள்ளும் முயற்சியை ஊக்குவிப்பதில்லை. அதற்குப் பதிலாக அவர்கள் பல்வேறு மக்களுடன் இணைந்து இளைஞர் யுவதிகளுக்கான களியாட்ட நிகழ்ச்சிகளை ஒழுங்கு செய்கின்றனர்.

சிங்கள மக்களில் பெரும்பாலோர் யுத்தத்தின் மூலமாகவன்றி இனப்பிரச்சினைக்குப் பேச்சுகள் மூலமே தீர்வு காணப்படவேண்டுமென அழுத்தமாகக் கூறிக்கொள்வது ஏனைய காரணங்களுடன் இந்த யுத்தம் பற்றிய அச்சமும் சேர்ந்து காணப்படுவதனாலேயேயாகும்.

சிங்கள மக்கள் யுத்தத்தை விரும்பவில்லை. அதில் பங்கேற்பதற்குக் கூடத் தயாராயில்லை. அதேசமயம், யுத்தத்தைத் தொடர்வதை நிறுத்தி பேச்சுகள் மூலம் அரசியல் தீர்வு காணப்படுவதையே எதிர்பார்த்துள்ளனர்.

ஆனால், இத் தீர்வு முயற்சிகள் குறித்துத் தெளிவான கருத்துக்கள் அவர்களிடையே காணப்படவில்லை. அதேசமயம், அவர்கள் மத்தியில் விடுதலைப் புலிகள் அமைப்பின் மீதான நம்பிக்கையும் அதிக அளவில் காணப்படவில்லை. சமாதான நடவடிக்கைகளின் நம்பிக்கைத் தன்மை குறைவடைவதற்கும் இதுவே முக்கிய காரணமாக அமைகின்றது.

**வீயெஸ்ரீ**

யுத்தத்தில் நம்பிக்கை கொண்டவர்களுக்கு சிங்கள மக்கள் மத்தியில் இடமில்லை. அவ்விதம் யுத்தத்தைத் தொடர விரும்புவர்கள் ஒரு சிலரே. அவர்களெல்லாம் சொகுசு வாழ்க்கையில் நாட்டம் கொண்டவர்களாவர். பத்திரிகைகள் மூலமே கருத்து முழக்கம் செய்பவர்கள். ஆனால், சமாதான விருப்புடையோரில் பெரும்பாலோர் இன்று மௌனம் சாதிக்கின்றனர். ஆனால், அவர்கள் சமாதான நோக்கில் உறுதி கொண்டவர்கள். அவர்களது குரலை உரத்து ஒலிக்கச் செய்வதே இன்றைய அவசர, அவசிய தேவையாகும்.

# தடுமாறி நிற்கும் இளைய சமூகம்

அதிகரித்துவரும் இளைஞர்களின் பிரச்சினைகளால் தள்ளாடிப் போகும் நிலையில் இன்றைய யாழ். இளைஞர்களின் எதிர்காலமும், தமிழ்ப் பண்பாடும் காணப்படுகிறது.

இதனை எண்ணி மூத்த சமூகம் கண்ணீர் வடிக்கின்றது.

முன்னெப்போதும் இல்லாதபடி கேட்பதற்கும், பிறருடன் பேசுவதற்கும் முடியாத நிலையில் யாழ்ப்பாணத்தில அண்மைக்காலமாக இளைய சமுதாயத்தின் போக்கும், செயற்பாடும் காணப்படுகின்றது.

கடந்த இரு மாதங்களில் மட்டும் 14 வயதிற்கும் 20 வயதிற்கும் இடைப்பட்ட 20 பேர் வரையில் சமுதாயச் சீர்கேட்டு நடத்தைகளில் ஈடுபட்டதற்காக கலாசாரத்தைப் பேணும் குழுவினரால் பிடிக்கப்பட்டு எச்சரிக்கப்பட்ட பின்னர் விடுவிக்கப்பட்டுள்ளனர்.

இவை பத்திரிக்கைகளில் வெளிவந்த தகவல் மட்டுமே. வெளிவராத தகவல்கள் பல இன்னும் அதிகமாக இருக்க வாய்ப்பிருக்கின்றது.

கடந்த முதலாம், 2 ஆம் திகதிகளில் சிறுவர் துஷ்பிரயோகம் சம்பந்தமாக 'யுனிசெவ்' ஆதரவில் திருகுடும்பக் கன்னியர்மடம் பாடசாலையில் இடம்பெற்ற கருத்தரங்கில் பல திடுக்கிடும் உண்மைகள் வெளிவந்தன.

பாரம்பரியம், பண்பாடு கலாசாரம் என்ற கட்டுக் கோப்புக்குள் வளர்ந்த கந்தபுராணக் கலாசாரப் பண்பாடு வெளியில் பேசமுடியாத அளவிற்குச் சின்னாபின்னப்பட்டுப் போயிருக்கின்றது.

**எமது பண்பாடு**

உலகமே போற்றும் ஒப்பற்ற வாழ்க்கை முறையைப் பேணுவதில் தமிழன் சிறந்தவன் என்று பேரெடுத்த காலம் வேரோடு சாய்ந்துபோமோ எனப் பலரும் அச்சப்படும்படி நிலைமை மோசமடைகின்றது.

மது , மாமிசம், மாது வெறுத்து விலக்கி ஒருத்தனுக்கு ஒருத்தி என்னும் பண்பாட்டினைப் பேணிவருவது நமது பண்பாடு.

இலங்கை வரும் வெள்ளையர்கள் கூட எப்படி காலம் முழுவதும் ஒரே ஜோடியாக வாழ்கின்றீர்கள் என வியந்து கேட்ட சந்தர்ப்பங்களும் உண்டு. ஆனால், இந்நிலை மாறி விபசாரமும், பலதாரமணமும், ஏமாற்றும் மலியும் நிலையில் எமது இளம் சந்ததி வளர்ந்து வருகின்றது.

**காரணம் என்ன?**

வெளிநாட்டு மோகமே இத்தகைய சீர்கேடுகளுக்கு முதற்காரணமாக இருக்கின்றது.

இதனை யாரும் மறுக்க முடியாது. வீட்டின் கஷ்ட நிலையைப் போக்குவதற்காகக் கடன்பட்டு வெளிநாடுகளுக்கு அனுப்பப்படும் பிள்ளைகளில் சிலர் அங்கிருந்து கற்றுக்கொண்டு வருவதெல்லாம் அரைகுறை ஆடை நாகரிகமும், போதைவஸ்து, மதுபானம், சிகரெட்டு, விபசாரம் முதலான நாகரிக மற்ற ஆபத்தான பழக்கவழக்கங்களையுமே.

இதனை விட வெளிநாட்டுப்பணத்தைக், கண்ட வேலையற்றுத்திரியும் இங்குள்ள சில இளைஞர்கள் கூட 'ஹீரோ ஹொண்டா' மோட்டார்சைக்கிளையும், கையடக்கத் தொலைபேசியையும் எடுப்பாக வைத்திருப்பதுடன் இடுப்பில் 'சைக்கிள் செயினும்', கிறிஸ்கத்தியும் வைத்துக் கொண்டு 'குறுப்' பாகச் சேர்ந்து 'ஹீரோக்கள்' என்ற நினைப்பில் புரியும் அடாவடித்தனத்திற்கு அளவே கிடையாது.

ஆபாசப் படங்களை வெளியிலிருந்து பெற்றுக்கொடுப்பது, போதைப் பொருள் விற்பனை, சீர்கேட்டுச் சம்பவங்களை ஊக்குவிப்பது போன்ற நடவடிக்கைகளில் சில சமூகவிரோதக் கும்பல்கள் ஈடுபட்டு வருகின்றன.

இதற்கு உதாரணமாக அண்மையில் சட்ட விரோதமான முறையில் விற்கப்பட்ட புகைத்தல் பொருள்களான பீடி , சிகரெட் என்பன குடாநாட்டின் பல பகுதிகளிலும் கைப்பற்றப்பட்டிருந்தமையைக் குறிப்பிட முடியும்.

**தட்டிக் கேட்போர் அற்றநிலை**

மிக அண்மையில் இடம்பெற்ற சில சம்பவங்கள் யாழ். குடாநாட்டில் துணிந்து எதையும் செய்து விடலாம் அதனைக் கேட்க உறுதியான அதிகாரம் மிக்கவர்கள் யாரும் இல்லை என்ற நிலையைத்த தெளிவுபடுத்தியுள்ளது.

யாழ். நகரப் பகுதியில் உணவகம் ஒன்று 'தீனாகுறூப்' எனப்படும் கிலரால் அடித்துநொறுக்கப்பட்டுள்ளது.

இதைவிட சமூக சீரழிவுமிக்க திரைப்படமொன்று சமூகநலன் மிக்கோரால் தடைசெய்யப்பட்ட போது சில இளைஞர்கள் திரையரங்கைத் தாக்கியுள்ளனர்.

பெரும் கும்பலாகச் சென்ற இளைஞர் குழுவொன்று கோயில் வீதிப்பகுதியில் உள்ள பல வீடுகளைத் தாக்கி கண்ணாடிகளை உடைத்ததுடன், வீட்டுக் கதவுகளை உடைத்தும், அன்னாக்களை உடைத்தும் அட்டகாசம் புரிந்துள்ளார்கள். அவர்களின் கைகளில் மதுபானப் போத்தல்களும், சிகரெட் பெட்டிகளும் தாராளமாகவே இருந்துள்ளன.

இதனைவிட தமிழ் சினிமாப்படங்களில் காட்டுவது போல் ஓடஓட இளைஞர் ஒருவரை கொலை வெறிகொண்ட கும்பல் ஒன்று பிரதான வீதியூடாக மக்கள் பார்த்து நிற்க கத்தியுடன் துரத்திச் சென்ற சம்பவம் யாழ். மக்களையே குலைநடுக்கம் கொள்ளச் செய்திருக்கின்றது.

இந்த நான்கு நிகழ்வுகளும் ஒரு வாரத்தினுள் நடந்த சம்பவங்கள் குடாநாட்டின் இன்றைய நிலைக்கு சில உதாரணங்கள்.

**பொலீஸ் என்ன செய்கின்றது?**

இந்தச் சம்பவங்களுக்கு எதிராக பொலீஸார் எடுக்கும் நடவடிக்கைதான் என்ன? உரியவர்களுக்குத் தண்டனை வழங்கப்பட்டுவிட்டதா? இப்படியே போனால் நிலைமை இன்னமும் மோசமாக வாய்ப்புண்டு.

**தீர்வு என்ன?**

முதலில் பெற்றோர்கள் தம் பிள்ளைகளுக்குப் பயப்படும் நிலை மாற வேண்டும். ஆணோ, பெண்ணோ கட்டுப்படுத்தினால் எங்களை விட்டு எங்கேனும் போய் விடுவார்களோ என்ற அச்சத்தை நீக்கி கட்டுப்பாட்டுடன் வளர்க்கத் துணியவேண்டும்.

ஆன்மீகம், எமது நாட்டின் நிலை, தமிழ் மண்ணின் தியாகம் பற்றி பெற்றோர் மட்டுமன்றி பாடசாலைகளிலும் ஆசிரியர்கள் மாணவர்களுக்கு அறிவுரைகள் புகட்டுதல் வேண்டும்.

நண்பர்களின் சேர்க்கையை மட்டுப்படுத்துவதும் பெரிதும் இளைய சமுதாயத்தின் தீயபாதையைப் பயணத்தைக் கட்டுப்படுத்தும். ஏனெனில், கூட்டத்துடன் சேரும் போதுதான் இளைஞர்கள் தன்னைத், தன்குடும்பத்தை உணர மறக்கின்றனர்.

தனக்கும் அக்கா, தங்கை, அம்மா என்றும் பெண் உடன்பிறப்புக்கள் இருப்பதை அவர்கள் மறக்கின்றனர். இதனால் தவறு செய்யத் தூண்டப்படுகின்றான்.

ஆக்கம்:
**செந்தூர்ராஜ்**

நாட்டிற்கு உதவக்கூடிய வீட்டிற்குப் பயன்மிக்க பிள்ளையே வேண்டும். "பொல்லாப்பிள்ளை இல்லாட்டிலும் பரவாயில்லை" என்ற மனநிலைக்குப் பெற்றோர் வரும்போது நிச்சயம் நல்லதொரு சமுதாயத்தினைக் கட்டியெழுப்பமுடியும்.

"சமூகவாழ்வு உயர்நிலை அடையும் போதே ஓர் இனம் மகிமை பெறுகின்றது."

*- தமிழீழத் தேசியத் தலைவர்.*

## தியாகி திலீபன் நினைவு நிகழ்வுகள்

தியாகி லெப்.கேணல் திலீபனின் 16ஆவது ஆண்டு நினைவு தினத்தை முன்னிட்டு கைதடிப் பகுதியில் நேற்று முன்தினம் காலை எழுச்சி பூர்வமாக நிகழ்வுகள் நடைபெற்றன.

கைதடி தென்மராட்சி மேற்கு பல நோக்குக் கூட்டுறவுச் சங்கத் தலைவர் சி.சுப்பிரமணியம் தலைமையில் நிகழ்வுகள் ஆரம்பமாகின. பொதுச் சுடரை சங்கத்தின் உப தலைவர் சிருட ராசா ஏற்றிவைக்க தேசியக் கொடியை கைதடி நாவற்குழி பிரதேச அரசியல் துறைப்பொறுப்பாளர் முரளி ஏற்றிவைத்தார். நினைவுரையை தென்மராட்சி அரசியல் துறைப்பொறுப்பாளர் தமிழ்மாறன் நிகழ்த்தினார்.

வர்த்தகர்கள், சனசமூக நிலைய உறுப்பினர்கள், பொதுமக்கள் எனப் பலர் இந்நிகழ்வில் கலந்துகொண்டனர்.

(ஓ-75)

★ ★ ★

தியாகி திலீபனின் 16ஆவது நினைவு தினத்தை முன்னிட்டு வலி. தென் மேற்கு, வலி. மேற்கு ஆகிய பிரதேச பகுதிகளில் உணர்வு பூர்வமாகவும், எழுச்சியாகவும் நிகழ்வுகள் நேற்றுமுன்தினம் முதல் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. இப்பகுதிகளிலுள்ள பாடசாலைகள், அரச அலுவலகங்கள், தனியார் நிறுவனங்கள், கூட்டுறவு சங்கங்கள் மற்றும் பொது நிறுவனங்கள் ஆகியவற்றில் திலீபனின் திருவுருவப்படம் அலங்கரிக்கப்பட்ட பந்தல்களில் வைக்கப்பட்டு அஞ்சலி செலுத்தப்பட்டு வருகின்றது. மானிப்பாய், சண்டிலிப்பாய், ஆனைக்கோட்டை, பண்டத்தரிப்பு, மாதகல், சங்கானை, சித்தன்கேணி, வட்டுக்கோட்டை, சுழிபுரம், மூளாய் ஆகிய இடங்களில் சந்திகளில் ஒலிபெருக்கி மூலம் எழுச்சிப் பாடல்கள் ஒலிபரப்பப்பட்டு வருகின்றன. வீதிகள் தோறும் பதாதைகள் கட்டப்பட்டுள்ளதுடன் சிவப்பு - மஞ்சல் நிறக் கொடிகளும் பறக்கவிடப்பட்டுள்ளதை காணக் கூடியதாகவுள்ளது.

(ஓ-135)

★ ★ ★

பண்ணாகம் தேசிய எழுச்சிப் பேரவை ஊரகக் கிளையினர் தியாகி திலீபனின் 16ஆவது வருட நினைவை முன்னிட்டு எதிர்வரும் வெள்ளிக்கிழமை பண்ணாகம் ஆலடி வைரவர் ஆலய முன்றிலில் உண்ணாவிரதம் நடைபெறவிருப்பதாக ஊரகக் கிளையின் செயலாளர் சி.தயாபரசிவம் தெரிவித்தார்.

(ஓ-135)


### ❋ பாராட்டி வாழ்த்துகின்றோம் ❋



வடலியடைப்பு கிராம
உத்தியோகத்தர் (J/145)
திரு. கந்தசாமி சுதர்சன்
அவர்கள் கடந்த 05.09.2003ஆம் திகதியன்று யாழ்.நீதிமன்றத்தில் அகில இலங்கை சமாதான நீதிவானாக சத்தியப் பிரமாணம் செய்து கொண்டார். இதனையிட்டு நாங்கள் மிகுந்த மகிழ்ச்சியடைவதுடன் இவரின் சேவை மேலும் சிறப்புற்றோங்க பாராட்டி வாழ்த்துகின்றோம்.

- நண்பர்கள்.

(22677) (26-16-18-31)

### நியந்திரீ அறிவித்தல்

2003ஆம் ஆண்டு ஏப்ரலில் நடைபெற்ற க.பொ.த. (உயர்தர) பரீட்சையில் சித்தியடைந்த அந்தண மாணவர்கள் தங்கள் பெயர் விவரங்களை 2003.09.25ஆம் திகதிக்கு முன்பாக எமக்கு அனுப்பிவைக்கவும்.

சிவன் கோவில்,
நல்லூர்,
யாழ்ப்பாணம்.

- செய்லாளர்.

(சி-30224) (31-16-18)

### பொதுவான களைகள், வேர்த்தண்டுக் கிழங்குள்ள களைகளை சிறப்பாக கட்டுப்படுத்த

FINCHEM AGRO DIVISION



டிஸ்ட்ரோய்

பிரீன்கெம்

பீ.ஏ.எஸ்.எவ்.பிரீன்லே(பிரைவெட்) லிமிட்டெட்,
186, வொக்ஸ்சோல் வீதி,
கொழும்பு – 02

மேட்டு சேற்று நில விவசாயத்தை – காப்பாற்றும்

பீடைநாசினிகள் ஆபத்தானவை அவதானமாகக் கையாளுங்கள்

கோப்பாய் பழைய வீதி
மனோன்மணி அம்பாள் ஆலய (நாச்சிமார் கோயில்)

### மண்டலாபிஷேகப் பூர்த்தி விழா

*அம்பாள் அடியார்களே!*

நாளை (18.09.2003) வியாழக்கிழமை ஆலய மண்டலாபிஷேகப் பூர்த்தியை முன்னிட்டு அம்பாளுக்கு காலை 9.00 மணி முதல் நவோத்தர சத கலச சங்காபிஷேகம், விசேஷ பூசை ஆகியன நடைபெறும்.

இதனையொட்டி விசேஷ மேளக் கச்சேரி, தெய்வீகச் சொற்பொழிவு, அன்னதானம் என்பன இடம்பெறும்.
தெய்வீக சொற்பொழிவு :"அம்பிகையின் அருள்"
நிகழ்த்துபவர் : சிவநெறிக் கலாநிதி இராசையா ஸ்ரீதரன்
பிரதமகுரு : பிரம்மஸ்ரீ பி. கிருபாஹரக் குருக்கள் (கோப்பாய்)

அனைவரும் வருக! அருள் பெறுக!!

(22684) (31-16-18)

### நீங்காத நினைவலைகள்

| 15ஆவது ஆண்டு | முன்றாவது ஆண்டு |
|---|---|
| மலர்வு 07.01.1931 – உதிர்வு 11.08.1988 | பிறப்பு 05.11.1935 – இறப்பு 21.08.2000 |



அமரர் கணபதி தியாகேசு
(காங்கேசன் சீமெந்து கூட்டுத்தாபன உயர் உத்தியோகத்தர்)



திருமதி
அன்னம்மா தியாகேசு

தங்கள் ஆத்மா சாந்தியடைய இறைவனை வேண்டும்

ஆதியாமலை,
இமையாணன்,
உடுப்பிட்டி.

- பிள்ளைகள்.

(22687) (31-16-18)

நாகம்ஸ் சுன்னாகம்
இன்று முதல்
அஜித், ஜோதிகா, பிரியங்கா, விவேக் நடித்த
ராஜா
தினசரி 11.00, 3.00
வெள்ளி சனி, ஞாயிறு
11.00, 3.00, 7.00.
(C/29908) (சீல்ஸ்)

ராஜா யாழ்ப்பாணம்
அருண், வடிவேல், விஜயகுமார் நடித்த
அன்பு
10.30, 2.30, 6.30, 9.30 (பு.நே.)

நிறைஞ்சனாஸ்
M.G.R., ஜெயலலிதா நடிக்க
ராமன் தேடிய சீதை
காட்சி நேரம் : 11.00, 2.45, 6.00 (பு.நே.)
வெள்ளி, சனி, ஞாயிறு
WISH MASTER
(கராட்டிப் படம்) இரவு 8.45 (பு.நே.)
(C/29905)



Sink Tap

முதன் முறையாக
தொழிற்சாலையின்
5 வருட உத்தரவாதம்

License No : 50445
BS No : 5412:1996
License No : KM41240

516, ஸ்ரீ சங்கராஜ மாவத்தை, கொழும்பு 10.
தொலைபேசி: 2324261-5, 2337283-5
பெக்ஸ்: 2446554

WATERTEC
முத்திரையை அவதானியுங்கள்

Access Graphics

விநியோகஸ்தர்:
நாராயணா கட்டிடப்பொருட்கள் வர்த்தகர், 95/1, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம்.

### ARUNS SPORTS SPOT

17 - செப்ரெம்பர் 2003 முதல் ......

### மலிவு விற்பனை

★ கிரிக்கெட் உபகரணங்கள்
★ கால்பந்து, கூடைப்பந்து, வலைப்பந்து, கரப்பந்து, விளையாட்டு உபகரணங்கள்
★ உள்ளக விளையாட்டு உபகரணங்கள் - செஸ்போட்,கரம்போட் மேசைப்பந்து
★ பாட்மின்றன் ரக்கெற் - பூக்கள்
★ ஸ்பைக்ஸ் - பூட்ஸ் முதலியன
★ உடற் பயிற்சி நவீன சாதனங்கள் - றங்யாங் முதலியன
★ வெற்றிக்கிண்ணங்கள் - கேடயங்கள்

இன்னும் பல....

தரமான பொருள்கள்!

அருண்ஸ் ஸ்போட்ஸ் ஸ்பொட்
257, ஸ்ரான்லி வீதி (BATA அருகில்),
யாழ்ப்பாணம்.

(சி-30214) (31-16-18)

# வட அயர்லாந்து கருத்தரங்கிற்கு முன் புலிகளின் ஆலோசனைகள் சமர்ப்பிப்பு?

கொழும்பு,செப்.17

நோர்வே அரசின் அனுசரணையுடன் வட அயர்லாந்தில் நடைபெறவிருக்கும் சமாதான கருத்தரங்கிற்கு முன்னர் இடைக்கால நிர்வாகக் கட்டமைப்புப் பற்றிய விடுதலைப் புலிகளின் பதில் ஆலோசனைகள் அரசிடம் சமர்ப்பிக்கப்படும் என்று லண்டன் ஐபிசி. வானொலி தெரிவிக்கின்றது.

எதிர்வரும் 26ஆம், 27ஆம் திகதிகளில் வட அயர்லாந்தில் நடைபெறும் இக்கருத்தரங்கிற்கு விடுதலைப் புலிகளின் அரசியல்துறைப் பொறுப்பாளர் சு.ப.தமிழ்ச்செல்வன் அழைக்கப்பட்டிருக்கிறார். அக்கருத்தரங்கில் அவர் பங்குபற்றுவார் என்று வன்னித் தகவல்கள் தெரிவிக்கின்றன.

தமிழ்ச்செல்வன் வட அயர்லாந்துக்குப் புறப்பட்டுச் செல்வதற்கு முன்னர் புலிகளின் பதில் ஆலோசனைகள் அரசிடம் சமர்ப்பிக்கப்படும் எனவும் அத்தகவல்கள் கூறுகின்றன.

## இலவச மருத்துவமுகாம்

தென்மராட்சி,செப்.17

சாவகச்சேரி லயன்ஸ் கழகத்தினர் தென்மராட்சி கிழக்குப் பகுதி மக்களுக்காக நடத்தும் இலவச மருத்துவ பரிசோதனைமுகாம் எதிர்வரும் 21ஆம் திகதி கொடிகாமம் திருநாவுக்கரசு மகாவித்தியாலயத்தில் இடம்பெறும்.

(ம-117)

## பாலியாற்று மணல் குடாநாட்டில்

நீண்டகால இடைவெளிக்குப் பின்னர் குடாநாட்டின் கட்டடப்பணிகளுக்கென பாலியாற்று மணல் எடுத்துவரப்படுவதைக் காணக்கூடியதாகவுள்ளது.

ஏ-9 தரைவழிப்பாதை ஊடான போக்குவரத்துத் தடைப்படுவதற்கு முன்னர் கண்டாவளைப் பிரதேசத்தில் இருந்து இம்மணல் லொறிகளிலும், உழவியந்திரங்களிலும் மிக அதிகளவில் குடாநாட்டுக்கு எடுத்துவரப்பட்டது.

இந்த மணலைப் பயன்படுத்துவதில் கட்டடங்களை அமைப்போர் பெரிதும் ஆர்வம் காட்டியதை அடுத்தே இது எடுத்து வரப்பட்டது. பின்னர் ஏ-9 தரைவழிப்பாதை போக்குவரத்துக்குத் தடைப்பட்டதை அடுத்து இதுவும் தடைப்பட்டது.

கடந்தாண்டு ஏப்ரல் மாதம் ஏ-9 தரைவழிப்பாதை மீண்டும் போக்குவரத்துக்கு அனுமதிக்கப்பட்டதையடுத்து இந்த மணல் எடுத்துவரப்படுகிறது. தற்போது யாழ். மாவட்ட பாரவூர்தி உரிமையாளர் கூட்டுறவுச் சங்கமும் இந்த மணலை எடுத்து வந்து மக்களுக்கு விநியோகம் செய்து வருகிறது.(ம-10)

# பொங்கு தமிழ் தூபி 24ஆம் திகதி திறப்பு

"'பொங்கு தமிழ்' தூபி எதிர்வரும் 24ஆம் திகதி திறக்கப்படும் என்று வவுனியா 'பொங்கு தமிழ்' ஏற்பாட்டுக்குழு அறிவித்துள்ளது.

2002ஆம் ஆண்டு பங்குனி மாதம் முதலாம் திகதி அமைச்சர் பெ.சந்திரசேகரனால் வவுனியா நகரசபை முன்றிலில் இதற்கு அடிக்கல் நடப்பட்டது.

தற்போது இந்தப் பணிகள் முடிவுற்று வருவதாகவும் 24ஆம் திகதி வவுனியாவில் நடைபெற உள்ள 'பொங்கு தமிழ்' நிகழ்ச்சியின் போது தூபி திறந்து வைக்கப்படும் என்றும் ஏற்பாட்டுக் குழுவினர் தெரிவித்தனர்.

# அஷ்ரப் நினைவு முத்திரை நாளை வெளியாகும்

கொழும்பு, செப்.17

ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் தலைவரும் அமைச்சருமான மறைந்த எம்.எச்.எம். அஷ்ரப்பின் ஞாபகார்த்த முத்திரை நாளை வியாழக்கிழமை வெளியிடப்படும்.

ஜனாதிபதி சந்திரிகா பண்டாரநாயக்க, பிரதமர் ரணில் விக்கிரமசிங்க ஆகியோர் கலந்துகொள்ளும் முத்திரை வெளியீட்டு வைபவம் அன்று மாலை 5 மணிக்கு கொழும்பு இன்டர் கொண்டினென்டல் ஹோட்டலில் நடைபெறும்.

இந்த முத்திரை வெளியீட்டு வைபவத்தில் அமைச்சர்கள், முன்னாள் அமைச்சர்கள், அரசியல் தலைவர்கள், வெளிநாட்டுத் தூதுவர்கள் ஆகியோரும் கலந்துகொள்வர். (ஓ)


நாம் உங்கள் மின் மற்றும் தண்ணீர் கட்டணங்களை செலுத்தி உங்களை நிதிச் சுமைகளில் இருந்தும் விடுதலை பெறச்செய்கிறோம்

இலகுவாக உங்கள் மாதாந்த பில்களை கட்டுவதோடு உங்கள் மாத வருமானத்தையும் அதிகரியுங்கள்

மேலதிக விவரங்களுக்கு நாடெங்கும் பரந்த வலைப்பின்னலில் அமைந்த ஏதாவது செலான் வங்கி கிளையை நாடுங்கள்

உடன் அழைக்க: 2456931




செலான் வங்கி
அன்புடன் அரவணைக்கும் வங்கி

GRACE

"சக்தி பண வைப்பு" உங்களின் பில் தொல்லைகளில் உதவுவதோடு உங்களின் பணத்தையும் சேமிக்கும்!



சுவையுங்கள்

உடன் கரையும் பால்... என்றும் சௌகரியமான பால்




அறிமுகமாகிறது... மில்குறோ. புரட்சிகரமான இந்த முழு ஆடைப் பால் மா உடனடியாகவும் முழுமையாகவும் கரைவதால் துகள்களோ கட்டிகளோ இருக்கமாட்டாது. சுவை நலத்தை மட்டுமே தரும். மில்குறோ போஷாக்கு மிக்கது. உங்கள் பிள்ளைகளின் பலமான, நலமான வளர்ச்சிக்கு அத்தியாவசியமான விட்டமின் A மற்றும் D3 என்பன நிறைந்தது. உடனடிக் கரைவு. உடனடிச் சௌகரியம். உடனடி நம்பிக்கை. உங்கள் குடும்பத்திற்கு மில்குறோ போஷாக்கை வழங்குங்கள்.

மில்குறோ®
தற்கால மகளிருக்கு

## கட்டுநாயக்க விமானநிலையத் தாக்குதல்:
# பதவிநீக்கம் செய்யப்பட்ட அதிகாரியின் மேன்முறையீட்டு மனு மீது விசாரணை

கொழும்பு, செப்.17

கட்டுநாயக்க சர்வதேச விமான நிலையத்தை விடுதலைப் புலிகள் தாக்கிய சமயம் கட்டுநாயக்க விமானப்படைத் தளத்துக்குப் பொறுப்பாக விருந்த எயார் கொமடோர் ஆர்.ஏ. ஆனந்த, தான் பதவிநீக்கம் செய்ததை எதிர்த்துத் தாக்கல் செய்த மனு நேற்றுமுன்தினம் விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது. அப்போது அவரது பதவி நீக்கத்தை ரத்துச் செய்து, அவரை சேவையிலிருந்து ஓய்வுபெற்றவராகக் கருத வழிசெய்யும் விதத்தில் உயர்நீதிமன்றம் தீர்ப்பு வழங்கியுள்ளது.

2001ஆம் ஆண்டு ஜுலை 24ஆம் திகதி விடுதலைப் புலிகள் கட்டுநாயக்க சர்வதேச விமானநிலையம் மற்றும் விமானப்படைத்தளம் ஆகியவற்றைத் தாக்கியபோது, அங்கு கடமையிலீடுபட்டிருந்தவர்களில் எயார் கொமடோர் ஆனந்தவும் ஒருவர். தாக்குதல் சம்பவம் தொடர்பான விசாரணை நடைபெற்று அதன் முடிவில் எயார் கொமடோர் ஆனந்த பதவி நீக்கம் செய்யப்பட வேண்டுமென விசாரணைக் குழுவினர் சிபார்சு செய்தனர்.

அவர் பதவிநீக்கம் செய்யப்பட்டதையடுத்து அதை எதிர்த்து உயர் நீதிமன்றத்தில் மனுத்தாக்கல் செய்திருந்தார்.

மனுமீதான விசாரணை நேற்று உயர் நீதிமன்றத்தில் நீதியரசர்கள் மார்க் பெர்னாண்டோ, சி.வி.விக்னேஸ்வரன், டி.பி.வீரசூரிய ஆகியோர் முன்னிலையில் நடைபெற்றது. அப்போது இரு தரப்பாரும் ஒருமித்த முடிவுக்கு வந்தனர்.

மனுதாரரை பதவிநீக்கம் செய்யப்பட்டவரெனக் கருதாமல் - பதவிநீக்கத்தை ரத்துச்செய்து - அவரை ஓய்வு பெற்றவராகக் கருதி, அவர் பதவிநீக்கம் செய்யப்பட்ட நாளிலிருந்து அவரது கொடுப்பனவுகளை அவருக்கு வழங்க நடவடிக்கை எடுப்பது என முடிவுசெய்யப்பட்டது.

இதனை உயர்நீதிமன்றம் ஏற்றுக் கொண்டது.

மனுவை ஆதரித்து சட்டத்தரணி மனோகர டி சில்வாவும், எதிர் மனுதாரர்கள் சார்பில் சட்டத்தரணி வெலியாமுனையும் ஆஜராகியிருந்தனர்.

# நெல் போன்று குரக்கனையும் சூடடிக்கிறார்கள் விவசாயிகள்

வலி.தெற்கு,செப்.17

நெல்லைக் குவித்து இழுவைப் பொறியால் சூடடிப்பது போன்று குரக்கன் பயிரையும் இழுவைப் பொறியால் சூடடிப்பதில் கந்தரோடைப் பகுதி விவசாயிகள் அதிக ஆர்வம் காட்டி வருகின்றனர்.

இதுவரை காலமும் தாம் பயிர் செய்து பெற்ற குரக்கனை கொய்து, அவற்றை உரலில் இட்டு குற்றி பின்னர் இயந்திரங்களில் இட்டு தீட்டி அவர்கள் குரக்கனைப் பெற்றுவந்தனர்.

தற்போது நெல்லைப்போன்று இழுவைப் பொறிகளைக் கொண்டு (டிராக்டர்கள்) சூடடித்து குரக்கனை வேறாக் கும் முயற்சியில் அவர்கள் வெற்றி கண்டுள்ளனர்.

ஏற்கனவே இருந்து வந்த நடைமுறையில் வேலையாள் கள், நேரம் என்பவற்றை அதிக அளவில் பயன்படுத்த வேண்டி இருந்தது.

இழுவைப் பொறிகொண்டு குரக்கனை வேறாக்குவதால் நேரச்சிக்கனம் மற்றும் குறைந்த செலவு என்பவற்றைப் பெறமுடிவதாக விவசாயிகள் தெரிவிக்கின்றனர்.

அளவெட்டி, மாகியப்பிட்டி, கந்தரோடை பகுதிகளில் இம்முறை குரக்கன் பயிர் செழிப்பாக வளர்ந்து, நல்ல விளைச்சல் கண்டிருக்கின்றது. விவசாயிகளின் இப்புதுவித முயற்சியால் மிகவிரைவில் குரக்கனை பிரித்தெடுக்க முடிகின்றது.

(ம-152)

# திலீபன் முன்வைத்த கோரிக்கைகள் இன்றும் நிறைவேற்றப்படவில்லை
## அவற்றை நிறைவேற்றக் கோரியே போராட்டம் என்கிறார் தென்னவன்

திருகோணமலை,செப்.17

தியாகி திலீபன் முக்கியமான ஐந்து கோரிக்கைகளை முன் வைத்தே உண்ணாவிரதப் போராட்டத்தில் ஈடுபட்டார். அவர் காலமாகி 16 வருடங்கள் கழிந்தும் அவை இன்னும் நிறைவேற்றப்படவில்லை. அவற்றை நிறைவேற்றக் கோரியே எமது போராட்டம் தொடர்கின்றது.

- இவ்வாறு லெப்டினன்ட் கேணல் திலீபனின் 16ஆவது நினைவுதின நிகழ்வில் தலைமை வகித்துப் பேசிய மாவீரர் பணிமனைப் பொறுப்பாளர் தென்னவன் தெரிவித்தார்.

திருகோணமலை மாவட்ட அரசியல் பணிமனையில் மேற்படி நிகழ்ச்சி இடம்பெற்றது.

அரச - அரசசார்பற்ற நிறுவனங்களின் பிரதிநிதிகள் கல்விச் சமூகத்தவர்கள், தொண்டர் நிறுவனங்களின் பிரதிநிதிகள் ஆகியோர் இதில் கலந்துகொண்டனர்.

தென்னவன் தொடர்ந்து பேசுகையில் கூறியதாவது:-

திலீபனின் கோரிக்கைகள் நிறைவேற்றப்படாததால், நாமும் அவருடைய வழியைக் கடைப்பிடிக்க நேரிடலாம்.

- உண்ணாவிரதத்தைக் கைவிடும் படி மக்கள் கேட்டும் தனது கோரிக்கை நிறைவேற்றப்பட வேண்டும் என்பதில் உறுதியாக இருந்தார் திலீபன். போராட்ட வடிவங்கள் மாறவில்லை. இலட்சியம் மாறப்போவதில்லை என்ற அவரின் இறுதிக் கூற்றுக்கு ஏற்ப இன்று வடிவங்கள் மாறி வருகின்றன. எனினும், எமது இலட்சியம் மாறப் போவதில்லை.

தியாக உணர்வும், தமிழ் மண்ணின் மீது பற்றும் கொண்டிருந்தார் திலீபன். அவ்வாறே தமிழ்மக்கள் மீதும் தமிழ் மொழி மீதும் உயிராய் இருந்தார்.

சிங்களக் குடியேற்றம் தடுக்கப்பட வேண்டும் என்பதிலும் மாற்று இயக்கங்கள் வளர்ந்து தமிழினம் பிளவுபடுவதை தடுக்கவேண்டும் என்பதிலும் அக்கறை செலுத்தினார்.

சிங்கள அரசின் கபடத்தையும் அதற்கு காந்திதேசம் துணை போவதையும் சுட்டிக் காட்டினார் திலீபன் - என்றார்.

# பளையில் பரவும் புதுவித காய்ச்சல்

தென்மராட்சி,செப்.17

பளைப் பகுதியில் புதுவித வைரஸ் காய்ச்சல் வேகமாகப் பரவி வருகிறது. இக்காய்ச்சலினால் பாதிக்கப்பட்ட ஒரே குடும்பத்தைச் சேர்ந்த மூன்று குழந்தைகள் உட்பட ஐந்து பேர் சாவகச்சேரி ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

புலோப்பளையைச் சேர்ந்த தர்மகுலம் இராசம்மா (வயது-38), இவரது பிள்ளைகளான தர்மகுலம் ரவீபன் (வயது-4), தர்மகுலம் மதுர்சிகா (வயது-2 1/2), தர்மகுலம் கிருசிகா (வயது-1), மற்றும் யோகராசா இந்திராணி (வயது-35) ஆகியோரே ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டுள்ளவர்களாவர். (ஒ-117)




நல்லூர் பிரதேச சபையின் உள்ளூராட்சி வார விழா பலாலி ஆசிரிய பயிற்சிக் கலாசாலையில் அண்மையில் நடைபெற்றது. கலாபூஷணம் தாவடியூர் கே.எஸ்.ஆர். திருஞானசம்பந்தன் மங்கள விளக்கேற்றுகிறார். அருகில் விழாவுக்கு தலைமை வகித்த பிரதேச சபை செயலாளர் செ.செல்வரத்தினம் காணப்படுகின்றார். நல்லை ஆதீன முதல்வர் ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர ஞானசம்பந்த பரமாசார்ய சுவாமிகள் மேடையில் அமர்ந்துள்ளார்.

*(படம்: சண்டிலிப்பாய் செய்தியாளர்.)*

# கசிப்பு உற்பத்தியில் ஈடுபட்ட பெண்ணுக்கு ஒன்றரை லட்சம் ரூபாய் அபராதம் விதிப்பு
## கணவரைக் கைது செய்ய பிடியாணை

தெல்லிப்பளை,செப்.17

கசிப்பு உற்பத்தி மற்றும் விற்பனையில் ஈடுபட்ட பெண் ஒருவருக்கு மல்லாகம் மாவட்ட நீதிமன்றம் ஒரு லட்சத்து 45ஆயிரம் ரூபா அபராதம் விதித்துள்ளது. அவரது கணவனைக் கைதுசெய்வதற்கான பிடியாணை உத்தரவையும் பிறப்பித்துள்ளது.

கடந்த மாத இறுதியில் மானிப்பாய் பகுதியில் கசிப்பு உற்பத்தியைக் கட்டுப்படுத்த பொலிஸார் மேற்கொண்ட தேடுதல் நடவடிக்கையின் போது பாரியளவில் நீண்டகாலமாக கசிப்பு உற்பத்தியிலீடுபட்ட தம்பதியர் பற்றிய தகவல் பொலிஸாரிடம் சிக்கியது. அவர்களை பொலிஸார் கைதுசெய்ய முயன்றபோது கணவர் தப்பியோடிவிட்டார். கர்ப்பிணியான மனைவி பொலிஸாரிடம் பிடிபட்டார். இத் தம்பதியினது கசிப்புத் தொழிற்சாலையிலிருந்து 240 லீற்றர் கசிப்பும் 8 போத்தல் கோடாவும் பொலிஸாரால் கைப்பற்றப்பட்டது.

மானிப்பாயைச் சேர்ந்த அர்ஜுனன் வசந்தகுமாரி என்ற பெண்ணே பொலிஸாரால் கைதுசெய்யப்பட்டு நீதிமன்றில் ஆஜர் செய்யப்பட்டார். அவரது கணவரான ராஜகிரி அர்ஜுனன் என்பவர் தலைமறைவாகியுள்ளார்.

கடந்த மாத இறுதியில் பொலிஸாரால் மல்லாகம் நீதிமன்றில் தாக்கல் செய்யப்பட்ட இவ்வழக்கை விசாரணை செய்த மல்லாகம் மாவட்ட நீதிவான் சரோஜினி இளங்கோவன் குற்றவாளியான பெண்ணுக்கு ஒரு லட்சத்து 45ஆயிரம் ரூபா அபராதம் விதித்து தீர்ப்பளித்தார்.

குற்றவாளி தான் கர்ப்பிணியான நிலையில் இக்குற்றப்பணத்தைச் செலுத்த முடியாது எனவும் இரக்கம் கொண்டு தன்னை விடுதலை செய்வீர்கள் என்றே தன் கணவர் தலைமறைவாகியுள்ளதாகவும் நீதிமன்ற விசாரணையில் தெரிவித்தார்.

இதனையடுத்து அந்தப் பெண்ணின் கணவரைப் பிடித்து நீதிமன்றில் ஆஜர்செய்யுமாறு பொலிஸாருக்குப் பிடியாணை வழங்கும் உத்தரவை விடுத்ததோடு மேற்படி பெண்ணை எதிர்வரும் 23ஆம் திகதி விளக்கமறியலில் வைக்குமாறும் நீதிபதி உத்தரவிட்டார்.

இதேவேளை-

கசிப்பு வைத்திருந்த குற்றச்சாட்டின் பேரில் கைதுசெய்யப்பட்ட ஒருவருக்கு யாழ். நீதிமன்றம் 18 ஆயிரம் ரூபா அபராதமாக விதித்துள்ளது.

சேகர் புவனேஸ்வரன் என்பவரையே கசிப்பு வைத்திருந்தமைக்காக 15ஆயிரம் ரூபா தண்டப் பணமும் மூவாயிரம் ரூபா தர்மப்பணமும் செலுத்துமாறு யாழ். நீதிமன்ற நீதிவான் ஆர்.ரி.விக்னராஜா உத்தரவிட்டார்.

(ம-150-8)

## யுத்தத்தின் கோரத்தால்
# மனங்களில் ஏற்பட்ட மாறாவடுக்களை மாற்றுவதற்கு நடவடிக்கை எடுங்கள்
## அமைச்சர் ரவூப் ஹக்கீம் வேண்டுகோள்

கொழும்பு,செப்.17

யுத்தக் கொடுமையால் மனித உள்ளங்களில் ஏற்பட்டுள்ள பீதியையும் மாறாத வடுக்களையும் உற்று நோக்கி அவற்றை நீக்க நடவடிக்கை எடுக்கவேண்டும்.

இதனை ஜப்பானின் விசேட தூதுவர் யசூசி அகாஷி அனுபவபூர்வமாக அறிந்துகொண்டார். அம்பாறை, கல்முனை மாவட்டங்களுக்கு அவர் விஜயம் செய்தபோது அவரைச் சந்தித்த பொதுமக்கள் இதனைத் தெளிவுபடுத்தினர்.

துறைமுக, கப்பல்துறை, முஸ்லிம் விவகார, கிழக்கு மாகாண அபிவிருத்தி அமைச்சர் ரவூப் ஹக்கீம் இப்படிக் கூறினார்.

கடந்த சனிக்கிழமை மாலை ஸ்ரீல.மு.காங்கிரஸ் தலைமையகமான தாருஸ்ஸலாமில் இடம்பெற்ற மு.பஷீரின் "தலைமுறை இடைவெளி" என்ற நூல் வெளியீட்டு விழாவில் பிரதம அதிதியாகக் கலந்துகொண்டு உரையாற்றும் போதே அமைச்சர் ஹக்கீம் இதனைக் குறிப்பிட்டார்.

மினுவாங்கொட கலை இலக்கிய வட்டத்தின் ஏற்பாட்டில் மு.பஷீரினால தேசிய பத்திரிகைகளில் எழுதப்பட்ட சிறுகதைகளின் தொகுப்பே "தலைமுறை இடைவெளி" என்ற பெயரில் சிறுநூல் வடிவில் வெளியிடப்பட்டது.



கலாபூஷணம் எம்.ஏ.எம்.ஜவாத் மரைக்கார் தலைமையில் நடைபெற்ற இவ்விழாவில் மினுவாங்கொட கலை இலக்கிய வட்ட செயலாளர் எம்.ஏ.எம். நிலாம் வரவேற்புரை நிகழ்த்தினார். அங்கு உரையாற்றிய அமைச்சர் ரவூப் ஹக்கீம் மேலும் கூறியதாவது:-

ஜப்பானின் விசேட தூதுவர் யசூசி அகாஷி கிழக்கு மாகாணத்திற்கு விஜயம் செய்தார். அவர் பல்லின மக்களையும் சந்தித்தார். யுத்தத்தால் அங்கு ஏற்பட்ட அனர்த்தங்களையும் அழிவுகளையும் பார்வையிட்டார். அவரைச் சந்தித்த கிறிஸ்தவ பாதிரியார் ஒருவர் யுத்த அழிவுகளைப் பார்ப்பதைவிட இங்கு வாழும் மக்களின் மனதில் ஏற்பட்டுள்ள மாறாத வடுக்களைப் பார்த்தறிந்து அவற்றிற்குரிய பரிகாரம் காணவேண்டும் எனக் கேட்டுக்கொண்டார்.

அங்கு வாழும் தமிழ், முஸ்லிம் மக்கள் மத்தியில் சிதைந்து போயுள்ள நல்லுறவை மீண்டும் கட்டியெழுப்ப வேண்டியதற்கான நடவடிக்கைகளுக்கே முன்னுரிமை வழங்கப்பட வேண்டும் என்று ஜப்பானும் கருதுகின்றது.

எம்மத்தியில் முந்திய தலைமுறைக்கும் இன்றைய தலைமுறைக்கும் இடையில் பாரிய இடைவெளி ஏற்பட்டுள்ளது. இந்த இடைவெளி நிரப்பப்பட வேண்டும். இது தனி ஒரு மனிதனால் முடியாது. இதனை ஏற்படுத்த சமூக மாற்றம் அவசியம்.

சகோதரர் பஷீரின் ஆக்கங்கள் அருமையானவை. இப்படியான ஒரு முயற்சி பாராட்டப்படத்தக்கதே.

- இப்படி அமைச்சர் ரவூப் ஹக்கீம் கூறினார்.

# கள் விற்பனை நிலையங்கள் குறித்து விசாரிப்பதற்குக் குழு

தெல்லிப்பழை,செப்.17

உடுவில் பிரதேச செயலர் பிரிவில் இயங்கிவரும் கள் விற்பனை நிலையங்கள் சில தொடர்பாக பொது மக்களால் கொடுக்கப்பட்ட புகார்களை விசாரித்து நடவடிக்கை எடுக்க உடுவில் பிரதேச செயலர் தலைமையில் குழு ஒன்று அமைக்கப்பட்டுள்ளது.

கடந்த வாரம் உடுவில் பிரதேச செயலகத்தில் பிரதேச செயலர் எஸ்.ஆர்.ஜெயப்பிரகாசம் தலைமையில் நடைபெற்ற ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டத்தில் மேற்படி விடயம் குறித்து ஆராயப்பட்டது.

இப்பகுதியிலுள்ள சில கள் விற்பனை நிலையங்கள் குறித்து பொது மக்கள் கொடுத்த பல்வேறு முறைப்பாடுகள் பற்றி கிராமசேவகர்கள் பிரதேச செயலரிடம் எடுத்துக் கூறியதையடுத்து பிரதேச செயலரினதும் சம்பந்தப்பட்ட நிறுவனங்களின் உயரதிகாரிகளதும் ஆலோசனைக்கமைய இணக்கநிலைக் குழுவொன்று உருவாக்கப்பட்டது.

இக்குழுவில் பிரதேச செயலர் முறைப்பாடுகள் கிடைக்கப்பெற்ற பகுதிகளின் கிராமசேவகர்கள், மதுவரி திணைக்கள அதிகாரி, பனை தென்னை வள அபிவிருத்திக் கூட்டுறவு சங்க பிரதிநிதி, கள் உற்பத்தியாளர் பிரதிநிதி ஆகியோர் உள்ளடக்கப்பட்டுள்ளனர்.

இக்குழு மேற்படி முறைப்பாடுகளை சுமுகமாக விசாரித்து உரிய இணக்கமான முடிவுகளை மேற்கொள்ளுமென பிரதேச செயலர் தெரிவித்தார். (ம-150)

# பாடசாலைக்கு நிதி ஒதுக்கீடு

தெல்லிப்பழை,செப்.17

கந்தரோடை தமிழ் கந்தையா வித்தியாலயத்திற்கு யாழ். மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர்களின் பன்முகப்படுத்தப்பட்ட வரவு - செலவுத் திட்ட நிதியின் கீழ் 2 லட்சம் ரூபா நிதி ஒதுக்கப்பட்டுள்ளது. (ம-150)

# பாராட்டி வாழ்த்துகின்றோம்



பண்டத்தரிப்பைச் சேர்ந்த அருள்பிரகாசம் அருள்லீலி நாயகம் கடந்த 15.09.2003ஆம் திகதியன்று யாழ். நீதி மன்ற நீதிபதி திரு.இ.த.விக்னராஜா முன்னிலையில் யாழ்ப் பாண நீதி நிர்வாக மாவட்ட சமாதான நீதிவானாக சத்தி யப் பிரமாணம் செய்துகொண்டார். இவர் இளவாலை புனித ஹென்றியரசர் கல்லூரி, பண்டத்தரிப்பு ஜசிந்தா றோமன் க.த.க. வித்தியாலயம் ஆகியவற்றின் அபிவிருத்திச் சங்க முன்னாள் செயலாளரும் பண்டத்தரிப்பு புனித அந்தோ னியார் ஆலய நிர்வாக சபை உறுப்பினருமாவார்.

இவரின் சேவைகள் சிறந்தோங்கப் பாராட்டி வாழ்த்து கின்றோம்.

சென்.அன்ரனீஸ் லேன்,
பண்டத்தரிப்பு. (22678)(12-16-31)

குடும்பத்தினர், உறவினர்கள்,
நண்பர்கள்.


## யாழ்நகரில் மேசைத் தொலைபேசி விற்பனைக்கு....!

P.C.T.C

கவர்ச்சிகரமான விலையில் மேசைத் தொலைபேசிக்கு யாழ். நகரில் முதற்தர நிறுவனம்.

*பவர் செல்லுலர்.*
*185, கஸ்தூரியார் வீதி,*
*ராஜா தியேட்டர் அருகில்.*

I.DD இணைப்புகள் ஸ்ரீலங்கா தொலைபேசி நிறுவனத்துடன் இணைக்கப்பட்டுள்ளது.

24 மணிநேரத்தில் பக்கேஜ் இணைப்புக்கள் வழங்கப்படும்.

உத்தரவாதம் உண்டு.

தொடர்புகளுக்கு:0777 242416,0712 - 399220
0712 - 381125;

**E-mail: Power@ cl.lk**

யாழ்நகரில் அங்கீகரிக்கப்பட்ட ஒரே நிறுவனம். (C/30227)



## ரஷ்யாவில் Medicine, Engineering

படிப்பதற்கான அரிய சந்தர்ப்பம்!

- ★ Sri lanka Medical Council இனால் அங்கீகரிக்கப்பட்ட MBBS மற்றும் MD பட்டங்களைப் பெறுவதற்கான கல்வியை ரஷ்யா வில் முற்று முழுதாக ஆங்கிலமொழி மூலம் கற்கும் வசதி.
- ★ Medicine படிப்பதற்கு ஆகக்குறைந்த அனுமதித் தகைமை A/L இல் 3பாடங்களில் சித்தி.
- ★ ஒரு மாதத்தில் விஸா எடுத்து ரஷ்யாவிற்குப் போகலாம்.
- ★ இலவச விடுதி மற்றும் சுகாதார வசதிகள் (மாணவிகளுக்கு தனிப்பட்ட ஒழுங்குகள்).
- ★ ரஷ்யாவில் தற்போது படித்துக்கொண்டிருக்கும் இலங்கைத் தமிழ் மாணவ. மாணவிகளுடன் பயண ஒழுங்குகள். (விசேட சலுகை வசதிகளுடன்)

*மேலதிக விவரங்களுக்கு:*

Ministry of health of the Russian Fedaration
TVER STATE MEDICAL ACADEMY, OVERSEAS STUDENT PROGRAM

Phone - 2365736
Fax - 2586591
Mobile - 0722993558

யாழ்ப்பாணத்தில் தொடர்புகளுக்கு: 070 213269
0777 047010

யாழ்ப்பாண மாணவ. மாணவியருக்கு:
கருத்தரங்கு. நேர்முகப் பரீட்சை. SPOT ADMISSION என்பன யாழ்ப்பாணத்திலேயே நடைபெறும்.

(C/30225)(31-12-16)


# மரண அறிவித்தல்கள்

## செல்லையா தியாகராஜா (காரைநகர்)

காரைநகர், கருங்காலியைப் பிறப்பிடமாகக் கொண்டவரும் தற்போது பதுளை ஸ்பிரிங் வெலிரோட் றொக்கில் இல. 217இல் வசித்தவருமாகிய செல் லையா தியாகராஜா அவர்கள் நேற்று (16-09-2003) செவ்வாய்க்கிழமை காலை இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்ற S.செல்லையாபிள்ளை - திருமதி விசாலாட்சி அவர்களின் மகனும் காலஞ்சென்ற திரு.திருமதி கந்தையா (V.கந்தையா & Sons, பதுளை) தம்பதிகளின் மருமகனும் கனகேஸ்வரியின் அன்புக் கண வரும் சிவகௌரி (பிரான்ஸ்), சிவகுமார் (East West Marketing. Pvt. Ltd. Colombo), சிவனேசன் (சுவதேசி Ltd), சிவமனோகரி (லண்டன்), சிவரஞ்சினி ஆகியோரின் அன்புத் தந்தையும் பாக்கியராஜா (பிரான்ஸ்), நந்த குமார் (லண்டன்) ஆகியோரின் அன்பு மாமனாரும் விபூஷன், விதுரன் ஆகியோ ரின் அன்புப் பேரனும் ராமச்சந்திரன் (சந்திரன்) அவர்களின் சகோதரனுமா வார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (18-09-2003) வியாழக்கிழமை காலை 11மணியளவில் அவரின் இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் பி.ப.2 மணிக்கு பதுளை பொதுமயானத்தில் தகனஞ் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*இல.217,வீரியபுர றொக்கில்,*
*பதுளை.*
(22693) (29-12-16-31)

தகவல்:
சிவநேசன்
(மகன் -பதுளை).

## திருமதி சரவணமுத்து சின்னப்பிள்ளை

அல்லாரை வடக்கு, கொடிகாமத்தைப் பிறப்பிடமாகவும் வசிப்பிட மாகவும் கொண்ட திருமதி சரவணமுத்து சின்னப்பிள்ளை அவர்கள் நேற்று (16.09.2003) செவ்வாய்க்கிழமை காலமாகிவிட்டார்.

அன்னார் காலஞ்சென்ற சரவணமுத்துவின் அன்பு மனைவியும் சிவ ஞானம், திலகவதி, அன்னலட்சுமி, மகேஸ்வரி, சரஸ்வதி, பரமேஸ்வரி, மங்களேஸ்வரி ஆகியோரின் அன்புத் தாயாரும் சரஸ்வதி, காலஞ்சென்ற நவரத்தினம், இராசையா மற்றும் பஞ்சாட்சரம், வைத்திலிங்கம், அமிர்த லிங்கம், ரவீந்திரன (துரைசிங்கம் அன் செல்பனி) ஆகியோரின் பாசமிகு மாமி யாரும் தவஞானம், தயாபரன், சசிகரன், கலைச்செல்வி (கனடா), தவச் செல்வி (கனடா), பாஸ்கரன், ஸ்ரீஹரன், வதனி, ஜெயசீலன், சத்தியசீலன், ரஞ்சினி, சிவரதி, சிவரசி, சிவசுதன், தயாளன், பகீரதி, மாலதி, சுஜீ வன், சுகன்யா, வஜிதராம் ஆகியோரின் பேர்த்தியும் கிருபன், கீர்த்தனா, மயூரன், விதுசன், சிந்துஜா, சஞ்ஜீவன், சஞ்சீதா, சயந்தன், மதுராணி, நிதர்சனி, துளசிராம், ஜெசிந்தன், மாதுமா, மதுசனா, நிருசன், தர்சனா, லக்சனா, பிரசாந், அஜித்தா, பாலரூபன், தனரூபன் ஆகியோரின் பூட்டி யும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (17.09.2003) புதன்கிழமை நண்பகல் 12.00 மணியளவில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக கொற்புலவு இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*அல்லாரை வடக்கு,*
*கொடிகாமம்*
(22695) (31-12-16)

தகவல்:
இ.பாஸ்கரன்
(பேரன்).

# முஸ்லிம் சமூகத்துடன் கருணா பேச்சு

கொழும்பு,செப்.17

தமிழீழ விடுதலைப் புலிகளின் கிழக்குப்பிராந்தியத் தளபதி கேணல் கருணா அம்மான், கிழக்குப்பிராந்திய முஸ்லிம் சமூகத்தினர், சமயப் பெரியார்கள் மற்றும் புத்திஜீவிகளுடன் விசேட சந்திப்பொன்றை மேற் கொள்ள வுள்ளார்.

எதிர்வரும் 20ஆம் திகதி சனிக் கிழமை மட்டக்களப்பு கரடியனாறில் உள்ள புலிகளின் தேனகம் விருந் தினர் விடுதியின் மாநாட்டு மண்ட பத்தில் நடைபெறவிருக்கும் இச்சந்திப் பிற்கு மட்டக்களப்பு மற்றும் அம் பாறை மாவட்ட முஸ்லிம் சமூக முக் கியஸ்தர்களுக்கு அழைப்பு விடுக்கப் பட்டுள்ளது.

முஸ்லிம் சமூகம் எதிர்நோக்கும் பிரச்சினைகளை அரசியல் சார்பற்ற முறையில் அணுகி சுமுகமான முறை யில் தீர்வுகளைக் காண்பதற்கான ஏற்பாடுகளை செய்யும் நோக்கமா கவே இந்தச் சந்திப்பு இடம்பெற வுள்ளதாக புலிகள் தரப்பில் தெரி விக்கப்படுகிறது.

(ஒ-5-9)

# படையினர் மீது வழக்குத் தொடர முஸ்தீபு!

யாழ்ப்பாணம்,செப்.17

பொதுமக்களின் வாழ்விடங்கள், வியாபார நிலையங்கள் ஆகிய வற்றில் இருந்து படையினர் வெளி யேறாதமை மனித உரிமை மீறல் என்ற அடிப்படையில் நீதிமன்றில் வழங் குத் தாக்கல் செய்வதற்கு வலிகா மம் பிரதேச பொது அமைப்புக்கள் தயாராகி வருவதாகக் கூறப்படுகிறது.

வலிகாமம் பிரதேசத்தில் பொது மக்களின் வீடுகள், வியாபார நிலை யங்கள் சில இன்னும் படையினரின் பாவனையில் உள்ளன.

எனவே, இவற்றைப் படையினர் விடுவிக்காததை எதிர்த்து மக்கள் தனித்தனியே நீதிமன்றில் வழக்குத் தாக்கல் செய்யவுள்ளனர். இதற்கான ஆரம்பகட்ட நடவடிக்கைகளை வலி காமம், பிரதேச பொது அமைப்புக் களின் ஒன்றியம் மேற்கொண்டுள் ளது.

(ஒ-8)

# புறக்கோட்டை விபத்தில் இருவர் பலி!

கொழும்பு,செப்.17

புறக்கோட்டை போதிராஜ மாவத் தையில் நேற்றுமுன்தினம் இடம் பெற்ற விபத்தில் இருவர் பலியாகி னர்; ஏழுபேர் காயமடைந்தனர்.

மினுவாங்கொடையில் இருந்து கொழும்பு நோக்கி வந்துகொண்டி ருந்த பஸ் ஒன்று மற்றொரு பஸ் ஸுடன் விபத்துக்குள்ளானதில் இந்த உயிரிழப்புக்கள் ஏற்பட்டன.

போதிராஜ மாவத்தையால் நடந்து சென்று கொண்டிருந்த ஒருவரும், ஒரு சிறுவனுமே விபத்தில் பலியாகினர் என்று தெரிவிக்கப்படுகிறது.

இந்தச் சம்பவத்தில் அருகில் இருந்த கடைகளுக்கும் சேதம் ஏற்பட்டுள் ளது. பஸ்ஸின் சாரதி வாகனத்தை ஓட்டும்போது நித்திரையாகியதால் இவ்விபத்து இடம்பெற்றிருக்கலாம் எனத் தெரிவிக்கப்படுகிறது.

பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டுள்ளனர்.


## A/L-உயிரியல்-2005

செய்முறை வழிகாட்டிக் கைநூல்
(Practical Guide Book)

ஆக்கியோன்:
இ.ஈஸ்வரநாதன்
B.Sc.(bio)PGDE
(Colombo Hindu College)

பூபாலசிங்கம் புத்தகசாலை-யாழ்.
ஸ்ரீலங்கா புத்தகசாலை - யாழ்.
சுப்பிரமணியம் புத்தகசாலை - யாழ்.
பெற்றுக்கொள்ளலாம். (2262)

BIOLOGY CENTRE [illegible]



## வீடு விற்பனைக்கு

யாழ்/கச்சேரிக்கு 200மீ தூரத்தில் கச்சேரி பஸ் நிலையத் திற்கு பின்புறத்தில் 2 பரப்புக் காணியுடன் சகல வசதிகளுடனும் கூடிய 4 அறைகள் கொண்ட வீடு விற்பனைக்குண்டு.

தொடர்பு:
281/6, கண்டிவீதி,
யாழ்ப்பாணம். T.P-2222300
(22696) (12-16-31)


# மரண அறிவித்தல்கள்

## கந்தையா முத்துத்தம்பி

ஈவினை, புன்னாலைக்கட்டுவனைச் சேர்ந்த கந்தையா முத்துத்தம்பி அவர்கள் நேற்று (16.09.2003) செவ்வாய்க்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற முத்துத்தம்பி நவமணியின் அன்புக் கண வரும் தம்பிராசாவின் சகோதரரும் புஸ்பமலர், செல்வமலர், காலஞ்சென்ற இராசமலர் மற்றும் சத்திய பரமேஸ்வரன் (தம்பி) ஆகியோரின் அன்புத் தகப்பனாரும் தவராசா, இராசதுரை, சிவலிங்கம், இராசகுமாரி ஆகியோ ரின் மாமனாரும் குமுதினி, மோகனராஜ், ராஜ்குமார், ராஜ்கண்ணன், கன கசபை, ஆனந்தன், நவீனா, அம்பிகேசன், நரேஸ்கண்ணா ஆகியோரின் பேரனுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (17.09.2003) புதன்கிழமை பிற்பகல் 2மணியளவில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக ஈவினை மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை எமது உற்றார், உறவினர்கள், நண்பர்கள், அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*ஈவினை,*
*புன்னாலைக்கட்டுவன்.* (22675) (26-12-16-31)

தகவல்:
சத்திய பரமேஸ்வரன்
(தம்பி - மகன்).

## ஸ்கந்தராஜா சஜந்தன்

வட்டுக்கோட்டையைப் பிறப்பிடமாகவும் கொழும்பு, தெஹிவளையை வசிப்பிடமாகவும் கொண்ட ஸ்கந்தராஜா சஜந்தன் 14.09.2003 ஞாயிற்றுக் கிழமை தெஹிவளையில் அகால மரணமானார்.

அன்னார் ஸ்கந்தராஜா - தங்கநாயகி (வட்டு. இந்துக்கல்லூரி, ஆசி ரியை) தம்பதிகளின் செல்வப்புதல்வனும் சுஜித்தா (கல்வியியல் கல்லூரி, கோப்பாய்), தியாகராஜன் (மாணவன், வட்டு. இந்துக் கல்லூரி) ஆகியோரின் பாசமிகு சகோதரனுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் கொழும்பு தெஹிவளையில் உள்ள அவரது இல்லத்தில் இடம்பெறும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

நிரந்தர முகவரி:
*கனகரத்தினம் வீதி, வட்டுக்கோட்டை,*
தற்காலிக முகவரி:
*கல்விகாரை வீதி, 192F, தெஹிவளை,*
*கொழும்பு. T.P.No: 074 203629.*

தகவல்:
செ.பாலேந்திரன்,
*தம்பசிட்டி - பருத்தித்துறை.*
T.P.No: 021 226 3625
(C/30218) (26-12-16)

## கார்த்திகேசு கணேசன் (தம்பிஐயா)

(புங்குடுதீவு முதலாம் வட்டாரம்)

புங்குடுதீவு, முதலாம் வட்டாரத்தைப் பிறப்பிடமாகக் கொண்டவரும் தற்போது இந்தியாவை வசிப்பிடமாகக் கொண்டவருமாகிய கார்த்திகேசு கணேசன் 15.09.2003 அன்று இந்தியாவில் காலமாகிவிட்டார்.

அன்னார் காலஞ்சென்ற திரு.திருமதி கார்த்திகேசு அவர்களின் புத்திர ரும் தனலெட்சுமியின் அன்புக் கணவரும் மற்றும் காலஞ்சென்ற திருச்செல் வம் மற்றும் சிவராமன் பொன்னம்மா, கனகேஸ்வரி ஆகியோரின் அன்புச் சகோ தரரும் செல்வநாயகம் (டென்மார்க்), புவனேஸ்வரி, சிவயோகம், லலிதா (லண்டன்) ஆகியோரின் அன்பு மைத்துனரும் ஜெயக்குமார் (நோர்வே), நந்த குமார் (ஜேர்மனி), லோககுமார் (நோர்வே), விஜயகுமார், சந்திரகுமார் ஜெயந்தி, வாணி, கார்த்திகா ஆகியோரின் அன்புத் தந்தையும் பிறேமா, ராகினி, ரமேஸ், உதயகுமார் ஆகியோரின் மாமனாரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (18.09.2003) வியாழக்கிழமை பிற்பகல் 2 மணியளவில் இந்தியாவில் (சென்னை) நடைபெறும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*INDIA T.P No.: 00914432671046*
(22691) (12-16-31)

தகவல்:
ஜெயக்குமார் (ஜெயம்) -
மூத்தமகன்.

## திருமதி விஜெயரட்ணம் சத்தியபாமா

மயிலணி, சுன்னாகத்தைப் பிறப்பிடமாகவும், வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி விஜெயரட்ணம் சத்தியபாமா அவர்கள் நேற்று (16-09-2003) செவ்வாய்க் கிழமை காலமானார்.

அன்னார் அப்பையா விஜெயரட்ணத்தின் (அப்பையா கடை உரிமை யாளர்) அன்பு மனைவியும் நல்லதம்பி - சின்னம்மாவின் பாசமிகு மகளும் அப்பையா - இராசம்மாவின் பாசமிகு மருமகளும் பிரசாந்தன், சதீஸ், கேச வன் ஆகியோரின் அன்புத் தாயாரும் நாகேந்திரம் (இ.போ.ச.), இந்திரன், சூரிய குமார (கனடா), கருணாகரன், சரோஜினிதேவி ஆகியோரின் அன்புச் சகோ தரியும் இராசமலர், தர்மரட்ணம், ரஞ்சினி, ஜெயரட்ணம், குணரட்ணம் ஆகி யோரின் மைத்துனியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (17-09-2003) புதன்கிழமை முற்பகல் 11மணியளவில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக சுன்னாகம் கொத்தியாலடி இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*மயிலணி,*
*சுன்னாகம்.* (22683) (12-16-31)

தகவல்:
அ. விஜெயரட்ணம்
(கணவர்).

## செல்லப்பா பஞ்சலிங்கம்

(இளைப்பாறிய பிரதம இலிகிதர், ஆற்றுப்பள்ளத்தாக்கு சபை RVDB)

உரும்பிராயைப் பிறப்பிடமாகவும், (6, Lavender Avenue, Worcester Park, Surrey, London, U.K. KT48RR, Tel. 02083373769) லண்டனை வசிப்பிடமாகவும் கொண்ட செல்லப்பா பஞ்சலிங்கம் அவர்கள் 12-09-2003 வெள்ளிக்கிழமை சிவபதமடைந்துவிட்டார்.

அன்னார் காலஞ்சென்ற அருணாசலம் செல்லப்பா - இலட்சுமிப்பிள்ளை தம்பதிகளின் மூத்த மகனும் காலஞ்சென்ற தம்பிஐயா - ஜீவரத்தினம் தம்பதி களின் அன்பு மருமகனும் திருமதி இந்திரவதியின் (லண்டன்) பாசமிகு கண வரும் அ.செ.ப.கிருபாகரன் (லண்டன்), திருமதி துளசி (லண்டன்) ஆகி யோரின் பாசமிகு தந்தையும் திருமதி கி.சாந்தி (லண்டன்), இ.இரட்ண குமார் (லண்டன்) ஆகியோரின் அன்பு மாமனாரும் செல்வி இ.ஜானுகா (லண்டன்), செல்வன் இ.கௌதம் (லண்டன்), செல்வன் கி.பிரேதோன் (லண்டன்), செல்வி கி.வினிதா (லண்டன்), செல்வி கி.நெயலா (லண்டன்) ஆகியோ ரின் அன்புப் பேரனும் திருமதி பொன்மணி செல்வநாயகம், திருமதி சோதி மணி சச்சிதானந்தன், திருமதி சற்குணமணி இராஜலிங்கம், செ.தனபால சிங்கம், திருமதி குணமணி பத்மநாதன் ஆகியோரின் அன்புச் சகோதர ருமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் லண்டனிலுள்ள அவரது இல்லத்தில் நாளை (18-09-2003) வியாழக்கிழமை காலை 8.30மணிக்கு நடைபெற்று, காலை 11.00 மணிக்கு இறுதி ஊர்வலம் ஆரம்பமாகி காலை 11.30 மணிக்கு லண்டனிலுள்ள இந்துமயானத்தில் பூதவுடல் தகனஞ்செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
த.மகாசிவம்
(மைத்துனர்)
43, தக்கியா வீதி,
திருகோணமலை,
இலங்கை.

திருமதி இந்திரவதி பஞ்சலிங்கம் (மனைவி)
திரு. அ.செ.ப கிருபாகரன் (மகன்)
திருமதி துளசி இரட்ணகுமார் (மகள்)

(C-30220) (12-16-31)

# கண்காணிப்பு....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இக்குழுவினர் கிளிநொச்சியில் உள்ள சமாதானச் செயலகத்தில் சு.ப.தமிழ்ச்செல்வனைச் சந்தித்தனர். பிற்பகல் 4மணிமுதல் சுமார் 90 நிமிடங்கள் தொடர்ந்த இப்பேச்சில் புலிகளின் சமாதானச் செயலகச் செயலாளர் புலித்தேவன் மற்றும் ஜோர்ஜ் ஆகியோரும் கலந்துகொண்டனர்.

நேற்றைய கலந்துரையாடலில் யுத்தநிறுத்த நடைமுறைகள் மற்றும் மீறல்கள் பற்றிய உறுதியற்ற குற்றச்சாட்டுகள், கண்காணிப்புக் குழுவினருக்கும் விடுதலைப் புலிகளுக்குமிடையே கால ஒழுங்கில் சந்திப்புகளையும் மாதாந்த மாவட்டச் சந்திப்புக்களையும் மேற்கொள்வது ஆகியவை பற்றியும் ஆராயப்பட்டதாக அறியமுடிகிறது.

இப்பேச்சின்போது தமிழீழ விடுதலைப் புலிகளுக்கும் அரசுக்குமுள்ள பல்வேறு விடயங்கள் தொடர்பாக கலந்துரையாடியதாகவும் -

இது ஆக்கபூர்வமான சந்திப்பாக அமைந்ததெனவும் - பேச்சின் பின்னர் ரெலிவ்சன் செய்தியாளர்களிடம் தெரிவித்தார். திருமலை குரங்குபாஞ்சான் முகாம் பற்றிப் பேசப்பட்டபோதும் எவ்வித முடிவும் வரவில்லை என்றும் அவர் குறிப்பிட்டார்.

யுத்தநிறுத்த ஒப்பந்தத்திற்குப் பின் கடற்படையினர் நெடுந்தீவில் முகாம் அமைப்பது குறித்து கண்காணிப்புக்குழு ஏன் நடவடிக்கை எடுக்கவில்லை என செய்தியாளர் கேட்டதற்கு அது தொடர்பாக தாம் ஆராய்ந்து வருவதாக ரெலிவ்சன் கூறினார்.

• இச்சந்திப்பின் பின்னர் அரசியல் துறைப் பொறுப்பாளர் சு.ப.தமிழ்ச்செல்வன் செய்தியாளர்களிடம் பேசியபோது தெரிவித்ததாவது:-

இன்றைய சந்திப்பில் கண்காணிப்புக் குழுவினருடனான சந்திப்பு மிகவும் பிரயோசனமாக இருந்தது. தற்போது ஏற்படுத்திக்கொண்டிருக்கிற தவறான சர்ச்சைகள், உண்மைக்குப் புறம்பான செய்திகள் தொடர்பாக எமது தரப்பு நியாயப்பாடுகளையும் பொதுவான நிலைப்பாடுகளையும் தெளிவுபடுத்தியுள்ளோம். கண்காணிப்புக்குழுத் தலைவரும் இதனைப் புரிந்துகொண்டிருக்கிறார். இனிமேல் அவர்களுடைய நடவடிக்கையில் தெளிவான பார்வை இருக்குமென நம்புகிறோம்.

பொதுவாகவே யுத்தநிறுத்த உடன்படிக்கையில் படைத்தரப்பால் நடைமுறைப்படுத்தப்படவேண்டிய நடைமுறைகள் நடைமுறைப்படுத்தப்படாததால் மக்களுக்கு நெருக்கு வாரங்களும் நெருக்கடிகளும் தொடர்ந்து கொண்டிருப்பதை தெளிவாகச் சுட்டிக் காட்டியுள்ளோம் என்றார். (ஒ-9)

## வவுனியா...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

பகுதியில் இந்த எலும்புக்கூட்டுத் தொகுதி காணப்பட்டது. இதனைக் கண்ட பொதுமக்கள் தெரிவித்த தகவலையடுத்து பொலீஸார் எலும்புக் கூட்டுத் தொகுதியையும், அங்கு காணப்பட்ட உடைகள் மற்றும் பாதணிகளின் எச்சங்களையும் மீட்டனர்.

கைப்பற்றப்பட்டவற்றை பரிசோதனைககு உட்படுத்தியுள்ளதாக பொலீஸார் தெரிவித்தனர். (ஒ-164)

## காங்கேசன்துறை...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

தொடர்பான விசாரணையின் முடிவில் புதுக்கோட்டையைச் சேர்ந்த படகோட்டியான சிதம்பரம் சந்திரன் என்பவரை இரண்டு வாரங்கள் விளக்கமறியலில் வைக்குமாறும் -

மற்றைய நால்வரையும் இந்தியக் கடற்படையினர் ஊடாக இந்தியாவுக்கு அனுப்பிவிடும்படியும் - நீதிவான் திருமதி சரோஜினி இளங்கோவன் உத்தரவிட்டார்.

காங்கேசன்துறைக் கடற்பரப்பில் அத்துமீறி நுழைந்த இந்திய மீனவர்களை கடற்படையினர் பிடித்த சம்பவம் சுமார் ஒரு மாதகாலத்தின் பின் மண்டும் இடம்பெற்றுள்ளதாகக் கூறப்படுகிறது. (ஒ-3)

## பாதை...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

ஒன்றில் அவர் அதிகாலைவேளை மருத்துவமனைக்கு எடுத்துவரப்பட்டார். அப்போது முகமாலையில் பாதை திறக்கப்படாததால் வாகனத்தில் காத்திருக்க நேரிட்டது.

அவ்வேளை, அவர் ஆண்குழந்தையைப் பிரசவித்தார். அதன்பின்னர் காலை 7 மணிக்கு பாதை திறக்கப்பட்டதும், சிசுவும் தாயும் சாவகச்சேரி ஆஸ்பத்திரிக்கு எடுத்துவரப்பட்டனர். அங்கு நஞ்சுக்கொடி அகற்றப்பட்டதுடன், சிசுவும் கழுவப்பட்டது.

சமாதானச் சூழ்நிலை நிலவுவதாகக் கூறப்படுகின்ற தற்போதைய காலகட்டத்திலும் தமிழ் மக்களுக்கு நேரும் அவலங்களில் இதுவும் ஒன்றென சம்பவத்தின்போது உடனிருந்தவர்கள் கவலை தெரிவித்தனர். (ஒ-117)

## கனேடியத் தூதர் வன்னி பயணம்

கொழும்பு,செப்.17

இலங்கைக்கான கனடா தூதுவர் நாளை விடுதலைப் புலிகளின் அரசியல்துறைப் பொறுப்பாளர் சு.ப.தமிழ்ச்செல்வனை கிளிநொச்சியில் சந்தித்துப் பேச்சு நடத்துவார்.

சமாதானப் பேச்சுக்களை மீண்டும் தொடரவேண்டும் என்றும் இருதரப்பினரும் விட்டுக்கொடுத்து நிரந்தர சமாதானம் ஏற்பட ஆவன செய்ய வேண்டுமென்றும் கனடா தூதுவர் புலிகளிடம் வலியுறுத்துவார் என்று தெரிவிக்கப்படுகின்றது. (ஒ)

## தமிழீழ...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இன்று மானிப்பாய், தெல்லிப்பழை, சங்கானை, காரைநகர், வேலணை ஆகிய உதவி அரச அதிபர் பிரிவுகளைச் சேர்ந்தவர்களுக்கும் -

நாளை வியாழக்கிழமை கரவெட்டி, பருத்தித்துறை, சாவகச்சேரி பச்சிலைப்பள்ளி ஆகிய உதவி அரச அதிபர் பிரிவுகளைச் சேர்ந்தவர்களுக்கும் -

தினமும் காலை 8மணி முதல் பிற்பகல் 4மணி வரை மீட்பு நிதிக் கடன் மீளளிக்கப்படும்.

இதேசமயம் வன்னிப் பிரதேசத்தைச் சேர்ந்தவர்களுக்கு எதிர்வரும் 20 மற்றும் 21ஆம் திகதி ஏற்கனவே அறிவிக்கப்பட்டபடி மீட்பு நிதிக்கடன் மீளளிக்கப்படவுள்ளது. (ஒ-5-9)

## நலன்புரி நிலையத்தில் கொட்டகை அமைக்கும் பணிக்குத் தடை

யாழ்ப்பாணம்,செப்.17

அகதிகளுக்கான ஐ.நா.தூதரகம், இடம்பெயர்ந்தோருக்காக மேற்கொண்டு வரும் தற்காலிகக் கொட்டகைகள் அமைக்கும் நடவடிக்கை இடம்பெயர்ந்தோா நலன்புரிச் சங்க சமாசத்தினால் தடுத்து நிறுத்தப்பட்டுள்ளதாகக் கூறப்படுகிறது.

உரும்பிராய் கிருஷ்ணன் கோவிலுக்கு அருகில் உள்ள நலன்புரி நிலையத்தில் மேற்கொள்ளப்பட்ட பணிகளே தடுத்து நிறுத்தப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டது. (ஒ-86)

## பிக்குகள்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

தில் கலந்துகொண்டு, நாட்டைத் துண்டாடமுனையும் இவ்வரசின் நடவடிக்கைகளைக் கண்டிப்பர் என்று தேசிய பிக்குகள் முன்னணியின் பதுளை மாவட்ட ஏற்பாட்டாளர் தெரிவித்தார். (ஒ)


புதிய வீடியோ CD வெளியீடு
தனுஷ், சாயாசிங்
திருடா திருடி
சக்ஸஸ்
பிளாஸ் சீடி ஹவுஸ்,
640, ஆஸ்பத்திரி வீதி,
யாழ்ப்பாணம். T.P. 077-162349
(22609)

புதிய வீடியோ CD வெளியீடு
'காதல் கொண்டேன்' புகழ்
தனுஸ் நடித்த
திருடா திருடி
நிதர்ஷன் வீடியோ,
மயிலங்காடு. T.P. 0777-178155

எமது — — — — — — —
புதிய வீடியோ CD வெளியீடு
திருடா திருடி
சக்ஸஸ்
புதிய படபோஸ்டர்களும் விற்பனைக்குண்டு
விஷ்ணு வீடியோ, கோண்டாவில்.
சோலை வீடியோ, நெல்லியடி.


GROUP CLASSES
BY:VAKEESAN
ஒவ்வொரு நாளும்
1.00-2.30 p.m.(பு.நே.)
ஆரம்பம்: 19.09.2003 வெள்ளி
இடம்: 188,இராமநாதன் வீதி,
திருநெல்வேலி.
(பல்கலைக்கழகம் முன்பாக)
(மீள் பரீட்சார்த்திகளிற்கு மட்டும்)
★ சுதுமலை வடக்கு,
மானிப்பாயில் விரைவில்
துரித மீட்டல் & வினாவிடை
ஆரம்பமாக உள்ளது!
தொடர்பு: 071 2386450

கணக்கீடு
திரு.பாலவாசன்
B.B.A. (F.M.Spl.)
A/L 2004
PAPER CLASS
Tue.,Thur. - 3- 4 p.m.
ஆரம்பம்:
18.09.2003-Thu. 3 p.m.
விக்னா கல்வி நிறுவனம்

MCS MCS MCS MCS MCS MCS MCS MCS MCS
324,பலாலிவீதி, யாழ்ப்பாணம் (பரமேஸ்வராச்சந்தி அருகே, மேல்மாடியில்)
இலவசக்கணனிப்பயிற்சி
ஐ.நா. அபிவிருத்தித் திட்டத்தின் கீழ் அரச நிறுவனங்களை கணனிமயப்படுத்துவதில் பெரும்பங்காற்றிய எமது நிறுவனத்தினர் விசேட கணனிப்பயிற்சித்திட்டம் ஒன்றை முன்வைத்துள்ளார்கள்
பதிவுகள் 19.09.2003 இற்கு முன் நேரில்
MCS

இந்திய சாஸ்திரியார் வருகை

முதன்முறையாக யாழ்ப்பாணப் புண்ணியபூமிக்கு வருகைதந்துள்ளார்
பரம்பரை ஜோதிடர் புகழ்பெற்ற
S.N.குமாரசாமி
கைரேகை, ஜாதகம், எண்கணிதம் மற்றும் திருமணத் தடை, தொழில் முன்னேற்றம் இன்மை, கல்வித் தடையா? குழந்தைப் பாக்கியம், தீராத வியாதியா? மற்றும் எந்தப் பிரச்சினைகளுக்கும் நேரில் சந்திக்கவும்.
(காலை 8மணிமுதல் மாலை 5மணிவரை)
ஸ்ரான்லி லொட்ஜ்
இல.711, கே.கே.எஸ். வீதி, யாழ்ப்பாணம்.
T.P. : 077-6080660, 021-2226188
(யாழ்.இந்துக் கல்லூரிக்கு அண்மையில்)
(29-12-18) (21933)







மீண்டும் போலியோ சொட்டு மருந்து
இம்முறை பத்து வயதுக்குட்பட்ட உங்கள்
பிள்ளைகள் அனைவருக்கும்...
20.09.2003 ஆம் திகதியை மறந்து விடாதீர்கள்!
Lend a Hand
PolioPlus
Rotary International


இப்பத்திரிகை நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேட்) நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதி, 361ஆம் இலக்கத்திலுள்ள அவர்களது பணிமனையில் 17.09.2003இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.